# கிராம நலம்

ஜூன்- 1968

வள்ளுவரின் ஈராயிரம்
விழா
1969ம் ஆண்டு ஜனவரி மாதத்தில்.






" வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து...."

ஜூன் — 10
(அமரரான நாள்)

தமிழக அரசாங்க
விடுமுறை


TRIPURA
MANIPUR

# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 | ஜூன் 1968 | நெல் 9

செய்திப் பேழை:

## தமிழகத்தின் தலைநகரில்
# முதலமைச்சர்கள் மாநாடு

சென்னையில் 1968 ஜூன் திங்கள் 11, 12 நாட்களில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள்—சமுதாய நலத் திட்டம், கூட்டுறவு பற்றிய மாநில முதல் அமைச்சர்கள் மாநாடு—வரலாற்றுச் சிறப்பு மிகுந்த மாநாடாகும்.

சென்னை நகர் வனப்பின் ஓர் அங்கமாகத் திகழும் ராஜாஜி மண்டபத்தில் கூடியது முதலமைச்சர்கள் மாநாடு. புதிய பொலிவும் வண்ண நிறைவும் பெற்றுத் திகழ்ந்த அந்த மாமண்டபம், காண்போரின் கருத்தை எல்லாம் கவர்ந்ததில் வியப்பேது?

ஜூன் திங்கள் 11-ம் நாள் காலை 10 மணிக்கு மாநாடு தொடங்கியது. முதல் நாள் மாநாட்டின் நோக்கம், சமுதாய வளர்ச்சித் திட்டங்களைப்பற்றியும், அவற்றின் எதிர்கால ஆக்கத் திட்டங்களைப் பற்றியும் ஆராய்வதாகும்.

மாநாட்டுக்கு வந்திருந்த மேதகு தமிழக ஆளுநர், மத்திய உணவு அமைச்சர் திரு ஜகஜீவன்ராம், மத்திய அரசின் சமுதாய நல ராஜாங்க அமைச்சர் திரு குருபாதசாமி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், ஏனைய மாநில முதலமைச்சர்கள், சமுதாய நல அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோரை மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி வரவேற்றார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழகத்தில் புதிய அரசு 1967–ம் ஆண்டு மார்ச் திங்களில் பொறுப்பை ஏற்றபோது, சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நடைமுறை பற்றி, பொது மக்கள் கூறிவந்த பல்வேறு குறைபாடுகளைக் கவனிக்க நேரிட்டது. சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களுக்காக 10 கோடி ரூபாய் செலவிடப்படுவதாகவும், அந்தத் தொகையில் 6 கோடி ரூபாய் அலுவலர்களுக்காக செலவிடப்படுவதாகக் கூறப்பட்டது. எனவே, சமுதாய நலத் திட்டங்களைப் பற்றி கவனமாக ஆராயவேண்டிய நிலை எங்களுக்கு ஏற்பட்டது.

எதிர்ப்பக்கம் : சமுதாய நலத்திட்டம், கூட்டுறவு பற்றிய மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், தமிழக முதலமைச்சர் அவர்கள் உரை நிகழ்த்துவதை, எதிர்ப்பக்கத்தில் காணலாம்.
←

தமிழகத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் வாயிலாக 1967—68-ம் ஆண்டில் கிராமப்புறங்களிலே செலவான தொகை 55 கோடியே 79 லட்சம் ரூபாய் என்று நாங்கள் மதிப்பிட்டோம். பல்வேறு திட்டங்களுக்கு செலவு விவரம் வருமாறு:—

| | | (ரூபாய் கோடி கணக்கில்) |
|---|---|---|
| 1. | தொடக்கக்கல்வி மானியம் | 21.23 |
| 2, | ஈட்டு மானியம் .. | 10.06 |
| 3. | பராமரிப்பு, வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கான மானியம் .. | 17.70 |
| 4. | இதர பல்வகை மானியங்கள் .. | 1.10 |
| 5. | அலுவலர்களுக்கான செலவு (அரசு, ஊராட்சி ஒன்றியங்கள்) .. | 5.70 |
| | மொத்தம் .. | 55.79 |

இந்த 55 கோடியே 79 லட்ச ரூபாயில், ஊராட்சி ஒன்றியங்கள் தாமாகவே திரட்டிக்கொள்கின்ற தொகை 8 கோடியே 60 லட்சம் ரூபாயாகும்.

மாநில அரசின் நிதிநிலை அறிக்கையின் படி, 1967—68-ம் ஆண்டின் மொத்த செலவு 217 கோடியே 19 லட்ச ரூபாயாகும். இந்தப் புள்ளி விவரங்களை நன்கு ஆராய்ந்ததில், நிர்வாகச் செலவுக்காக ஆகும் 5 கோடியே 70 லட்சம் ரூபாய் நியாயமானதென்றே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

உள்ளூர் வளர்ச்சிக்கான வேலைத் திட்டங்கள் (Local Development Works) பெருகிய வண்ணம் இருக்கின்றன. வரவினங்களின் பற்றுக்குறையாலும், மத்திய அரசின் மானியங்கள் குறைவாக இருப்பதாலும், இத்தேவைகளை நாங்கள் நிறைவேற்ற இயலவில்லை. பன்னெடுங்காலமாக கிராம மக்கள், தங்களுடைய வளர்ச்சியை எதிர்நோக்கி காத்திருக்கிறார்கள். அவர்களின் தேவைகளை நாம் நிறைவேற்றாவிடில், அவர்கள் பொறுமையை இழந்துவிடுவார்கள். எனவே, நம்முடைய நிதிநிலை திட்டத்தில் கிராம வளர்ச்சிக்கென அதிகமான தொகையை நாம் ஒதுக்க வேண்டுமென்று இங்கே கூடியுள்ள முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் ஆகியோர்களிடம் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். கிராம வளர்ச்சிக்கென, மத்திய அரசும் அதிகமான நிதிகளை ஒதுக்க வேண்டும்.

## ஊழையும் உப்பக்கம் காண்போ

உள்ளூரிலேயே நன்கொடைகளை பெருமளவில் திரட்டக்கூடிய வாய்ப்புகளைப் பற்றியும் நாம் ஆராய வேண்டும். ''சீரணி'' என அழைக்கப்பெறும், மக்கள் அணி ஒன்றை, தமிழக முதலமைச்சர் நிறுவியுள்ளார். இந்தச் ''சீரணி'' தொடக்கத்தில் ஒரு பரபரப்பை உண்டாக்கியது. இது ஒரு சேனை அல்ல. இதற்கு அரசியல் முத்திரையோ, அல்லது வேறு எந்தச் சார்போ இல்லை. ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும், 50 பேர் வீதம் ஒவ்வொரு மாவட்டத்திலும், 1000 பேருக்கு குறையாத தொண்டர்கள் தாமாக முன் வந்து உழைப்பு அல்லது பணம் மற்றும் பொருள்களை உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்குகிறார்கள். பள்ளிகளை கட்டி, சாலைகளை அமைத்து, அல்லது கால்வாய்களை தூர் எடுத்துச் சீர்படுத்தி தொண்டாற்றுகின்றார்கள். மருத்துவர்கள் பொறியாளர்கள், ஆசிரியர்கள், தச்சர்கள் செங்கல் தயாரிப்போர், கொத்து வேலை செய்வோர் மற்றும் இதர தொழில் நுட்பம் அறிந்த உழைப்பாளர்கள் இச்சீரணியில் சேர்ந்துள்ளனர். இச்சீரணித் தொண்டர்களால் செயலாற்றப்படுகின்ற பணிகளால் ஏற்படுகின்ற ஆக்க வேலைகளின் காரணமாக, அரசாங்கச் செலவின் அளவு குறைகிறது. இது பற்றி அச்சடிக்கப்பட்ட சிறு வெளியீடு ஒன்று, பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்திற்கு சிறப்பான வரவேற்பு கிடைத்துள்ளது.

கிராம வளர்ச்சியில் அடுத்த கட்டமாக கவனம் செலுத்தியது வேளாண்மை முன்னேற்றமாகும். ஊராட்சி ஒன்றியங்

களுக்கு, கடந்த ஒன்பது மாதங்களாக நாங்கள் அளிக்க ஒப்புக்கொண்டவை வருமாறு:

| | |
|---|---|
| இயந்திரக் கலப்பைகள் | 559 |
| தெளிப்பான்கள் | 2059 |
| சமுதாயக் கிணறுகள் | 1059 |
| சிறு கலப்பைகள் | 1059 |
| காய்கறித் தோட்டம் | 5059 |

நமது அன்பிற்குரிய முதலமைச்சரின் பிறந்த நாளான 15–9–1968-க்குள், மேற்கண்ட குறியீட்டு அளவுகள் அனைத்தும் நிறைவேறி, உழவர்களுக்கு நற்பலன் கிடைக்கும்.

'ஊழையும் உப்பக்கம் காண்பவர்
உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்'

என்பது தமிழ் மறை.

கிராமங்களை மேம்பாட்டைச் செய்யும் தாராள முயற்சியில் ஈடுபட்டுள்ள நாம் வெற்றியடைவது உறுதியாகும்.

**மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங்**

மாநாட்டை தொடங்கி வைத்த மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் நாம் ஆற்றியுள்ள சாதனையின் பட்டியலை எடுத்துரைத்தார்.

மேதகு ஆளுநர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:–

''கிராமங்களின் பரபரப்பையும் மக்கள் தொகையையும் கருதி, கிராம வளர்ச்சித் திட்டங்கள் உருவாகவும், ஒருங்கிணைந்த முறையில் அமைவதும் அவசியமாகும். தமிழகத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 500-க்கு மேல் மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு சிற்றூரிலும் குடிநீர், பள்ளி, மருத்துவ வசதி, சாலை வசதிகள் செய்து தரப்படும் என்றும் நம்புகிறேன். இதற்குப் பெருமளவு பணம் செலவானாலும், ஒதுக்கத் தயங்கக் கூடாது.

வேளாண்மைக்குத் தேவையான கடன் வசதிகள், உரம் முதலியன உரிய நேரத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்வது ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாகும்''.

''குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரத்திலும் ஊராட்சிகளுக்கு நிரம்ப பங்குண்டு'' என்று ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

''சமுதாய வளர்ச்சித் திட்டம் வெற்றி பெற, தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி பெற்ற நல்ல மேற்பார்வை அதிகாரிகளை நியமித்தல் வேண்டும் என்றார் கவர்னர். மகாராஷ்டிரம், தமிழகம், குஜராத் ஆகிய மாநிலங்களில் ஊராட்சி முறை வெற்றி பெறக் காரணம், தீவிர கவனம் செலுத்தியதனால்தான். 500-க்கு மேற்பட்ட மக்கள் வாழும் கிராமத்தில் 4-வது திட்டக் காலத்தில் அதிக குடிதண்ணீர் வசதியும் சாலை வசதியும் கிடைக்கும். நம் நாட்டு தலைவர்கள் கனவு கண்டு வந்த சமுதாயத்தை ஏற்படுத்த கூட்டுறவின் பணி முக்கியம் வாய்ந்தது'' என்று ஆளுநர் வலியுறுத்தினர்.

## சமுதாயம் செழிக்க...

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

''கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு சமுதாய நலத் திட்டமும் கூட்டுறவுத் திட்டங்களும் மிக முக்கியமானவை. இத்துறையில் கடந்த 15, 20 ஆண்டுகளில் நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம். பணியாற்றினோம்.

ஆனால் இப்பொழுது அந்தத் திட்டங்கள் நேரிய முறையில் செயல்படுகின்றனவா? நாம் எதிர்பார்த்த லட்சியம் ஈடேறுகிறதா? வேலை முறைகளில் மாற்றம் ஏதேனும் தேவையா என்பதையும் ஆராயும் கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இது பற்றி நன்கு தீவிரமாக சிந்தித்து முடிவு எடுத்து செயல்பட வேண்டும். அதோடு எதிர்காலத்தில் இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், எந்த அடிப்படையில் எந்த இலட்சியத்தோடு இயங்கவேண்டும் என்பதை ஆராய்வது பொருத்தமானது.

கிராம வளர்ச்சித் திட்டங்களில், பொறுப்பு அதிகாரிகளுக்கா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கா என்ற பிரச்னையில் தொடக்க காலத்திலே இருந்து முரண்பாடான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குத்

தான் அதிகாரம் இருக்கவேண்டும் என்று ஒருபுறம் கேட்கப்படுகிறது.

கிராம வளர்ச்சித் திட்டங்களுக்காக கோடிக்கணக்கில் பணம் செலவிடப்படுவதால் அவ்வாறு செலவிடப்பட்ட பணத்திற்கு சட்ட மன்றத்தில் பதில் கூற வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கே இருப்பதால், இதில் அதிகாரிகளுக்கே அதிக அதிகாரம் இருக்கவேண்டும் என்று இன்னொரு தரப்பில் கூறப்படுகிறது.

ஆகவே இவ்விரண்டுக்கும் வழி காணும் வகையில் கிராமப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் உரிய வகையில் செலவிடப்பட்டு, எதிர்பார்க்கும் பலன் கிடைக்கும் வகையில் ஒரு மாற்றுத் திட்டத்தைக் கண்டுபிடிப்பது நலம். இதற்கான வழிகளை தமிழக அரசு மிகுந்த கவனத்துடன் ஆராய்ந்து கொண்டு இருக்கிறது.

கடந்த ஆண்டு தமிழகத்தில் புதிய அரசு பதவி ஏற்றவுடன், இத்துறையில் மிகுதியாக பல பதவிகள் இருப்பதாக நிபுணர்கள் கூறினர். ஒருசமயம் அப்பதவிகளை குறைக்கலாமா என்று அரசு யோசித்தது. அப்படி செய்தால், பெருத்த அளவு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்ற காரணத்தால் அதிக அளவில் உள்ளவர்களை மேலும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான வழி வகைகளை அரசு ஆராய்ந்து வருகிறது. அதாவது அவர்களுக்கு அதிக வேலை தரப்பட்டு மிகுந்த பயனுடையவர்களாக ஆக்கப்படுவார்கள்.

ஊராட்சி வளர்ச்சி முறை திட்டங்களில் இன்னொரு முக்கிய பிரச்னையாக இருப்பது மூன்று மட்டங்களில் ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் இயங்குவதா அல்லது வேறு முறை வேண்டுமா என்பது. மூன்று மட்டங்கள் முறையில் தான் தமிழ் நாட்டில் ஊராட்சி வளர்ச்சி முறை இயங்குகிறது. அதையொட்டி, மாவட்டந்தோறும் மாவட்ட வளர்ச்சி மன்றம் என்கிற அமைப்பு உள்ளது. வேறு மாநிலங்களில் இதை 'ஜில்லா பரீஷத்' என்று அழைக்கிறார்கள். இந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு அரசாங்க அதிகாரியான கலெக்டர் தலைமை வகிப்பதா அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி தலைமை வகிக்க வேண்டுமா என்பது பற்றியும் நீண்டகாலமாக சர்ச்சை இருந்துவருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிதான் தலைமைவகிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் இப்பொழுது வலுப்பட்டு வருகிறது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி தலைமை வகித்தால், மாவட்டத்திலுள்ள ஏனைய மாவட்ட அதிகாரிகளின் பொறுப்புகளையும் தொடர்புகளையும் வளர்ச்சித் திட்டங்களுடன் இணைப்பதில் இடையூறு நிகழலாம். ஆகவே இதைப் பற்றியும் ஆராய்ந்து முடிவு காண்பது அவசியமாகிறது.

தமிழகத்தில்ஏறத்தாழ 12,000 ஊராட்சிகள் உள்ளன. தங்களுடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ளுமளவில் நிதி வசதி பெற்றவையல்ல அவை. விளக்கு வசதி, துப்புரவு ஆகியவற்றிற்குகூட போதிய அளவு பணம் ஒதுக்க முடியவில்லை என்பது கண்கூடு. இந்நிலையை எப்படி நிறைவு செய்யலாம்? செலவைக் குறைத்தா அல்லது வருமானத்தை அதிகரித்தா என்பதையும் ஆராய்வது அவசியமாகும். ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஓர் எழுத்தரை நியமித்தாலும் ஆண்டு தோறும் அரசுக்கு ஆகும் செலவு 45 லட்சம் ஆகும்.

கிராம வளர்ச்சிப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் பணம் போதாது. ஒதுக்கப்பட்ட பணத்தைக்கொண்டு கிராமப் பகுதிகளில் குடிநீர், விளக்கு வசதி, சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்துகொள்ள முடியவில்லை. குறிப்பாக கிராம, குடி தண்ணீர் திட்டத்திற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு 15,000 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. இது சிறிதளவுகூட போதாது. இந்த 15,000 ரூபாயில் ஆண்டிற்கு 2 கிணறுகளைத் தான் வெட்ட முடியும். இது போதுமானதென்று சொல்ல எவரும் துணிய மாட்டார்கள்,

இந்த வேகத்தில் செல்வோமானல், கிராம மக்களுடைய அத்தியாவசியத் தேவையான குடி நீர், விளக்கு வசதி, சுகாதார வசதி போன்றவற்றை

[16-ம் பக்கம் பார்க்க]




## கூட்டுறவுகளின் மூலம் விற்பனை வாய்ப்புக்களை அவனுக்குதவுகிறது ஸ்டேட் பாங்க்

இன்று பொன் கொழிக்கும் அவனுடைய அறுவடைக்குக் காத்துநிற்கிறது சந்தை. காரணம், கூட்டுறவுகளின் மூலம் சமயத்திலே கைகொடுக்க முன்வந்த ஸ்டேட் பாங்கின் பேருதவியே. 2200 கிளைகளுக்கு மேல் உடைய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும் அதன் துணையகங்களும் அவை மூலம் ஆண்டுதோறும் கூட்டுறவு பாங்குகளுக்கு மட்டுமின்றி, விற்பனையிடல் மற்றும் பிராஸஸிங் கழகங்கள், சர்க்கரை ஆலைகள், தொழில்துறைக் கூட்டுறவுகள், நுகர்வுப் பண்டக் கூட்டுறவு மண்டிகள் ஆகியவை போன்ற கூட்டுறவுகளுக்கே நேரிடையாக நிதி உதவியும் பிற உதவிகளும் வழங்குகின்றன.

## சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

**சிறப்புக் கட்டுரை :**

# "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து..."

திரு மு. ரா. பெருமாள் முதலியார், எம்.ஏ., எல்.டி., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்.

திருவள்ளுவர் 1999 ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர். இந்த ஆண்டு தை மாதத்தில் அவருடைய இரண்டாயிரம் ஆண்டுவிழா நடைபெறவிருக்கிறது. அவர் எழுதியருளிய திருக்குறளை உலக அறிஞர் அனைவரும் பாராட்டுகின்றனர். அது பல மொழிகளில் பெயர்த்தெழுதப் பெற்றிருக்கிறது. அது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களையுடையது. அதனால் அது முப்பால் என்னும் பெயரையும் பெற்றுள்ளது. அது 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வோர் அதிகாரத்திலும் 10 பாக்கள் இருக்கின்றன. இந்தப் பாக்கள் குறள் வெண்பா வகையைச் சேர்ந்தவை. வெண்பா என்பது வெண்டளை யால் ஆனது என்பதையும் செப்பலோசையை உடையது என்பதையும் அனைவரும் அறிவர்.

### அறிஞர் அடையும் வியப்பு....

குறள் வெண்பாவில் ஏழு சீர்களேயிருக்கும். இந்த ஏழுசீர்களை வைத்துக்கொண்டு எத்தகைய அரிய கருத்துக்களை ஒவ்வொரு குறளிலும் வள்ளுவர் எழுதியிருக்கிறார் என்று எண்ணிப் பார்க்கும்போது, அறிஞர் அடைகின்ற வியப்புக்கு அளவேயில்லை.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்.

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும்.

அரசுத்துறைகளும், தனியார்துறை நிறுவனங்கள், நிலையங்கள், அமைப்புக்கள் ஆகியவைகளும் தங்களுக்குத் தேவையான அலுவலர்களைத் தெரிந்தெடுக்கும் நேரத்தில், மேலே காட்டிய இரண்டு குறள்களிலுமுள்ள வள்ளுவர் அறிவுரையை மனத்திற் கொள்வார்களானால் எவ்வளவு நன்மையுண்டாகும்; சிறப்புத் தகுதிகளையுடைய தனிமனிதர்கள் எத்தகையதொரு மனநிறைவை எய்துவர். சமுதாயமும் எந்தெந்த நிலையில் எந்தெந்தத் துறையில் என்னென்ன பயனை எய்த முடியுமோ அவ்வப்பயன் அனைத்தையும் முழு நிறைவுபெற்ற நிலையில் அடையுமன்றோ ?

இந்த இரண்டு குறள்களையும் நான் பள்ளிப் பருவத்திலேயே மனப்பாடஞ் செய்திருந்தேன். ஆனால், அவற்றின் பொருட்செறிவை அப்போது நான் அறியவில்லை. இப்போது வாழ்க்கையில் அடிபட்டு ஓரளவு முதிர்ச்சியுற்றிருக்கிற நிலையில், அக் குறட்பாக்களின் பொருளை நன்கு அறிகிறேன். மேலும், தமிழிலேயே குறளைத் தவிர ஏனைய பல நூல்களை இப்போது படித்திருக்கிறேன். ஆங்கிலத்திலும் பல சிறந்த

நூல்களைப் படித்திருக்கிறேன். ஏனைய மொழிகளிலுள்ள சிறந்த நூல்கள் பலவற்றை ஆங்கில மொழிபெயர்ப்பில் படித்திருக்கிறேன். படித்தவற்றைப் பற்றி ஓரளவு சிந்தித்தும் இருக்கிறேன். இன்றைக்கு எனக்கிருக்கும் நூலறிவு, பட்டறிவு, சிந்தனையாற்றல் ஆகியவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு இந்தக் குறட்பாக்களின் பொருளை நினைக்கும்போதெல்லாம் முன்பில்லாத வியப்பும் இறும்பூதும் எய்துகிறேன். அதனாற்றான் ''தீதற்றோர் உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே வள்ளுவர் வாய்மொழி மாண்பு'' என்று அந்தக்காலப் புலவரொருவர் பாடினார்.

**தமிழனின் பொற் காலம்**

வள்ளுவர் வாழ்ந்த காலம் தமிழகத்தின் சிறந்த காலம் என்று கூறலாம். அன்று தமிழக வணிகர்கள் மத்தியதரைக் கடல் நாடுகளுடனும் கிழக்கத்திய நாடுகளுடனும் பெருவாணிபம் நடத்தி வந்தார்கள், அதனால் அந்நாடுகளுக்கும் தமிழகத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது. அத் தொடர்பின் பயனாக, அறிஞர்களுடைய கருத்துக்களும் துய்க்கும் பொருள்களோடு சேர்ந்து ஏற்றுமதியும் இறக்குமதியும் ஆகியிருக்குமல்லவா? அவ்வாறு இறக்குமதியான கருத்துக்களில் சாக்கிரட்டிஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டல், கன்பியூசியஸ் ஆகியவர்களுடைய கருத்துக்களும் இருந்திருக்கும். அதுபோலவே மகத நாட்டைச் சேர்ந்த கௌத்தலியருடைய கருத்துக்களும் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கும். இதற்கெல்லாம் முன்னரே ஆரியமதக்கோட்பாடுகளும், சைனமதக் கோட்பாடுகளும், புத்தமதக் கோட்பாடுகளும் தமிழகத்திற்கு வந்துவிட்டன. ஆகவே, தமிழ் மக்களின் வாழ்க்கை முறையில் வேகமான மாறுதல்கள் நிகழ்ந்திருக்கும். அந்த வேகத்தின் காரணமாகத் தமிழ் மக்கள் மனத்தில் ஐயமும், குழப்பமும், ஓரளவு அச்சமும் தோன்றியிருக்கும்.

> அடுத்த ஆண்டில் (1969-ல்) திருவள்ளுவப் பெருந்தகையின் ஈராயிரம் ஆண்டுவிழா சிறப்பான முறையில் நடைபெற இருக்கிறது. திருக்குறள் உலகப் பொது மறை. தனி மனிதனின் நல்வாழ்வுக்கும் சமுதாய அறநெறிக்கும் உள்ளங்களின் இன்ப அன்பு வாழ்வுக்கும் அடிப்படையான கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டும் தனிப்பெருமை திருக்குறளுக்கு உண்டு. தமிழ் நாட்டில் தோன்றிய இச்சான்றோர் நினைவாக, இவ்வாண்டு ஜூன் 10-ம் நாள், தமிழக அரசு இதற்கென சிறப்பு விடுமுறை நாளாக அளித்தது.
>
> வாழ்க்கைக்குத் தேவையான, சமுதாய வளர்ச்சிக்கு ஊன்றுகோல்களாகத் திகழும் அடிப்படை ஒழுக்க நெறிகள் சிறந்த முறையில் திருக்குறளில் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. அவ்வகையில் திருக்குறளின் தனிச் சிறப்பியல்புகள் பற்றி ஆராய்கிறது இக்கட்டுரை. கட்டுரை ஆசிரியர் தமிழ்ப் பெரும் புலவர். தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர். அவர் கூறும் கருத்துக்கள் அனைவரின் இதயங்களிலே தேக்கி வைத்துக்கொள்ள வேண்டிய கருவூலங்களாகும்.
>
> —ஆசிரியர்

**வள்ளுவர் கண்ட சமுதாய நெறி**

இந்த நிலையில், கிறிஸ்து சகாப்தம் தோன்றுகின்ற நேரத்தில், முப்பது முப்பத்தைந்து வயதுடைய திருவள்ளுவர் தமிழ்த்தாய் செய்த தவத்தின் பயனாகத் திருமயிலையில் வாழ்ந்து வந்தார். தமிழ் மக்களுடைய தனித்தன்மை வாய்ந்த வாழ்க்கை முறையினையும், ஆரியம், சமணம், பௌத்தம், கிரேக்கம் முதலிய புதிய கருத்துக்கள் அந்த வாழ்க்கை முறையில் செய்து வந்த மாறுதல்களையும் பற்றி சிந்தித்துப் பார்த்தார். சிந்தனையின் பயனாகத் தெளிவு பிறந்தது. தம்முடைய மனக்கண்ணில் புதியதோர் எதிர்காலச் சமுதாயத்தைக் கண்டார். அந்தச் சமுதாயத்தில் தனி மனிதன் குணங்கள் எப்படியிருக்க வேண்டும், வாழ்க்கைத் துறைகள் பலவற்றிலும் ஈடுபடுவதற்கு அவனுக்கு எத்தகைய இயல்புகளும் திறன்களும் வேண்டும் என்பதையும் அவர் உணர்ந்தார். அதன்பின், அவர் வள்ளுவத்திற் காணும் மனிதனையும் சமுதாயத்தையும் படைத்தார். அந்த லட்சிய மனிதனையும் லட்சிய சமுதாயத்தையும் பற்றி அவர் சொல்லாத செய்தியில்லை. அதனாற்றான் ''எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்'' என்றொரு புலவர் வியந்துபாடினார். அந்த லட்சிய சமுதாயமும் மனிதனும் எதையெதைச் செய்யலாம் எதையெதைச் செய்யக் கூடாது என்பதையெல்லாம் ஐயந்திரிபுக்கிடமின்றி ஆணித்தரமாகக் கூறிவிட்டார். அவருக்கு எல்லாமே தெரிந்திருந்ததால்தான், அவ்

வளவு துணிவாக ஒவ்வொன்றையும் அறுதியிட்டுக் கூறினர். அதனாற்றான் "தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால் அறம் முதலியவற்றைத் திருவள்ளுவர் பாடியருளினார்" என்றொரு புலவர் போற்றுகிறார்.

### திருவள்ளுவரின் தனித் திறமை

இப்படி ஆணித்தரமாகச் சொல்வதற்கு ஏற்ற கருவியாக அமைந்தது குறட்பா. வள்ளுவர் சொல்லுகின்ற முறைக்கேற்ற யாப்பு வேறொன்றிருக்க முடியாது. ஆனால் பொதுவாக, குறட்பாக்களைத் தொடர்ந்து படித்தால், எவ்வளவு ஆர்வமுள்ளவரும் அலுத்துவிடுவர்.




ஆனால், வள்ளுவருடைய குறட்பாக்களைப் படிப்போர் யாருக்கும் அலுப்புத் தட்டுவதில்லை. அதற்குமாறாக அவர்கள் சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினிய அந்தப்பாக்களின் கவிச்சுவையில் ஆழ்ந்து தம்மை மறந்த பேரின்ப நிலையில் திளைக்கிறார்கள். "முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு" என்னும் குறளைப் படிக்கும் புலவர்கள் எத்தகைய பேரின்பத்தை எய்துவர். அதனாற்றான் வள்ளுவரைத் தவிர ஏனைய சிறந்த புலவர் எவரும் குறட்பாவில் தமது நூலை எழுத முயலவில்லை. குறட்பாவைக் கையாளுவதற்கு அவர் ஒருவரால்தான் முடிந்தது.

இத்தகைய குறட்பாக்கள் ஆயிரத்து முன்னூற்று முப்பதில் ஓர் இலட்சிய மனிதனையும் இலட்சிய சமுதாயத்தையும் படைத்தவர் எத்தகைய ஆற்றல் வாய்ந்தவராக இருந்திருக்க வேண்டும். உலகத்தின் நூறு சிறந்த அறிஞர்கள் ஒன்று சேர்ந்து நூறாண்டு முயன்றாலும் இந்தச் செயற்கரிய செயலைச் செய்திருக்க முடியாது. எனவே, இந்த உலகம் தோன்றிய நாள்முதல் வள்ளுவரைப் போல் வேறொருவர் பிறக்கவில்லை. திருக்குறளைப்போல் வேறொரு நூல் தோன்றவில்லை என்று அறிந்தோர் கூறுகின்றனர்.

### குறள்நெறி

திருக்குறளில் காணும் சமுதாயம் இலட்சிய சமுதாயம். எனவே, தமிழகத்தில் மட்டுமின்றி, உலகின் வேறெந்தப் பகுதியிலும் இதுவரையில் அத்தகைய சமுதாயம் இருந்ததில்லை. இனிமேலும் இருக்காது. மனிதர்கள் திருக்குறள் கூறும் வாழ்க்கை நெறியை இயன்ற வரையில் பின்பற்றுவதன் மூலம், அந்த லட்சிய சமுதாயமிருக்கும் திசையிற் சென்று கொண்டிருக்கலாம். மக்கட்பண்பின் வளர்ச்சிக்கு அஃதொன்றே வழி.

திருவள்ளுவர் தமிழகத்திற்கு மட்டுமின்றி உலக முழுதிற்குமே தமது நெறியை வகுத்தார். திருக்குறளில் எந்தப்பாட்டிலும் தமிழ்நாடு என்ற சொற்றொடரைக் காணோம். ஏனைய சிறந்த புலவர்களெலாம் தமிழ்நாட்டை, தமிழ்மொழியை, மூவேந்தரை, குறுநில மன்னரை, வள்ளல்களைப்பற்றிப் பாடினார்கள். ஆனால், வள்ளுவரோ நாட்டை, மொழியை, வேந்தை, அமைச்சை, படையைப் பற்றிப் பாடினார், வாலறிவனைப் பற்றிப் பாடினார், வகைப்பட்ட சமயங்களைப் பேசவில்லை, ஆகவே தமது குறளை எழுதும்போதே திருவள்ளுவர் அஃது உலக மக்கள் அனைவர்க்கும் எல்லா காலத்திலும், எல்லா நிலையிலும், எல்லாத் துறையிலும் பயன்படவேண்டுமென்று நினைத்து எழுதினார். அதனாற்றானே, "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதி பெருமிதத்துடன் பாடிப் பரவசமெய்தினான்,

---



# வள்ளுவர் காட்டும் வழி



திரு ந. பாண்டியன்

தமிழ் மாணவர் சமுதாயம், தாய் மொழிப் பற்று மிக்க சமுதாயமாக, தொண்டார்வம் கொண்ட சமுதாயமாக, ஆக்கப் பணிபுரியும் அடலேறுகள் கொண்ட பாசறையாக திகழ்வது கண்டு, நல்லிதயம் படைத்த அனைவரும் பேருவகை கொள்கின்றனர். தாய் மொழி மீது தமிழக மாணவர்கள் கொண்டுள்ள பற்று அன்னைத் தமிழ் மீது அவர்கள் கொண்டுள்ள பாசம் பற்பல தமிழ் விழாக்களை அவர்கள் எடுப்பதற்கு ஊன்றுகோலாக அமைவதில் வியப்பொன்றுமில்லை. [அண்மையில் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழா, இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இரு அமைச்சர்கள் கலந்து கொண்ட அவ்விழா பற்றி, பூரிப்புடன் இக்கட்டுரையில் எடுத்துக், கூறுகிறார், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி தமிழ் மன்றச் செயலாளர், திரு ந. பாண்டியன் அவர்கள்.

—ஆசிரியர்.]

செந்தமிழ் உள்ளுணர்வும் சிந்தித்துச் செயலாற்றும் சீரிளமைத் திறனும் கொண்ட மாணவர்களைப் பெற்ற ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில், 'பொங்கல் விழா' கல்லூரியின் பொது அரங்கில், தமிழ் மன்றத்தின் சார்பில் கொண்டாடப்பட்டது.

வண்ணக்கோலமிட்டு, வாடாத மலரிதழால் "நல்வரவு" அமைத்து எண்ணற்ற புலவர்களின் பண்ணெழுதி, வயங்கும் மலர்படைத்து, வாசனைப் பொருள் தூவி, வாழையிளங் கன்றுகளை வாசலிலே நிறுத்தி, புது வண்ணங் கொண்ட பொங்கல் பானை வைத்து, பூங்கரும்பு சாய்த்துக் கட்டி, மாவிலைத் தோரணங்கள் ஆட, மங்கள இசை முழங்க, எண்ணத்தையும், கண்களையும் கவரும் வகையில், மருத்துவ மாணவர்களும், மாணவியரும் பொது அரங்கை அலங்கரித்திருந்தனர். தமிழக அரசு உள்ளாட்சித்துறை அமைச்சரும், விழா தலைவருமான திரு மா. முத்துசாமி அவர்கள், "திருக்குறளைத் தேசிய நூலாக்க இது போன்ற விழாக்களில் உறுதி ஏற்க வேண்டு" மென்று கூறி, சீரிய சொற்பொழி வாற்றினார்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு" என்றார் வள்ளுவர். பசிப்பிணியை உழவர்கள் தீர்க்கின்றனர். உடற்பிணியை மருத்துவர்களாகிய நீங்கள் தீர்க்கின்றீர்கள், மனித சமுதாயத்திற்கு உணவு கொடுத்து உயிர் கொடுக்கிறார்கள் உழவர்கள். இந்த உயிர் தங்கியிருக்கும் உடலுக்கு ஊறு நேரா வண்ணம் மருத்துவம் செய்கின்றீர்கள் நீங்கள். ஆதலால் உழவர்களும் நீங்களும் உலகியலில் ஒருவிதத்தில் ஒத்தவர்களே. அதனால் தான் உழவர்களுக்காக உரிய இந்தப் பொங்கல் விழாவை நாட்பல கடந்தும், இன்றேனும் நடத்தும் ஆர்வம் கொண்டிருக்கிறீர்கள். உழவர்களை இந்நாடு மதிக்கத் தொடங்கிவிட்டது என்பதை இத்தகைய விழாக்களில் இருந்து உணரலாம்' என்றார் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**ஐயப்பாடு கொள்ளலாமா?**

" இலக்கியத்தில் மட்டுமின்றி விஞ்ஞானத் துறையிலும்—மருத்துவத் துறையிலும் தமிழகம் சிறப்புற்றிருந்ததற்குச் சான்றுகள் பலவுள. இப்படிச் சிறப்பு வாய்ந்த மொழியை வைத்துக்கொண்டுள்ள நாம் "தமிழால் முடியுமா?" என்று ஐயப்பாடு கொள்ளலாமா?

சீன நாடு பஞ்சத்தால் அடிபட்டாலும் சீன மொழியை வைத்துக்கொண்டே விஞ்ஞானத்தில் முன்னேறுகிறது. இயற்கையே தொல்லை கொடுக்கும் நாடான ஜப்பான் இரண்டாம் உலகப்போரில் சின்னாபின்னப்படுத்தப்பட்ட பின்பும் விஞ்ஞானத்திலும் பொருளாதாரத்திலும் பிற நாடுகள் வியக்கும் வண்ணம் முன்னேறிக்கொண்டு வருகிறது. அவர்கள் தாய்மொழியை வைத்துத்தான்

முன்னேறுகிருர்களே தவிர, அயல் மொழியைக் கொண் டல்ல.

"நேற்றுத் தோன்றிய மொழிகள் அவை. அவை அந்த அளவுக்கு இருக்கும் போது இலக்கியச் சிறப்பும். நாகரிகச் சிறப்பும்—வரலாற்றுச் சிறப்பும் உடைய நம் தமிழ் மொழி எந்நிலையில் இருக்க வேண்டும் என் பதைக் கொஞ்சம் சிந்தித்தால் தெளிவாகும்.

**தமிழால் ஏன் முடியாது!**

"உலகத் தமிழ் மாநாட்டின் போது இலங்கை நாட்டி லிருந்து வந்த திருச்செல்வம் அவர்கள் இலங்கையில் மருத்துவக் கல்லூரிப் பட்டப் படிப்பு தமிழில்தான் போதிக்கப்படுகிறது என்ருர். மேலும் விஞ்ஞானத்திற்குத் தகுந்த தமிழ்ச் சொற்களை கொண்ட நூலை தமிழ் நாட்டிலுள்ள பேராசிரியர்களிடமிருந்து பெற்ருேம் என்று கூறினர். இலங்கையிலுள்ள அவர்கள், தமது மருத் துவக் கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழி ஆவதில் இவ்வளவு தூரம் அக்கறை காட்டினல், தமிழகத்தில் உள்ள நாம் எந்த அளவுக்கு அக்கறை காட்டவேண்டும். இலங்கையிலுள்ளவர்களுக்கு தமிழில் மருத்துவக் கலைச் சொற்களை இங்குள்ள பேராசிரியர்கள் கொடுக்கிருர்கள் என்ருல், தமிழகத்திற்கு ஏன் தரமாட்டார்கள்?



"நாட்டின் ஒற்றுமை யுணர் வுக்காக தேசியப் பறவை என் ருேம். தேசிய கீதம் என்கிருேம். அப்படிக் கூறுவதால் மட்டும், ஒற்றுமையுணர்வைக் காணமுடி யாது. அதற்கு அனைவரையும் இணைத்து வைக்கும் மன உணர்வு தேவை. மன உணர்வை வலி யுறுத்தும் தேசிய இலக்கியம்—பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட சிறப்பு வாய்ந்த இலக்கியம்—எந்தக் காலமும் ஏற்றுக்கொள்ளும் கருத்துக்களை வழங்கும் இலக்கியம் திருக்குறள்தான்.

எல்லாப் பொருளும் இதில் உண்டு, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை, அப்படிப்பட்ட திருக்குறளை மருத் துவர்களாகிய நீங்கள் நண்பர்களோடு பேசுவது மட்டு மின்றி மேடையில் முழங்குவது மட்டுமின்றி மருத்துவம் பார்க்க வரும் நோயாளிகளிடமும் கூறலாம்.

**உள்ளத்தில் உறுதிகொள்வோமாக!**

'ஒருவருக்குக் கையில் புண் வந்து துன்பப்படும்போது துயரத்தை மறந்து இருங்கள் துயரம் போய்விடும்' என்று மருத்துவர்கள் ஆறுதல் கூறும்போது "இடுக் கண்கள்வருங்கால் நகுக" என்று வள்ளுவரே கூறியிருக் கிருர் என்று அப்பாடலைக் கூறலாம்.

இப்படிப் பலவற்றிற்கும் பயன்படுவது திருக்குறள்; அதை தேசிய நூலாக்க இந்த விழாவில் நாம் உறுதி யெடுத்துக்கொள்வது முறையல்லவா? என்ருர் உள்ளாட் சித் துறை அமைச்சர்.

பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு கலைஞர் திரு மு. கருணாநிதி அவர்கள் "பழந்தமிழர்களின் நல்லுணர்ச்சிகளை இதயத்திலேற்றி புதுவாழ்வு காண்போம்" என்று கூறி சீரிய சொற்பொழிவு ஆற்றினர்.

"உழவர்களும் நீங்களும் ஒருவிதத்தில் ஒருவருக் கொருவர் ஒத்தவர்களே. உழவர்கள் பயிர்களைப் பாது காக்கிருர்கள். நீங்கள் உயிர்களைப் பாதுகாக்கிறீர்கள். அவர்களும் அறுக்கிருர்கள்—கதிர்களை! நீங்களும் அறுக் கிறீர்கள். அவர்கள் நெல்லைத் தாளோடு அறுத்துக் கட்டுக் கட்டுகிருர்கள். நீங்களும் கட்டுக் கட்டுகிறீர்கள். பயிரில் விழுந்த நோய்க்கு பூச்சி மருந்தை அவர்கள் தெளிக்கி ருர்கள், நீங்களும் மருந்து தருகிறீர்கள்.

இங்கு நடப்பதைப் போன்ற விழாக்களை நாம் கொண் டாடுவது, தமிழர்கள் ஒரு காலத்தில் எப்படியிருந் தார்கள், எப்படி வாழ்ந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கத்தான்; அவர்கள் வாழ்ந்ததைப் போல வாழ முடியாது எனினும், அவர்கள் வாழ்க்கையின் உணர்வுகளை நாம் பெறவேண்டும் என்பதற்காகத்தான்.

தேர்க்காலிலே கன்றைக் கொன்ற வீதிவிடங்கனை தன் மகனென்றும் பாராமல் தேர்க் காலில் வைத்துக்கொன்று நீதி யுடன் ஆட்சி நடத்திய மனு நீதிச் சோழனை நாம் கேள்விப்பட் டிருக்கிருேம். அதுபோல நாம் வாழ முடியாது, காரோட்டிச் செல்லும்போது தன் மகன் ஏதேனும் ஒரு கன்றின் மேல் ஏற்றிக் காயப்படுத்திஞல், அதேபோல் எந்தத் தந்தையும் மகனைப் படுக்கவைத்துகாரை அவன் மீது ஏற்றிக் காயப் படுத் நினைக்கமாட்டார்- ஆனல் மனுநீதிச் சோழனிட மிருந்த நீதியுணர்வு—ஒருதலைப்பட்சமில்லாத நீதி யுணர்வை நாம் பெறவேண்டும்.

முல்லைக்குத் தேர்தந்தான் பாரி என்ருல் அவருடைய கொடைத்தன்மைக்காக எடுத்துக் கூறப்பட்டது அது. முல்லைக்கொடி துவள்வதைக் கூட பழத் தமிழ் மன்னர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை இதனல் உணரலாம். அதுபோல நாம் இருக்கவேண்டும் என்பதற்காக நாம் காரில் செல்லும்போது துவள்கின்ற முல்லைக் கொடியைக் கண்டால் பியட்காரை நிறுத்தி ஏற்றிப் படரவிட்டுச் செல்ல மாட்டோம்; ஆனல் அத்தகைய கொடை மனப்பான்மை இருக்கவேண்டும். கொடையுணர்வு நாம் பெறவேண்டும்.

நமக்குள்ள இலக்கியவளம்—காவிய வளம்—நாட்டுச் சிறப்பு வேறு எந்த நாட்டவர்க்கும் இல்லையென்ருலும், இன்றுவரை நாம் ஏன் உயராமலிருக்கிருேம். என்ப தற்கான காரணத்தைத் துருவித் துருவி ஆராய நாம் அரசியலுக்குப் போகத் தேவையில்லை.

[30-ம் பக்கம் பார்க்க.]

# திருவள்ளுவர் ஆண்டு 2000

சிறுவை **நச்சினார்க்கினியன்.**

**தமிழர்களுக்கென்று ஒரு வரலாற்றுக் காலத்தை வகுத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது, இக்கட்டுரை. திருவள்ளுவர் பெயரால் அமையும் தொடராண்டே, தமிழர்களுக்குச் சாலப் பொருத்தமுடையது என்பதை வலியுறுத்திக் கூறும் இக்கட்டுரையில், அக் கூற்றினுக்கு ஆதாரமாக, பல்வேறு காரண காரியங்களை எடுத்து விளக்கியுள்ளார், இக் கட்டுரை ஆசிரியர். வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் இப் பிரச்னையை ஆராயும் இக்கட்டுரையில் காணப்படும் கருத்துகள், தமிழர் சமுதாயத்தின் சிந்தனைக்கு விருந்தாக அமையத்தக்கன. —ஆசிரியர்.]**

"செய்தக்க அல்ல செயக்கெடும், செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்"

**என்பது திருவள்ளுவர் கூறிய பொய்யா மொழி. "பருவத்தே பயிர்செய்" என்பதும் தமிழகப் பழமொழிகளில் ஒன்று. இன்று, தமிழகத்தில் நல்ல சூழ்நிலையும் தக்க பருவமும் அமைந்துள்ளன. அதாவது, தமிழகத்தின் முயற்சியால் "திருவள்ளுவர் அஞ்சல் தலை" வெளியிட்டதன் மூலம், தமிழக சட்ட மன்றப் பேரவையில் "திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறை" அளித்ததின் மூலம், "திருவள்ளுவர் நாற்காலி" என்ற அமைப்பின் வழி, தமிழக மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் "மூலதனம்" அளித்து பெருமை கொண்டதின் மூலமும், தமிழ் நாடு தனது பழம் பெருமையை உலகம் உவப்ப சிறக்கச் செய்து வருவது கண்டு தமிழ் உள்ளங்கள் யாவும் ஒரு புதிய மன நெகிழ்ச்சி, உடல் சிலிர்ப்பு, உள்ளப் பூரிப்பு ஆகிய உணர்வுகள் பெற்று இன்ப நிலையில் களிபெருகை அடைந்து நிற்கின்றன.**

இந்நிலையில் நாம் மறந்து இருக்கும் ஒரு செய்தியை நாமே நம் நினைவிற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளோம். அதுதான் நமக்கென்று அமையவேண்டிய தொடராண்டு. தமிழ் இனத்துக்கு நீண்ட பெரும் வரலாறு உண்டு. உலக மொழிகளில் காணக் கிடைக்காத ஒப்பற்ற இலக்கண இலக்கிய நூல்களும் இருக்கின்றன. தமிழ் மொழி அமைப்பு இன்ன காலத்தில் உண்டானது என்று சொல்ல முடியாத ஒரு வரலாற்று முற்காலச் சிறப்புடையது என்பது, மொழி வல்லுநர்கள் கண்ட முடிவு. இத்தகு சிறப்புகள் இருந்தும், தமிழ் இனத்துக்கு என்று இருந்த தமிழ் ஆண்டுக் கணக்கு எங்ஙனமோ மறந்து நடைமுறையில் இல்லாது போயிற்று. (இதற்குப பற்பல உண்மையான வரலாற்றுக் காரணங்கள் உண்டு. அவை இங்கு விவரித்துக்கூறின் பெருகும்.)

**நம்பிக்கை ஒளி**

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது தமிழகத்தின் நெடுநாளைய பழமொழி. சூரியன் சுற்றும் நிலையின் கணக்கினை ஆய்ந்து அந்நாளில் தைத் திங்களையே ஆண்டின் முதல் திங்களாகக் கொண்டனர். தை முதல் ஆனி ஈறுக ஒரு பகுதி, ஆடி முதல் மாாகழி ஈறுக, மற்றொரு பகுதி. ஆடி முதல் மார்கழி ஈறுக உள்ள காலம் இருள்நிலை கொண்டது. தை முதல் ஆனி ஈறுகக் கொண்ட காலம் பகல்நிலை கொண்டது. ஓர் ஆண்டில் ஆடி முதல் மார்கழி ஈறுக உள்ள காலத்தில், அதாவது ஆடிக் காற்றிலும் அடுத்துள்ள ஐப்பசி மழையிலும் மார்கழிப் பனியிலும் குளிரிலும் இடர்படும்பொழுது மக்கள் உள்ளத்தில் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற நம்பிக்கை ஒலி பேரொலியாய்க் கேட்கிறது.

இந்த இரவு நிலை மாறிப் பகல்நிலை பெற்றுப் பயன் தரும் தைப் பிறப்பு நாளைப் புத்தாண்டின் புனித நாளாய், பிறப்பு நாளாய்ப் பழந்தமிழர் கொண்டாடி வந்தனர். இன்றுங்கூட தைப் பிறப்பைத் தனிப்பெருஞ் சிறப்பாய்த் தமிழர்கள் கொண்டாடி வருகிறார்கள். ஆகவே, நாம் தைத் திங்களையே ஆண்டின் முதல் திங்களாய்க் கணக்கெடுத்து செயலாக்கல் நலம் பயக்கும்.

'தமிழ் நாடு குறிப்பிட்ட ஓர் ஆண்டிற்கு முன்னே இப்படி இருந்தது, பின்னர் இப்படி ஆயது" என்று சொல்வதற்கு ஓர் ஆண்டுக் கணக்கு இதுபோது இல்லை. மேலை நாட்டார் கிறித்துவுக்கு முன் இப்படி இருந்தோம், கிறித்துவுக்குப் பின் இப்படி இருக்கிறோம் என்று காட்ட ஒரு கால அளவை வைத்துக் கொண்டிருக்கின்றனர். நம்மிடமிருந்து நேற்றுப் பிரிந்து சென்று இன்று மலையாளர் என்ற பெயர் தாங்கியுள்ள சேரத் தமிழர்களும் தமக்கென்று "கொல்லம் ஆண்டு" என்ற கணக்கை வகுத்துக்கொண்டனர்.

ஆனால் தமிழர்களாகிய நாமோ அறுபது ஆண்டு வட்டத்திலேயே சுற்றி சுழன்று வருகிறோம். இந்த அறுபது ஆண்டு சக்கர வட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பிறப்பு அல்லது இறப்பு நிகழ்ச்சி ஒரு நள ஆண்டில் ஏற்பட்டு இரண்டு மூன்று நள ஆண்டுகள் சுற்றிக் கழிந்துவிட்டால், எந்த நள ஆண்டில் அந்தப் பிறப்போ, இழப்போ ஏற்பட்டது என்ற மருட்சி ஏற்படவே செய்கிறது. ஆகவே 60 ஆண்டுச் சக்கர வட்டத்தில் சுழலாது, நமக்கென ஒரு வரலாற்றுக் காலத்தை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும்.



திரு க. நமச்சிவாய முதலியார்

ஆகவே, நாம் அமைத்துக்கொள்ளும் தமிழ்த் தொடர் ஆண்டு நம்மிடை வாழ்ந்த-நமக்கு என்றும் மங்காத புகழினைத் தேடித் தந்த-நாமும் அவரை உலகினுக்கே ஈந்து வான் புகழ் கொண்ட-ஒரு தலைமை சான்ற புலவரது பெயரால், மனிதக் குலத்திற்கு வாழ்க்கை அமைப்பு முறை சட்டத்தையே உருவாக்கி அளித்த உலகக் கவிஞர் திருவள்ளுவர் பெயரால் அமையும் தொடராண்டாயின் இனி தமிழர்களுக்கு ஒரு தொடராண்டில்லை என்ற பேச்சும் இல்லை, குறையும் இல்லை.

## திருவள்ளுவர் திருநாள்

எனவே, 1935-ல் சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் பேராசிரியர் நமச்சிவாயர் அமைப்பாளராய் இருந்து, உலகம் முழுவதும் உள்ள அறிஞர்களுக்கெல்லாம் அழைப்புகள் விடுத்துக் கொண்டாடிய "திருவள்ளுவர் திருநாளில்" தலைமை வகித்துப் பேசிய ஆசிரியர் மறைமலையடிகளார், திருவள்ளுவர் காலத்தைப்பற்றிய தெள்ளிய பல ஆய்வுரைகளைக் கூறி முடிப்பாக, "எனவே, திருவள்ளுவர் காலம் 2-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பது எளிதிற் பெறப்படும். கிறித்துப் பிறப்பதற்கு 30-ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்." எனக் கூறினார்கள். அப்பேரவையில் கூடியிருந்த திருவாளர்கள் திரு. வி. க., நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பேராசிரியர் பாரிப்பாக்கம், கண்ணப்ப முதலியார், திருவாட்டி ஈ. த. இராசேச்சுவரி அம்மையார் இன்ன பிற பெரும் புலவர்கள் அக் கருத்து சாலவும் பொருத்தமுடையது எனக் கண்டார்கள்.

இத்தகு சீரிய நற்கருத்தைச் செயல்படுத்த வேண்டி, முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், மதுரை திருமுருகன் நிலையத்தார், மதுரை திருவள்ளுவர் கழகத்தார், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், சென்னை நக்கீரர் கழகத்தார்போன்ற பல இலக்கிய நிறுவனங்கள் இடைவிடாது செய்த முயற்சியின் பயனாகவும், திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் இதற்கென சில ஆக்க பூர்வமான திட்டங்களைச் செயல்படுத்தியதின் காரணமாகவும், தமிழகத்தில் பல நாளிதழ்கள், கிழமை இதழ்கள், திங்கள் இதழ்கள், ஆசிரியர் மறைமலையடிகளார் கண்ட ஆய்வின்படி திருவள்ளுவர் தொடர் ஆண்டினை மேற்கொண்டனர். அதனை ஒட்டி பல இலக்கிய நிறுவனங்கள் தங்கள் விழா அழைப்பிதழ்களிலும், பொதுமக்கள் தமிழ்த் திருமண அழைப்பிதழ்களிலும் திருவள்ளுவர் தொடர் ஆண்டினை மேற்கொள்ளத் தலைப்பட்டனர்.

மேலும் திருவள்ளுவர் ஆண்டினை, 1932-ம் ஆண்டு முதல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தம் திருக்குறள் நாட் குறிப்பு ஏட்டில் பதிப்பித்ததின் மூலமும், 1947 முதல் மதுரை திருமுருகன் நிலையத்தார் திருவள்ளுவர் நாட் காட்டி அச்சிட்டதின் மூலமும், 30—11—1947-ல் சென்னையில் நடந்த இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் திரு ஏஎல் மலையப்பன் அவர்கள் கொண்டுவந்து நிறைவேற்றிய திருவள்ளுவர்

ஆண்டுத் தீர்மானத்தின் மூலமும், நாட்டில் ஒரு நல்ல மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது.

### தமிழர் கடமை

ஆகவே, இன்று திருவள்ளுவர் தொடர் ஆண்டு 1999 நடைபெறுகிறது. அடுத்த ஆண்டு திருவள்ளுவர் ஆண்டு 2000 ஆகும். இன்றைய முறைப்படி இத்தொடர் ஆண்டினை இன்று நாளிதழ்கள், கிழமை இதழ்கள், திங்கள் இதழ்கள் ஆக சுமார் 30 இதழ்களுக்குமேல் பயன்படுத்தி வருகின்றன. மேலும் ஆண்டு மலர்களிலும், பல்வேறு அழைப்பிதழ்களிலும், மிக வேகமாகத் திருவள்ளுவர் ஆண்டு பரவி வருகிறது. திருவள்ளுவர் ஆண்டு 2000க்குள் தமிழகத்தில் உள்ள எல்லா எழுத்தாளர்களும் அறிஞர்




பெருமக்களும் இதனையே கடமையாகக் கொண்டு அவரவர்கள் தொடர்பு கொண்டுள்ள ஆட்சிக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள், இலக்கிய நிறுவனங்கள் அனைத்திலும் தங்களது தலைப்புத் தாள்களில், தங்கள் கடிதப் போக்குவரத்துகளில் திருவள்ளுவர் ஆண்டினையே இட்டு வழக்கப்படுத்த வேண்டியது அவரவர் கடமைகளாகும்.

ஒரு சிலருக்கு இத் தொடர் ஆண்டில் ஐயம் இருக்குமாயின் பின்னர் தக்க ஆய்வு தலைப்படுங்கால் நாம் மாற்றிக்கொள்வதில் இழுக்கொன்றும் இல்லை. இது போது இருப்பதைக் கொண்டு, தக்கார் எடுத்த ஆய்வினை ஒட்டி உலகத்தோடு பீடுநடை போட்டு முன்னே செல்வோம். தமிழ் இனம், தமிழ்மொழி வளம் திருவள்ளுவருக்கு முன்பு இப்படி இருந்தது, திருவள்ளுவருக்குப் பின்பு இப்படி ஆயிற்று என்ற முடிவுகளை உலகத்திற்கு எடுத்துச் சொல்வோம்.

### அவச்சொல்லை போக்குவோம்

"இனி ஒரு விதி செய்வோம் அதை எந்நாளும் காப்போம்" என்ற பாரதியாரின் தூய மொழிப்படி, அறிஞர்கள் அனைவரும் தம்முடைய வேற்றுமைகளை மறந்து, தமிழின் பெயரால், வள்ளுவரின் பெயரால் ஒன்று கூடித் திருவள்ளுவர் ஆண்டினைப் பரப்புவோம். அதன் மூலம் தமிழ் இனத்திற்கு ஒரு தொடர் ஆண்டில்லை என்ற அவச் சொல்லை அழித்தவர்களாவோம். தமிழன் தலை நிமிர்ந்து, வரலாற்றுச் சுவடியில் நேரே செல்ல வழி வகுத்தவர்களாவோம். நம்மை நாம் உணர்ந்தவர்களாவோம்.

திருவள்ளுவர் ஆண்டு 2000-க்குள் எங்கும் தமிழ், எல்லாம் தமிழ் என்ற நிலை எய்துவதோடு, திருக்குறள் சுவடி இல்லாத ஒரு தனிக் குடியும் தமிழகத்தில் இல்லை என்ற பெருமையையும் தமிழ் நாடு தேடிக்கொள்ள வேண்டும்.

வாழ்க வள்ளுவம்! வெல்க திருக்குறள்!

உங்களுடைய தானியங்களை பூச்சிகளிலிருந்து குறைந்த விலையில் பாதுகாப்பதற்கு

**(by way of fumigation of food grains)**

இப்பொழுது இந்தியாவில் தயாரிக்கப்படும், வேண்டுமளவு கிடைக்கும்

卐 "செல்போஸ்" (அலுமினியம் பால்பைடு) மிகவும் உதவி புரிகிறது.

உங்களுடைய நிலத்தை **எலி**களிடமிருந்து

卐 "செல்போஸ்" (அலுமினியம் பால்பைடு) சுலபமாக பாதுகாக்கிறது.

மற்றும் விவரங்களுக்கு கடிதம் எழுதுக :

EXCEL INDUSTRIES LIMITED,

**184-87, Swami Vivekananda Road,**

**JOGESHWARI,** BOMBAY-60NB.

Phone : 571361, 573584.

# புதியதோர் உலகு செய்வோம்

## சோழவரம்

(செங்கல்பட்டு மாவட்டம்)

சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் சீரணித் தொண்டர்களால் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிகளை ஆட்டந்தாங்கல், நல்லூர், ஆமூர் ஆகிய கிராமங்களில் தமிழக உணவு, வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் 1968-ம் ஆண்டு மே திங்கள் 6-ம் நாளன்று திறந்து வைத்தார். கிராமிய வேலைத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பெரிய பள்ளி ஒன்றை அலமாதியிலும், நீர் அழுத்த தொட்டி ஒன்றை சோழவரத்திலும் ஆசிரியை குடியிருப்பு ஒன்றை ஆட்டந்தாங்களிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். கிராம வேலைத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட மற்றொரு பெரிய பள்ளியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. இலட்சுமிகாந்தன் பாரதி, ஐ.ஏ.எஸ். அவர்கள் ஆமூரில் திறந்து வைத்தார்.

இவ் விழாக்களுக்கு பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பா. நாகலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்.

**[இந்த இதழிலிருந்து தொடங்கப்பட்டுள்ள புதிய பகுதி இது. ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆற்றும் அரும் பணிகள் இங்கே சுருக்கமாக வெளியிடப்படுகிறது.]**

## செம்பனூர்கோவில்

(தஞ்சாவூர் மாவட்டம்)

செம்பனூர்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த காலமநல்லூர் கிராமத்தில் ஒன்றிய ஆரம்ப பள்ளிக்குரிய புதிய கட்டிடம் ஒன்று ரு. 11,000 மதிப்பில கட்டப்பட்டதை 1968-ம் ஆண்டு மே மாதம் 26-ம் தேதியன்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. ஜி. ரெங்கபாஷ்யம், ஐ.ஏ.எஸ். அவர்கள் திறந்து வைத்தார்.

செம்பனூர்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பாகசாலை கிராமத்தில், தாய்சேய் நல விடுதியின புதிய கட்டிடத்தை 1968-ம் ஆண்டு மே திங்கள் 26-ம் நாளில் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரால் திறந்து வைக்கப் பட்டது.

### விவசாயக் கிடங்கு

செம்பனூர்கோவில் ஊராட்சி ஒன்றிய சதுக்கத்தில் புதிதாக ரூ. 21,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய விவசாய கிடங்கு ஒன்றையும், 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ம்நாளன்று மாவட்ட ஆட்சித் தலைவரே திறந்து வைத்தார்.

1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ம் நாள் மாலை 6 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. ஜி. ரெங்க பாஷ்யம், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் நீர்ப்பாசனத் திட்டம், சம்பாவில் ஆடுதுறை 27 நெல் சாகுபடி செய்தல் என்பது பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. செம்பனூர் கோவில் ஒன்றியத்தை சேர்ந்த பல தீவிர விவசாயிகள் இக் கருத்தரங்கில் பங்குகொண்டு, தங்கள் கருத்தை தெரிவித் தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் தக்கவாறு பதிலளித்தார்.

## சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம்

(மதுரை மாவட்டம்)

சின்னமனூர் வட்டாரத்தைச் சேர்ந்த வேப்பம்பட்டியில் தொட்டோடை பாசன வாய்க்காலில் இரண்டு இடங்களில் ஏற்பட்ட பெரிய உடைப்புகளை அடைக்கவும், இரண்டு பர்லாங் தூரத்திற்கு தூர்வை மணல் எடுக்கவும் கரைகள் பலப் படுத்துவதுமான ரூ. 3,000 பெறுமான வேலையை சீரணிப் படை உறுப்பினர்கள் மூலம் 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 10-ம் நாள் முதல் 12-ம் நாள் வரை மூன்று நாட்களில் எடுத்துக் கொள்ளப்பட்டன. 18 ஊராட்சிகளிலிருந்து 50 உறுப்பினர்கள் வேப்பம்பட்டி, காமாட்சிபுரம், சின்ன மனூர் முதலிய இடங்களிலிருந்து 200 மேற்பட்ட பொதுமக்களும், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் 30 பேர்களும் மேற்கண்ட வேலையில் பங்கு கொண்டனர். 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 10-ம் நாளில் இந்த வேலையை தேனி சட்டமன்ற தொகுதி உறுப்பினர், திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராசன் அவர்கள், சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திரு. சிவ சிதம்பரசூரியநாராயணன் அவர்கள் தலைமையில் தொடங்கி வைத்து சொற்பொழிவாற்றினார்கள். ஆணையாளர் திரு.

அ. சிவகுருநாதன் எல்லோரையும் வரவேற்ருர். மற்றும் திருவாளர்கள் வேலுச்சாமி, எம். ரத்தினம் வே. ரத்தினம் முதலானேர் பேசினர்கள். ஒன்றியப் பொறியாளர் திரு. மாயாண்டி உடனிருந்து வேலையை செய்வதற்கு நல்ல ஏற்பாடுகள் செய்திருந்தார். கடந்த 10 ஆண்டுகளாக செய்யப்படாமல் இருந்த இந்த வேலையை சிரணி மூலம் செய்ததை ஊராட்சி மன்ற தலைவர் திரு. கருப்பையா, மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

## ஒசூர் ஒன்றியம்

(தர்மபுரி மாவட்டம்)

ஒசூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1967-68-ம் ஆண்டில் கீழ்க்கண்ட முன்னேற்ற வேலைகள் நடைபெற்றிருக்கின்றன.

| | |
|---|---|
| புதிய கிணறுகள் வெட்ட கடன் வழங்கியது | ரூ. 2,05,000 |
| கிணறு வெட்ட கடன் வழங்கியது | 15,000 |
| பம்பு செட்டுகள் அமைக்க | 41,000 |
| புதிய கிணறுகளுக்கு மானியம் | ரூ. 15,000 |
| இணைப்பு சாலைகள் போட செலவழித்தது | 14,077 |
| குடிநீர் கிணறுகள் வெட்ட | 33,107 |
| விவசாய வளர்ச்சிக்கு செலவிட்டது | 23,618 |

ஒசூர் நகரத்தில் குடிநீர் வழங்க ரூ. 25.000 செலவில் குழாய்கள் போடப்பட்டுள்ளன. மேலும், ரூ. 25,000 செலவில் மற்றொரு மேல்நிலைத் தொட்டி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 15 இணைப்பு சாலைகள் போடப்பட்டு வருகிறது. இணைப்பு சாலைகளுக்கு ரூ. 14,077 இதுவரை செலவிடப்பட்டுள்ளது. குடிதண்ணீர் வசதிக்காக ரூ. 33,107 செலவிடப்பட்டுள்ளது.

விவசாய வளர்ச்சிக்காக டிரிலிங் இயந்திரம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது. ரூ. 40,000 செலவில் டிராக்டர் வாங்க தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு புதிய கிணறுகள் வெட்ட ரூ. 2,05,000 கடனாக அளிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் மற்றும் ஆயில் என்ஜின் பம்புசெட்டுகள் வைக்க ரூ. 41,000-ம் கிணறு அடிவெட்டு வெட்டுவதற்கு ரூ. 15,000-ம் கடனாக விவசாயிகளுக்கு அளிக்கப்படடுள்ளது. ரூ. 24,000 செலவில் விவசாயக் கிடங்கு கட்டப்பட்டு வருகிறது. சிறுபாசன வசதிக்காக பல ஏரிகள் ரூ. 29,700 செலவில் சீர் செய்யப்பட்டுள்ளது.


கவனிக்கவும் -
யானை டிரேட் மார்க்
யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில்
இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்
பாக்ட் கம்பெனியாரின்
உரத் தயாரிப்புகள்
பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)
அல்ட்ராபாஸ்
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)
அமோனியம் ஸல்பேட்
சூபர்பாஸ்பேட்
N.P.K. கலப்பு உரங்கள்
FACT
பாக்ட் ...யானை மார்க் உரங்கள்
பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை
Criterion-FT-2004 A

நாம் சமீப எதிர்காலத்தில் செய்து கொடுக்கவே முடியாது. இந்த அத்தியாவசியத் தேவைகளை கிராம மக்களுக்குச் செய்து கொடுப்பதில் இனியும் காலதாமதம் செய்வோமானால் மக்கள் பொறுக்க மாட்டார்கள். அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுவார்கள்,

உயர்நிலைப் பள்ளி கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவற்றிற்கு ஆகும் செலவைச் சரிக்கட்ட மத்திய அரசு பணம் கொடுக்கிறது. ஆனால் அடிப்படைத் தேவையான ஆரம்பக் கல்விக்கு மத்திய நிதி உதவி கொடுக்கப் படாதது விசித்திரமாகத் தோன்றுகிறது,

எல்லோருக்கும் கட்டாயமாக இலவச ஆரம்பக் கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனால், அந்த இலவசக் கல்வி வசதியை செய்து கொடுப்பதற்கு, மத்திய அரசு மான்யம் கொடுப்பதில்லை. இது பொருத்த மற்றது ஆகும். கிராம வளர்ச்சிப் பணிகளுக்காக தமிழக அரசு ஆண்டு தோறும் ரூ. 58 கோடி செலவிடுகிறது. இதில் ரூ. 22 கோடிக்கும் சற்று அதிகமான தொகையை ஆரம்பக் கல்வி திட்டத்துக்காக ஊராட்சி ஒன்றியங்கள் செலவிட்டுவிடுகின்றன. மீதமுள்ள ரூ. 26 கோடி, இதர கிராம வளர்ச்சி வேலைகளை செய்ய போதுமானதாக இல்லை.

ஆகவே, பள்ளிக்கூட, கல்லூரிக் கல்விக்காக மத்திய அரசு நிதி உதவி செய்வதைப் போல, அரசியல் சட்ட ஆணையைப் நிறைவேற்றும் தொடக்க கல்வித் திட்டத்துக்காக நிதி உதவ வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், கிராம குடிநீர், சுகாதாரம், விளக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் மத்திய அரசு நிதி உதவி செய்ய வேண்டிக் கொள்கிறேன்.

குறிப்பாக குடிநீர்த் திட்டத்துக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆண்டுக்கு கொடுக்கப்படும் ரூ. 15 ஆயிரம் போதுமானது அல்ல. குறைந்த அளவு இதற்கு ஆண்டுக்கு ரூ. 1 லட்சமாக ஒதுக்கும் வகையில் மத்திய அரசு நிதியாக தர வேண்டும்.''

### திரு. ஜகஜீவன்ராம்

''கிராமப் பகுதிகளின் அதிக அளவு வளர்ச்சிக்கு, சமுதாய நலத் திட்டத்தை சீர்படுத்தி, அதற்கு புதிய பலத்தையும் வேகத்தையும் ஊட்டுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்றார் இந்திய அரசு உணவு-வேளாண்மை அமைச்சர் திரு. ஜகஜீவன் ராம். ''ஊராட்சி அமைப்புகள் ஏற்பட்டு சில ஆண்டுகளே ஆவதால், அவை இன்னும் பக்குவம் அடையவில்லை. எந்த நிர்வாக அமைப்புக்கும் உரிய குறைகள் ஊராட்சி அமைப்பிலும் உள்ளது. குறிப்பாக கிராமங்களில் சாதி அடிப்படையில் கோஷ்டி மனப்பான்மை இருப்பதை மறுப்பதற்கில்லை. ஒவ்வொரு கோஷ்டியும் ஊராட்சியின் அதிகாரங்களைத் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றன'' என்று கருத்துத் தெரிவித்தார் திரு ஜகஜீவன் ராம்.

''ஆனாலும் தமிழகம், மகாராயடிரம், குஜராத் மாநிலங்களின் அனுபவத்தைக் கொண்டு ஆராய்ந்தால், ஊராட்சிகளுக்கு அதிகாரமும், வருவாய் வாய்ப்புகளும் வழங்கி, அவை ஒழுங்காக பயன்படுத்தப்படுவதற்கான உறுதியான ஏற்பாட்டை செய்வது ஒன்றுதான் பரிகாரம் என்று தோன்றுகிறது. சமுதாய நல திட்டங்களில் பயன் உண்டு என்றும், அத்திட்டங்கள் இதுவரை செயல்பட்ட விதம் பற்றியும் சில வட்டாரங்களில் ஐயப்பாடு எழுப்பப்பட்டுள்ளன. சமுதாய நலத் திட்டங்களை அறவே கைவிட சிலர் யோசனை கூறியுள்ளனர். ஆகவே இந்த பிரச்னைக்கு புதிய நோக்கு ஏற்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது. சமுதாய நல திட்டத்திற்கான பரந்த குறிக்கோள்களை உருவாக்கவும், அதன் நிர்வாக சீரமைப்பிற்கு யோசனை கூறவும், இந்த மாநாடு உதவி புரியவேண்டும்.

மிகு விளைச்சல் தரும் கலப்பு ரக விதைகள், ரசாயன உரங்கள், பூச்சி, நோய் கொல்லிகள் ஆகியவற்றின் பயன் பிரபலமாகி வருகிறது. இவற்றினால் விவசாய சமுதாயத்தில் ஏற்படும் வளர்ச்சி பரவலாக இல்லாவிட்டால் அதன் விளைவாக புதிய பிரச்னைகள்

தலை காட்டும். புதிய விவசாய முறைகளை பண வசதியுள்ள பெரிய விவசாயிகள் எளிதில் பின்பற்ற முடிகிறது. சிறிய விவசாயிகள், வசதி குறைவு காரணமாக பழங்கால முறைகளைத் தான் பின்பற்ற முடிகிறது. இந்த ஏற்றத் தாழ்வினால் சமூக புரைசல் ஏற்படும். இதை தவிர்க்க சமுதாய நலத் திட்ட ஊராட்சி நிறுவனங்கள் பாடுபட வேண்டும். எல்லா விவசாயிகளும் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றி பயன் அடைய அவை உதவி புரியும் என நம்புகிறேன்.

சமுதாய நலத் திட்டம் செயல்படுவதில் சில அடிப்படை இலட்சியங்கள் உண்டு. அந்தத் திட்டத்தில் மக்கள் சுயமாகவே பங்கெடுத்துக் கொள்ளும்படி செய்யவேண்டுமென்பது ஓர் இலட்சியம். அவர்கள் தங்களது சொந்த முயற்சியையே கூடுமான அளவுக்கு நம்பியிருக்க வேண்டும். அரசாங்கம் தொழில் நுட்ப உதவியைப் போன்ற உதவிகளைத் தான் செய்யும். சமுதாயம் பூராவுமே வளர்ச்சிக்கான அடிப்படை அமைப்பு என்பது இத்திட்டத்தின் மற்றொரு பகுதி.

இந்த லட்சியங்களின் அடிப்படையில் தான் சமுதாய நலத் திட்டத்தின் வெற்றி, தோல்வியை மதிப்பிட வேண்டும். திட்டத்தில் பொது மக்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்களா, தாங்களாகவே அவ்வாறு செய்கிறார்களா, அதற்கு ஊக்கமளிக்கப்படுகிறதா, சமுதாயம் முழுவதும் அத் திட்டத்தால் பயன் அடைந்திருக்கிறதா அல்லது செல்வாக்குள்ளவர்கள் மட்டுமே பயனடைந்துள்ளனரா? இந்த அடிப்படையில் தான் சமுதாய நலத் திட்டத்தை ஆராய வேண்டும்.''

**தமிழ்நாட்டில் சமுதாய வளர்ச்சி திட்டத்தின் முன்னேற்றத்தை சித்தரிக்கும் கண்காட்சியொன்றை, இந்திய அரசு சமுதாய நல ராஜாங்க அமைச்சர் திரு எம். எஸ். குருபாத சாமி திறந்து வைத்தார்.**

## திரு. செ. மாதவன்

**''சிறிய விவசாயிகளை கூட்டுறவு சாகுபடி சங்கங்களின் கீழ் கொண்டுவருவதற்கான ஒரு முறையை நாம் வகுக்க வேண்டும்'' என்று மாநாட்டின் இரண்டாவது நாள் (12—6—68) கூட்டத்தில் ''கூட்டுறவு'' பற்றி விவாதிக்கையில், தமிழக கூட்டுறவு அமைச்சர் திரு. செ. மாதவன் கூறினார்.**

''நமது நாடு பெரும்பாலும் சிறிய விவசாயிகளையே கொண்டது. அவர்களது நிலைமை குறித்து தனிக் கவனம் செலுத்தப்படவேண்டும். இந்த விவசாயிகள் நவீன விவசாய முறைகளை பின்பற்றாவிட்டால் விவசாய உற்பத்தியில் பெரிய முன்னேற்றம் எதையும் நாம் காணமுடியாது. எனவே இந்த விவசாயிகளை கூட்டுறவு சாகுபடி சங்கங்களின் கீழ் கொண்டு வருவதற்கான ஒரு முறையை நாம் வகுக்கவேண்டும்.

விவசாயிகள் கூட்டுறவு சாகுபடி சங்கத்தில் சேர்ந்தாலும், நிலங்கள் அவர்களுக்கே சொந்தமானவையாக இருக்கும். அதே சமயத்தில், கூட்டுறவில் சேர்வதன் மூலம் நவீன விவசாய முறைகளை அவர்கள் பயன்படுத்த முடியும். இத்தகைய சாகுபடி சங்கங்களே நமது நாட்டில் வெற்றி காணமுடியும்'' என்று அமைச்சர் திரு செ. மாதவன் கூறினார்.

''குறைந்த அளவு வருமானமுள்ள ஏழை மக்களை சுயநலமிகளின் பிடியிலிருந்து மீட்பதே கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய நோக்கம். இதனை நீங்கள் அடிக்கடி வலியுறுத்தி வருகிறீர்கள்.

ஏகபோக மனப்போக்கும், சுய நலமிகளின் பிடியும் கூட்டுறவு இயக்கம் வெற்றிகரமாக நடப்பதை தடைப்படுத்துகின்றன. கூட்டுறவு இயக்கத்துக்கு புத்துயிர் ஊட்டி, இதனை மக்கள் இயக்கமாக நாம் மாற்ற வேண்டும்.

மக்களின் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களின் பல பிரச்னைகளுக்கு பரிகாரம் கூட்டுறவு இயக்கம். இதனை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். மக்களில் எல்லா தரப்பாருக்கும் கூட்டுறவு இயக்கம் பயன்படும் என்றபோதிலும், அடிப்படையில் இது குறைந்த வருமானம் உடையவர்களில் மேம்பாட்டுக்கானதாகும்.

அரசினால் வகுக்கப்படும் பல திட்டங்களில் கூட்டுறவுத் துறை தொடர்பு கொள்கிறது. எந்த நோக்கத்துடன் கூட்டுறவு அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றனவோ அந்த நோக்கத்தை அவை பூர்த்தி செய்கின்றன.

தனியார் துறை போட்டியை சமாளித்து நிற்க, கூட்டுறவு இயக்கத்துக்கு, மத்திய மாநில அரசுகள் உதவி அளித்து வருகின்றன.

விவசாயக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் நல்ல பணியாற்றி வருகின்றன. தன்னிறைவை பெற, விவசாய உற்பத்தியைப் பெருக்க சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இந்த சமயத்தில், இந்த சங்கங்களின் பணி குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

தமிழ்நாட்டில் விவசாய உற்பத்திக் கடனாக கொடுக்கப்பட்ட தொகை கடந்த 3 ஆண்டுகளில் முறையே 30 கோடியே 75 லட்சம் ரூபாய்; 31 கோடியே 41 லட்சம் ரூபாய்; 37 கோடியே 26 லட்சம் ரூபாய். உற்பத்தியைப் பெருக்கவும், அதே சமயத்தில் உற்பத்திப் பொருள்களை விவசாயிகளுக்கு ஆதாயம் கிடைக்கும் வகையில் விற்பனை செய்யவும் கடன் விரிவு திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள், கூட்டுறவு இயக்கத்தின் முழுப் பயனை அடைய முடியாமல் இருக்கிறது.

கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகத்தைச் சீர்படுத்த பலவித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், எல்லாம் சரியாக இல்லை என்ற நிலையே இருக்கிறது. ஆதாரக் கடன் வழங்கு சங்கங்களினால் வழங்கப்படும் கடன்கள் சிறிய, நிலச்சுவான்தார்களுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும் போய்ச் சேருவதில்லை; சில செல்வாக்கு உடையவர் இந்த சங்கங்களினால் பெரும்பலன் அடைகிறார்கள் என்று குறை கூறப்படுகிறது, தன்னலத்தைப் பெரிதாகக் கொள்ளும் சில சிறு கும்பல்கள் கூட்டுறவு சங்கங்களை தங்கள் பிடியில் வைத்துக்கொண்டு, பலன் அடைந்து வருகின்றன. இது, மத்திய, மாநில அரசுகளின் கவனத்தில் இருக்கிறது.

### திரு ஜெகஜீவன் ராம்

**மாநாட்டின் இரண்டாம் நாள், திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் கூட்டுறவு இயக்கம் சிர்ப்பட பல கருத்துக்களை எடுத்துரைத்தார். அவர் கூறியதாவது:—**

"கூட்டுறவுக் கடன் நிறுவனத்திற்கு முதுகெலும்பு போல தற்போது 3 கட்ட அமைப்பு விளங்குகிறது, இந்த 3 கட்ட அமைப்பில் ஒன்று அல்லது இரண்டை ஒழிப்பது பற்றி ஆராயலாம்.

கூட்டுறவு இயக்கத்தில் விவசாயத்துக்கு நீண்டகால கடன் வழங்க தனி அமைப்பும் நீடிக்க வேண்டுமா என்பது பற்றி ஆராய வேண்டும்.

உற்பத்தி கடனை வழங்க கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு அதிகாரம் வழங்குவது பற்றியும் ஆலோசிக்கவேண்டும்.

சாதாரண விவசாயிக்கு பயன் அளிக்கும் வகையில் கூட்டுறவு இயக்கம் செயல்படவேண்டும்.

கூட்டுறவு சங்கங்களின் தினசரி நிர்வாகத்தை மேற்கொள்ள நிர்வாக ஊழியர்கள் பிரிவை தனியாக அமைப்பது பற்றி ஆராயவேண்டும்.

(1) விவசாயத் திட்டங்களுக்கு கூட்டுறவு இயக்கத்தினால் போதிய ஆதரவு அளிக்க முடிந்திருக்கிறதா? (2) சிறிய விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கூட்டுறவு இயக்கம் எந்த அளவுக்கு பணியாற்றியுள்ளது? (3) கூட்டுறவு இயக்கத்தில் பிற்போக்கு சக்திகளை எந்த அளவுக்கு ஒழிக்கமுடியும்? (4) கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பு, நடைமுறைகள் ஆகியவற்றை இன்னமும் எந்த அளவுக்கு எளிதாக ஆக்க முடியும்? (5) நிலமற்ற விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கடன் வழங்கி, சிறந்த வேலை வாய்ப்பு அளிப்பதில் கூட்டுறவு இயக்கம் எந்த அளவுக்கு பணியாற்ற முடியும்? (6) விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கு கூட்டுறவு இயக்கம் எந்த அளவு உதவி அளிக்க முடியும்? என்பது பற்றியும் கவனிக்கவேண்டும்.

விவசாய உற்பத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சிறந்த சாதனமாக கூட்டுறவு இயக்கம் விளங்குகிறது.

### திரு எம். எஸ். குருபாத சாமி

மத்திய அரசு உணவு வேளாண்மை, சமுதாய நலத்திட்டம் கூட்டுறவுத்துறை ராஜாங்க அமைச்சர் திரு எம். எஸ். குருபாதசாமி இரண்டு நாட்களும் மாநாட்டில் உரையாற்றினர்.

[—20-ம் பக்கம் பார்க்க.]

# இலட்சியச் சின்னம்

"எங்கள் கிராமமான நாடிபுடியில் உங்களை மிகவும் கவர்ந்தது எது?", என்று கேட்டார் திரு காளா வெங் கடராவ்.

ஆந்திர மாநிலத்திலுள்ள கிழக்கு கோதாவரி மாவட்ட ஜில்லா பரிஷத் செயலாளர் அவர். காளா வெங் கடாரவின் சொந்த ஊரான நாடிபுடி யில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு திரும்பிய போதுதான் அவரைச் சந் திக்க முடிந்தது, அப்பொழுதுதான் அவர் மேற்கண்டவாறு கேட்டார்.

"நாடிபுடி பல்நோக்கு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம்தான்" என்று தயக்கமில்லாமல் என்னுல் பதில் சொல்ல முடிந்தது.

ஆமாம், நாடிபுடி பல்நோக்கு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் அந்த அளவுக்கு சீரிய முறையில் பணியாற்றி வருகிறது. இன்னும் சொல்லுவதென்றல் நாடிபுடி ஊராட்சி மன்றத்தின் சாதனையைவிட நாடிபுடி பல்நோக்கு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்தின் சாதனை கள் தாம் அதிகம். அந்தக் கிரா மத்தில் முன்னேற்றத்திற்கு முழு முதற் காரணமாக இருப்பது இந்தக் கூட்டுறவுச் சங்கம்தான்.

### தனித்தியங்கும் சங்கம்

1964-ஆம் ஆண்டில்தான் நாடிபுடி கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் தொடங்கப்பட்டது. தொடக்க காலத் தில் 60 உறுப்பினர்கள்தான். அவர் களுடைய பங்காகச் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 535. இப்பொழுது அச்சங்கத்தின் உறுப்பினர்கள் 500. அவர்கள் மூலதனமாக செலுத்தி யுள்ள பங்குத் தொகை ரூ. 3,817.

விவசாயிகள், விவசாயிகள் அல் லாதவர்கள் முதலியோருக்கு பல வகையிலும் இச்சங்கம் உதவுகிறது. வேறு எந்த அமைப்பின் உதவியில் லாமல் தனித்து இயங்குகிறது இச் சங்கம்.

### கடன் வழங்கும் சிறந்த சங்கம்

நாடிபுடி கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் மேற்கு கோதாவரி விற்பனை கழகத்தில் கிளை நிறுவனமாக இருந் தும் பணியாற்றுகிறது. இரசாயன உரங்கள், பொறுக்கு விதைகள் மற்றும் வேளாண்மைக்குத் தேவை யானப் பொருள்களை நாடிபுடி ஊராட்சி சார்பிலும், மேற்கு கோதா வரி விற்பனைக் கழகச் சார்பிலும் வழங்குகிறது. இதில் மிகவும் குறிப் பாகச் சுட்டிக்காட்ட வேண்டியது நாடி புடி பல்நோக்கு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்திற்கு அதன் உறுப்பினர் யாரும் அளவுக்கு மீறிய கடன் பாக்கி வைப்பதில்லை. இந்த சங்கம்தான் மேற்கு கோதாவரி மாவட்டத்தின் சிறந்த கடன் வழங் கும் கூட்டுறவுச் சங்கமாக 1960-61-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டது.

1965-66-ம் ஆண்டில் இந்தச் சங் கம் அதன் உறுப்பினர்களுக்கு மட்டும் ரூ. 27,800 கடன் கொடுத் துள்ளது.

விவசாயிகள் தங்களுடைய உற்பத் திப் பொருள்களை விற்பனைச் செய்ய வும் இந்தக் கூட்டுறவுச் சங்கம் பெரு மளவில் உதவிகளை செய்துள்ளது. உணவு தானியங்களை பாதுகாப்பாக வைப்பதற்காக ரூ. 14,000 செலவில் ஒரு கட்டிடத்தையும் கட்டியுள்ளது.

### நீங்காத பற்றுள்ள தலைவர்

சுருக்கமாகச் சொன்னுல் நாடிபுடி விவசாயிகளின் பொருளாதார மேம் பாட்டுக்கு பல்வகையிலும் உதவி யுள்ளது. கூட்டுறவு இலட்சியத்தில் நீங்கா பற்றுடைய திரு நெக்கண்டி வேங்கட ஜனர்த்தனராவ் அவர்கள் இச்சங்கத்தின் தலைவராக பணியாற்று கிறர்.

வேளாண்மைக்கு நாடிபுடி பல் நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆற்றும் உதவிகளால் அப்பகுதியில் புதிய மறு மலர்ச்சி தோன்றிவிட்டது.

நாடிபுடி ஊராட்சி மன்றமும், நாடி புடியின் வளர்ச்சிக்கு பல்வகையில் துணை புரிந்துள்ளது.

ஆந்திர மாநிலத்தில் மேற்கு கோதவரி மாவட்டத்தில் போடூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நாடிபுடி ஊராட்சி, நாட்டிலுள்ள ஊராட்சிகள் அனைத்துக்கும் சிறந்த எடுத்துக்காட் டாக விளங்குகிறது. இலட்சியச் சின் னமாக காட்சி அளிக்கிறது.

விவசாயத் துறையில் நாடிபுடி ஊராட்சி ஆற்றியுள்ள பணிகள் ஏராளம். வேளாண்மையில் புதிய

[—45-ம் பக்கம் பார்க்க]

முதலமைச்சர்கள் மாநாடு—18-ம பக்கத் தொடர்ச்சி.

''ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை எய்தும் முயற்சியில் புதிய அமைப்புகள் ஏற்படுத்தப்படுகிறதே தவிர, அவற்றின் திறமையில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்றும், இதன் விளைவாக கூட்டுறவுத்துறையின் சாதனை புள்ளி விவர ரீதியில் பிரம்மாண்டமானதாகத் தோன்றினாலும்-உயரிய, கூட்டுறவு இலட்சிய உணர்வு போதிய அளவு புலப்படவில்லை'' என்று திரு குருபாதசாமி கூறினார்.

பலதரப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் பெருகியுள்ளனவே தவிர, அவற்றில் பெரும்பாலானவை பொருளாதார ரீதியில்கட்டுப்படியானவையல்ல. மூன்றுவதாக, கூட்டுறவு இயக்கத்தின் பல முனை வளர்ச்சிக்கு ஏற்ற நிர்வாக, மேற்பார்வை அதிகாரிகள் அமைப்பு உருவாகவில்லை என்றும், இந்த குறைபாடுகளின் விளைவாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்க உதவியை நம்பியிருக்கும் நிலை இருக்கிறதே தவிர சுய பலமுள்ளதாக இல்லை'' என்றும் கூறினார்.

''கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன் தொகையில் பெரும்பகுதி அதிக வருமானமுள்ள விவசாயிகளுக்கே போய்ச் சேருகிறது என்ற புகார் பற்றிக் குறிப்பிட்டு'' அதற்கு விளக்கம் கூறுகையில் ''விவசாயக் கடன் முறை, நாட்டில் உள்ள நில உடைமை முறையைப் பொறுத்தே இருக்கும் என்றும், நம் நாட்டின் நில உடைமை முறை சிறிய விவசாயிகளுக்கு சாதகமாக இல்லை'' என்றும் கூறினார். 'மேல்தளத்தில் உள்ள 6·4 சதவிகித சாகுபடியாளர்களிடம் 22·4 சதவிகித நிலம் இருக்கிறது. அடிமட்டத்தில் உள்ள 16 சதவிகிதத்தினரிடம் 4·6 சதவிகித நிலம்தான் இருக்கிறது. இதனால் உற்பத்தியுடன் இணைக்கப்படும் கடன் முறையில் பெரிய விவசாயிகளுக்குத் தரப்படும் கடன் தொகை அவர்களது எண்ணிக்கை அடிப்படையில் சேர வேண்டியதைவிட மிக அதிகமாக இருப்பது இயற்கையே'' என்றார்.

கூட்டுறவுச் சங்கங்களில் ஏகபோகத்தைத் தடுக்க பதவியைப் பொறுத்த வரையில் காலவரையறையை ஏற்படுத்தலாமென அவர் ஆலோசனை வழங்கினார்.

## மாநாட்டு முடிவுகள்

முதலமைச்சர்கள் மாநாட்டு முடிவுகளை ஒவ்வொரு நாளும் செய்தியாளர்களிடம் மத்திய அரசு உணவு, வேளாண்மை சமுதாய நலத்திட்டம், கூட்டுறவு ராஜாங்க அமைச்சர் திரு எம்.எஸ். குருபாதசாமி தெரிவித்தார்,

சமுதாய நலத்திட்டம், ஊராட்சி முறையை தொடர்ந்து நீடிப்பதென முதலமைச்சர்கள் முடிவெடுத்தனர்.

கிராமங்களின் நலன், வளர்ச்சி, அவ்விரு திட்டங்களையும் தீவிரப்படுத்துவதென்று முடிவு எடுக்கப்பட்டது.

இணக்கமான கிராம வளர்ச்சிப் பணிக்காக, சமுதாய நலத் துறை முன்பு தாக்கல் செய்த கொள்கை அறிக்கையை முதல்வர்கள் அனைவரும் பொதுவாக ஒப்புக்கொண்டனர்.

சமுதாய நலத் திட்டம், ஊராட்சி அமைப்பு முறைக்கு கூடுதலாக ரூ. 150 கோடி ஒதுக்கும்படி முதலமைச்சர்கள் கோருவார்கள்.

சமுதாய நலத்திட்டம், ஊராட்சி முறை ஆகிய இரு திட்டங்களுக்கும் ஒரு வட்டார வளர்ச்சிப் பகுதியில் உள்ள மக்களுக்கு ஒருவருக்கு 2 ரூபாய் வீதமும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைவாழ் மக்கள் ஆகியவர்களுக்கு ஒருவருக்கு 4 ரூபாய் வீதமும் நிதி ஒதுக்க வேண்டும் என்று கூறப்பட்ட கருத்தை மாநாடு கவனத்தில் கொண்டு, மலைவாழ் மக்கள் (பழங்குடி மக்கள்) பெரும்பான்மையான உள்ள வட்டார வளர்ச்சிப் பகுதிகளுக்கு தனிக் கவனம் தேவை; திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது இதைச் செய்ய வேண்டும்; சமுதாயத்தில் பலவீனமான பகுதியினருக்கு போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்; இவைகளை பரிசீலித்து முடிவு செய்ய ஓர் ஆய்வுக்குழு தேவை என்றும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது,

முதல் கட்ட, இரண்டாவது கட்ட வளர்ச்சியில் உள்ள வட்டாரங்களுக்கு தற்சமயம் கிடைக்க வேண்டிய நிதி உதவி தொடர்ந்து கிடைக்க வகை செய்யவேண்டும் என்றும் கருதப்பட்டது.

ஊராட்சி முறை

மக்களாட்சி முறையின் அடிப்படைக்கும் நல்வாய்ப்பாக அமைந்துள்ள ஊராட்சி முறை நீடிக்கவேண்டும்.

ஊராட்சி அமைப்புகள் இரண்டு இரண்டு அடுக்காக இருக்கவேண்டுமா, மூவடுக்கா இருக்க வேண்டுமா என்பதை மாநில அரசுகளின் விருப்பத்திற்கே விட்டுவிடுவதென்றும் கருதப்பட்டது. மருத்துவமனை தேவைப்படாத குடும்பக்கட்டுப்பாடு பணியை சமுதாய நல அமைப்புகளிடம் அளிக்கலாம் என்றும் கூறப்பட்டது.

கூடுதல் வருவாயைத் திரட்ட, ஊராட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு, மாநில அரசு உதவ வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது.

கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்த....

இரண்டாம் நாள் மாநாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் குறைகளை களைவது பற்றி முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டுறவு இயக்கம் நன்கு நிலை பெறாத இடங்களில், ஆரம்பச் சங்கங்களுக்கும், மத்திய சங்கங்களுக்கும் விரைவில் விறுவிறுப்பு ஊட்ட வேண்டும் என்றும் கூட்டுறவு வசதிகள் போதிய அளவு இல்லாத இடங்களில், விவசாய கடன் வசதி கார்ப்பரேஷன் போன்ற மாற்று வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

உற்பத்தித் திட்டங்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் அளிக்கப்படும் உதவி போதிய அளவுள்ளதாக இருக்கவேண்டும்.

சிறிய விவசாயிகளுக்கும், வசதி குறைந்தவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படக் கூடியதாகச் செய்யும் வகையில், மாறுதல்கள் ஏற்படுத்த வேண்டும். கடன் வழங்குவதற்கு சொத்துக்களை அடிப்படையாகக்கொள்வதற்குப் பதிலாக இந்தக் கடன் உதவியால் உற்பத்தி எவ்வளவு பெருகும், கடனைத் திருப்பித் தருவதற்கான சக்தி எவ்வளவு அதிகரிக்கும் என்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் கடன் கொடுக்கும் பணத்தில் ஒரு பகுதி திரும்பி வராமற் போகும் அபாயமும் இருக்கிறது. இதை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்க வேண்டும்,

காலா காலத்தில் சிரமமின்றி போதிய கடன் வசதி கிடைக்கச் செய்யவேண்டி, கடனுதவி கொள்கை, நடைமுறை, கடனுதவி வரம்பு ஆகியவற்றில் கடுமையைக் குறைக்க வேண்டும்.

சுய நல உரிமையாளர்களின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்காக பல நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் சிறிய விவசாயிகளுக்கும், வசதியற்ற பிரிவினருக்கும் இடங்கள் ஒதுக்கவேண்டும். ஒருவர் ஒரே நிறுவனத்தில் இரண்டுமுறைக்கு மேல் பதவி வகிப்பதையும், ஒரே சமயத்தில் இரண்டு நிறுவனங்களுக்கு மேல் பதவி வகிப்பதையும் கட்டுப்படுத்த வேண்டும்.

சங்க நிர்வாகிகளுக்கு கடனுதவியளிப்பதை கட்டுப்படுத்தவேண்டும் அதிகாரிகள் மேற்பார்வையில் தேர்தல்களை ஒழுங்காக நடத்த வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்திலுள்ள கடனுதவி சங்கங்கள், நில வளர்ச்சிப் பாங்குகள், மார்க்கெட்டிங் சங்கங்கள், பண்டகசாலை சங்கங்கள் ஆகிய நான்கு பிரிவுகளில் முக்கியமான பணிகளுக்கு பொதுவான சிப்பந்திகள் பிரிவு ஒன்றை ஒவ்வொரு மாநிலமும் உருவாக்க வேண்டும்.

கூட்டுறவு கடன் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். சான்றாக சர்க்கரை ஆலைகள், மார்க்கெட்டிங் சங்கங்கள் போன்றவை உற்பத்தி பணிகளுக்காக, தனது உறுப்பினர்களுக்கு கடன் வசதி அளிப்பதை அனுமதிக்க வேண்டும்

தற்போது சங்கங்கள் வைத்துக் கொண்டிருக்கும் அதிகப்பற்றுகளின் அளவைக் குறைத்துக் கொள்ள மனப்பூர்வமாக முயல வேண்டும்.

கூட்டுறவு இயக்க நிறுவனங்களுக்கும் ஊராட்சி முறை அமைப்புகளுக்குமிடையில் இணைப்பு ஏற்படுத்த (ஒருவருக்கொருவர் பிரதிநிதித்துவம் அளிப்பதன் மூலம்) விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவு இயக்க ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கவும் விவரங்களை உணரவும் வேலை திட்டமொன்று வகுக்கப்பட வேண்டும்.

போலிச் சங்கங்களைக் கலைக்க கூட்டுறவு பதிவாளருக்குப போதிய அதிகாரம் அளிக்க வேண்டும். இதற்கான நடைமுறைகள் இலகுவாக்கப்பட வேண்டும். 'பம்பு செட்'டுகள் வைப்பதற்காக அளிக்கப்படும் கடனுதவியை, உற்பத்திக்கான கடனுதவி திட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டும்

அரசு துறைகள், நிறுவனங்கள் ஏஜென்சிகள் தரும் பிரச்னையில் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமை தர வேண்டும்.

### வரலாற்று சிறப்பு பெற்ற மாநாடு

சென்னையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாடு வரலாற்றுச் சிறப்புப் பெற்ற மாநாடாகும்.

இத்தனை ஆண்டுகாலம் சமுதாய நலத் திட்டம், கூட்டுறவு இயக்கம் ஆகிய துறைகளில் நாம் ஆற்றியுள்ள பணி, சென்றுள்ள தூரம், இலட்சியத்தை நோக்கி செல்ல வேண்டிய வழி, இடையே நேரும் இடையூறுகள் முதலியன பற்றி ஆராயும் வாய்ப்பைப் பெற்ற மாநாடு இது.

விவேகானந்தர், அண்ணல் காந்தியடிகள் முதலியோர், இந்தியாவின் எதிர் காலம் இந்நாட்டிலுள்ள கோடிக்கணக்கான கிராம மக்களின் மேம்பாட்டில் தானிருக்கிறது என்றார்கள்.

அந்த உத்தமர்களின் நல்லுரைக்கு செவி சாய்த்து—<br>
ஊராட்சி முறைக்கு மேலும் வலிவூட்டி—<br>
சமுதாயம் செழிக்க......<br>
கூட்டுறவு மூலம் நாட்டு உயர்வைக் காண......<br>
நாம் கொண்டுள்ள ஆள்வினை உடமை திருவினையாக்கும்.

'ஊழையும் உப்பக்கம் காண்போம்' வெற்றி நமதே-என்பதை நாட்டுக்கு எடுத்துரைத்ததுதான் சென்னையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாடு.

(மாநாட்டு படங்கள் இந்த இதழின் நடுப் பக்கங்களில்......)

விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்<br>
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்<br>
வருமானமும் போதுமானதல்ல.

## கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
* உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்<br>
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள்—இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்<br>
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்<br>
சென்னை "குறளகத்"தில் இயங்கும்<br>
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்<br>
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை.<br>
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.







படம் 1. மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாள் காணிக்கையாக அளிக்கப்படவிருக்கும் ஓராண்டுத் திட்ட வேலைகளில் கண்டுள்ள முன்னேற்றம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராம வளர்ச்சித் திட்டங்கள் பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் 5-6-1968-ல் விவாதித்தார்.

படம். 2 செங்கை மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், குண்ணவாக்கம் பள்ளிக் கட்டிடத்தை, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் 18—4—1968-ல் திறந்து வைத்தார்.

படம். 3 இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், துவார் கிராமத்தில், மாண்புமிகு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் சமுதாய நீர்ப்பாசனக் கிணறு ஒன்றினை, ஜூன் முதல் வாரத்தில், துவக்கி வைத்தார்.

படம். 4 ஜூன் மாதத்தில், சென்னையில், தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ் மக்களை, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்திய வாணிமுத்து அவர்கள், நேரில் சந்தித்து, ஆறுதல் கூறினர்.

படம். 5 சீரிய பணியாற்றி வரும் கோவை மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் சீரணிப் படையினரின் அணி வகுப்பை, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். பி. அம்புரோஸ், ஐ. ஏ. எஸ்., பார்வையிட்டார் (20-3-1968)













# அனைத்திந்திய முதலமைச்சர்கள் மாநாடு

(சமுதாய வளர்ச்சி- கூட்டுறவு பற்றி)













(11, 12, ஜூன் '68 — சென்னை நகரில்)

(சிறப்புக் கட்டுரை — இந்த இதழில்)

















படம். 1 சென்னையில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ் மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர், மாண்புமிகு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் (14-6-1968)

படம். 2 மாநில பழங்குடி மக்கள் புனர்வாழ்வுக்கான ஆலோசனைக் குழுவின் கூட்டம் சென்னை கோட்டையில், 1-6-1968 அன்று, மாண்புமிகு அரிசன நல-செயதித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

படம். 3 செங்கை மாவட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம். சிறுங்குன்றம் ஊராட்சி அலுவலகக் கட்டிடத்தை 16-4-1968 அன்று, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

படம். 4 திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், கேளம்பாக்கத்தில் 29-3-1968-ல். ஆரம்ப சுகாதார நிலையத்தை, உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ரங்காராவ், ஐ. ஏ. எஸ்., திறந்து வைத்தார். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. கே. எஸ். சுப்பிரமணிய முதலியார் தலைமை வகித்தார்.

படம். 5 தென் ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரம் நகரில், ரூ. 8,000 செலவில் கட்டப்படவிருக்கும் ஒரு பள்ளிக் கூடத்திற்கு வழிபாதை அமைக்கும் பணியை, சிரணிப்படையினர் செய்து முடித்தனர்.

**கடிதம் சொல்லும் நிகழ்ச்சி :**

# "இனியொரு விதி செய்வோம்"

**நெஞ்சிற்கினிய நண்ப !**

நெடுநாட்களுக்குப் பிறகு கடிதம் எழுதுகிறேன். 'அலுவல் மிகுதி ஆகவே எழுதமுடியவில்லை' என்ற வாடிக்கையான என் காரணம் உனக்கு வேடிக்கையாகத் தெரியும் என்பதால் அதை எழுதவில்லை. நான் எழுத நினைத்ததைப் பற்றியே எழுதத் தொடங்கி விடுகிறேன்.

முன்னறியா இன்பத்தை நான் அண்மையில் நுகர நேர்ந்தது. அந்த இன்பத்தையும் மகிழ்ச்சியையும் உன்னிடம் பங்கிட்டுக் கொள்ள விரும்பினேன். அதன் விளைவே இக்கடிதம்.

தமிழார்வம் மிக்க பலர் தலைமைச் செயலகத்தில் பணியாற்றி வருகின்றனர். அவர்களை ஊக்குவிக்கும் முறையிலும், தமிழுக்கு நற்றொண்டு ஆற்றவேண்டுமென்ற ஆர்வத்தாலும் தலைமைச் செயலக முத்தமிழ் மன்றம் உருப்பெற்றுள்ளது. கடந்த திங்கள் அதன் தொடக்க விழா நடைபெற்றது.

தொடக்க விழாவில் வரவேற்புரை நிகழ்த்திய மன்ற அவைத்தலைவர் திரு கோ. முத்துப்பிள்ளை அவர்கள் தமது வரவேற்புரையில் முத்தமிழ் மன்றத் தொடக்கத்தால் தாம் முன்னறியா இன்பத்தை அனுபவிப்பதாக கூறினார்.




இந்த விழாவில் கலந்து கொண்ட அரசு அலுவலர்கள் அனைவருமே முன்னறியா 'அந்த இன்பத்தை' அனுபவித்தனர். தமிழ் வளர்ச்சி இயக்குநர் தமிழ்ப் பெரும்புலவர் திரு மு. ரா. பெருமாள் முதலியார் அவர்கள் வாழ்த்துரையில் தமிழ் பெற்றுவரும் ஏற்றங்களை எடுத்துரைத்தார்.

முத்தமிழ் இசைச் சித்தர் சிதம்பரம் திரு எஸ். ஜெயராமன் அவர்களும் நடிப்பிசைப் புலவர் திரு கே. ஆர். இராமசாமி அவர்களும் இசை விருந்தளித்தனர். விழாவில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு சுகாதார அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள், வருகின்ற நாட்களில் மன்றம் திட்டங்கள் பல வகுத்துச் செம்மையான வகையில் தாமதமின்றி தமிழ்த் தொண்டாற்ற வேண்டும் என்று வாழ்த்துரைத்தார்.

விழாவின் சிறப்புக்கு ஒரு சிறப்பாய் அமைந்தது, உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்களின் சிறப்புரை.

"தமிழ்த்தாய்க்குரிய இடம் நாட்டிலே அளிக்கப்பட்டு வருகிறது என்பதன் அடையாளமே முத்தமிழ் மன்றம்; தமிழார்வம் தமிழ் உணர்வுகளாக உருவாகிவரும் நேரமிது" என்பதை அமைச்சர் அழகாக எடுத்துரைத்தார்.

"தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவுவதற்கு முன்பு உள்ளூரிலேயே நல்ல முறையில் தமிழோசையைக் கேட்க நாம் உழைக்க வேண்டாமா என்றும்" வினவினார்.

நியாயமான கேள்விதானே அது ?

"அதே நேரத்தில் 'தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவருக்கொரு குணமுண்டு' என்று நம்மிலேயே ஒருவர் இன்னொருவரிடம் சொல்ல அவர் "அப்படியா?" என்று வியப்புடன் கேட்டால் என்ன பயன் ? வெளிநாட்டார் அல்லவா நம்மைப் பற்றி அப்படி புகழ்ந்துரைக்க வேண்டும். அந்த நிலையை உருவாக்க வேண்டாமா ?" என்றார் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

"அரசு அலுவலகங்களில் பணியாற்றுவோரின் தமிழார்வமும், பற்றும், புலமையும் குடத்திலிட்ட விளக்காக இருந்தது போதும், இனியேனும் புதிய தமிழிலக்கியங்கள் தோன்ற வழிவகுப்போம்" என்றார் அமைச்சர்.

"அமைச்சர்கள் மட்டும் குறிப்புகளையும் பிறவற்றையும் தமிழில் எழுதினால் போதாது. அலுவலகங்களில் உள்ள அனைவரும் தமிழில் எழுத வேண்டும்" என்பதை அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அமரகவி பாரதியின் '**இனியொரு விதி செய்வோம்**' என்ற வரியை எடுத்துரைத்த உள்ளாட்சித் துறை அமைச்சர், "தமிழிலேயே நிர்வாக முறைகளையும் பணிகளையும் எழுதுவோம், தமிழிலேயே கையெழுத்திடுவோம் என்று நாம் விதி வகுத்துக் கொள்ளவேண்டும்" என்றார்.

"ஒவ்வொரு திங்களும் இன்ன இன்ன செலவுகளுக்கு என்று பணத்தை ஒதுக்கி செலவிடும் நாம், தமிழ் நூல்களை வாங்க திங்கள்தோறும் சிறு தொகையை ஒதுக்கக்கூடாதா ? இதனால் தமிழ் இலக்கியங்கள் வளர்ச்சி யடையவும், புதிய நூல்கள் வெளிவரவும் வாய்ப்புகள் உருவாகுமே" என்றார் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

ஆமாம் நண்ப! இனிமேல் ஒவ்வொரு திங்களும் தமிழ்ப் புத்தகங்களுக்கென ஒரு சிறு தொகையைச் செலவிட நான் முடிவு செய்துவிட்டேன். அமைச்சர் பேச்சின் விளைவு இது.

முத்தமிழ் மன்றத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்தார்.

அமைச்சரின் சொற்பொழிவில் அவருக்கே உரிய இலக்கிய உவமைகள், கலை நயமும் கருத்தாழ மிக்கதுமான காட்சிகளும் நிகழ்ச்சிகளும் நிறைந்திருந்தன என்று நான் எழுதுவது 'தேன் தித்திக்கும்', 'மல்லிகை மணக்கும்' என்று விளக்கம் தருவது போன்றதாகும்.

எப்படிப்பட்ட இலக்கியங்களுக்கு நாம் உரிமையாளர்கள் என்பதை அவர் தம் உரையில் எடுத்துரைத்தார். 'கேட்டார்ப் பிணிக்க கேளாரும் வேட்ப' அவர் எடுத்துரைத்த இலக்கிய காட்சிகள் ஏராளம் ! ஏராளம் !



திருக்குறளில் எல்லாச் சுவைகளையும் காணலாம் என்பதை அழகுற அமைச்சர் எடுத்துரைத்தார். தமிழ் மூதாட்டி—புறநானூற்றுப் பெருமாட்டி ஒருத்தியை அவர் படம் பிடித்துக் காட்டினார், அவருக்கே உரிய கவிதை வரிகளால் !

சுருங்கச் சொன்னால் அன்றைய மாலைப் பொழுது பயனுள்ள பொழுதாக இருந்தது.

திருக்குறள் கருத்துகள் ஓரங்க நாடகங்களாக வெளிவர வேண்டுமென்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் வலியுறுத்தினார்.

அரசு அலுவலர்களின் தாய்மொழிப் பற்று, நாட்டுக்கு நலம் பயக்கும் என்பதை முத்தமிழ் மன்ற தொடக்க நிகழ்ச்சிகள் எனக்கு அறிவுறுத்தின.

முத்தமிழ் மன்ற அமைப்புக் கூட்டங்களில் நடத்தப்பட்ட வெண்பாப் போட்டி, சொற்பொழிவுகள் முதலியவற்றில் சிறந்து விளங்கியவர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. அந்தக் காட்சிகளை பார்த்த பொழுதே அடுத்த முறை பரிசு பெறுவோர் பட்டியலில் நானும் ஒருவனாக இருக்க, முத்தமிழ் மன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடிவு செய்துவிட்டேன்.

'முத்தமிழ் மன்றம்'—அரசு அலுவலர்களிடையே தூங்கி கிடக்கும் தமிழார்வத்தைத் தூண்டிவிடும் தூண்டுகோல்.

குடத்திலிட்ட விளக்காக இருப்பவர்களை குன்றின் மீதிட்ட விளக்காக்கும் முயற்சி.

நண்ப, அரசு அலுவலகங்களில் பணியாற்றும் தமிழ்ப் பற்றுடையோர் தமிழை வளர்க்க 'இனியொரு விதி செய்வார்கள்' என்ற நம்பிக்கையின் அடையாளமே முத்தமிழ் மன்றம்.

தலைமைச் செயலகம் போல அரசு அலுவலகங்கள் அனைத்திலும் முத்தமிழ் மன்றங்கள் தோன்றும். தாய்மொழிப் பற்றுடையோர் தோற்றுவிப்பர் என்று நம்புகிறேன்.

உங்கள் அலுவலகத்திலும், தலைமைச் செயலகம் போன்று முத்தமிழ் மன்றம் ஒன்றினை அமைத்திட முயற்சி செய்வீர்கள் என்று எண்ணுகிறேன். என் ஆவலும் அதுதான் !

நான் நலம்; நாடலும் அஃதே அவண

பிற பின்,

**என்றும் உன்,**

**நம்பி.**

(குறிப்பு.—தலைமைச் செயலக முத்தமிழ் மன்றத் தொடக்க விழா பற்றிய கற்பனைக் கடிதம் இது.)



# பாரிவேருக்கு தனிச்சிறப்பு தருவது எது?

கட்டடக் கலைத்துறையில் முதன்மை வகிப்பவர்கள், நிர்மாணத் துறையில் அனுபவம் மிக்க பொரியியலாளர், உபயோகிப்பவர் எல்லோரும் பாரிவேரைப் பாராட்டிப் பேசுகின்றனர்.
செயல் திறன் காரணமாக ஒவ்வொரு வீட்டுக்கும் தனிச்சிறப்பு தரும் அவசிய அமைப்பாக அது இருப்பதை அனைவரும் போற்றுகின்றனர்.
பாரிவேர் விட்ரியஸில் நேர்த்திமிக்க தோற்றத்துடன் நீடித்த உழைப்பும் உறுதியும் சேர்ந்தமைந்துள்ளன — உபயோகத்தில் பூரண திருப்தியை அளிப்பது.
முத்துப் போன்ற வெண்ணிறத்திலும், மற்றும் ப்ரிம்ரோஸ், டர்க்காயிஸ் நீலம், ஆகாய நீலம், பீஜ், இளம்பச்சை வர்ணங்களிலும் இது கிடைக்கிறது.

● வழவழப்புடன் கூடிய பளபளப்பு ● நீரை உறிஞ்சாது
● பூரண சுகாதாரமானது ● விரிசல் விழாதது

பாரிவேர் விட்ரியஸ்தான் நவீன மோஸ்தர் வீட்டுக்கு முழுமை தருவது.

Parryware VITREOUS

(டி.ஜி.எஸ். அண்ட் டி.யினால் அங்கீகரிக்கப்பட்டது)
விரிசல் விழாத விட்ரியஸ் வெண் களிமண்ணைக் கொண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த டௌல்டன் அண்ட் கம்பெனியின் தொழில் நுட்ப ஆலோசனையுடன் தயாரிப்பது.

ஈ.ஐ.டி.—பாரி லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. உறுப்பினர் பொறுப்புவரையறுக்கப்பட்டது)
டேர் ஹவுஸ், சென்னை - 1.

FDSPW833T99

**வள்ளுவர் காட்டும் வழி—10-ம் பக்கத் தொடர்ச்சி.**

தமிழ் வளரவேண்டும் என்பதற்காக மளிகைக் கடைக் காரர்கள், ஜவுளிக் கடைக்காரர்கள் மேடையேறி முழங்க வேண்டுமென்று தேவையில்லை. இருந்த இடத்திலிருந்து கொண்டே அவர்கள் தமிழ் வளர்ப்பதில் அக்கறை காட்டலாம். ஜவுளிக்கடை என்று பெயர்ப் பலகையில் எழுதி வைப்பதற்குப் பதிலாகத் துணிக்கடை என்று எழுதலாம். பெட்டிக் கடைக்காரர் இத்தனை நயாபைசா என்று கூறுவதற்குப் பதிலாக இத்தனை புதுக்காசு என்று கூறலாம். இப்படி ஆங்காங்கே இருந்த இடத்திலிருந்தே தமிழை வளர்க்கலாம்.

**முழுமை பெறுவோம்:**

நம் இலக்கியத்தில் என்ன இல்லை, வீரம்—காதல்—பண்பாடு—வரலாறு அனைத்தும் இருக்கின்றன. தனி வரலாற்று நூலாக இல்லாவிட்டாலும் தமிழிலக்கியத் திலே வரலாறு பின்னப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இலக்கியங்களை நாம் காப்பாற்ற வேண்டும். இலக்கியங் களின் பெயர்களை மட்டும் தெரிந்து வைத்திருந்தால் போதாது. ஏதேனும் ஓர் இலக்கியத்திலாவது முழுமை பெற்றிருக்க வேண்டும்.

நம்முடைய திருக்குறளில், வாழ்வில்—வாழ்வால் விளையும் இன்பியல்—அதையொட்டி அரசியல் இவ்வளவும் கூறப்பட்டிருக்கிறது. திருக்குறள் இந்தியாவுக்கே தேசிய நூலாக வேண்டும்.

எம்மதமும் சம்மதமாய் ஏற்றுக்கொள்ளக்கூடிய திருக்குறள் இந்தியாவுக்கு மட்டுமல்ல, அகில உலகுக்கும் தேசிய நூலாகும் என்றார் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள்.

'ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி பொங்கல் விழாவில்' பொதுமறைக்குப் புவி முழுதும் புகழ்த்தேட வழி காட்டினர் அமைச்சர்கள்.

'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் மருத்துவத் துறையின் இளைய தலைமுறையினர், அமைச் சர்கள் வழிகாட்டிய பின்னர் வாளாவிருப்பார்களா?

---

**த**மிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் பணியாற்றுகின்ற ஊராட்சிகள், நூல் நிலையங்கள், செய்தி நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், மகளிர் மன்றங்கள் முதலிய பல்வேறு நிறு வனங்களுக்கெல்லாம் செல்லும் "கிராமநலம்" இதழில், கிராம மக்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றிய தகவல்களும், கிராமங்களில் தயாராகும் பண்டங்கள் பற்றிய விவரங்களும் விளம்பரங்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

## "கிராமநலம்" விளம்பரக் கட்டண விவரம்

| | | அவ்வப்போது வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு. (1) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. | குத்தகையாக ஒரே இட அள விற்கு (குறைந்தது 12 விளம்பரங்கள்). (2) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. |
|---|---|---|---|
| **இரண்டாவது, மூன்றுவது அட்டைப் பக்கங்கள் (ஒரே வண்ணத்தில்)** | | | |
| முழுப் பக்கம் | .. | 420 | 315 |
| அரைப் பக்கம் | .. | 215 | 165 |
| **நான்காவது அட்டைப் பக்கம் (இரண்டு வண்ணங்களில்)** | | | |
| முழுப் பக்கம் | .. | 450 | 325 |
| அரைப் பக்கம் | .. | 230 | 170 |
| **உள்பக்கம்—** | | | |
| முழுப் பக்கம் | .. | 400 | 300 |
| அரைப் பக்கம் | .. | 210 | 160 |

# கல்வெட்டுக்கள் கூறும் வரலாறு

இரா. நாகசாமி, எம்.ஏ.,
(இயக்குநர், தொல் பொருள் ஆராய்ச்சித் துறை, தமிழக அரசு)

தமிழ்நாட்டில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஊர்ச் சபைகள் பணிபுரிந்து வருகின்றன. அவை எவ்வாறு பணிபுரிந்தன என்பது வரலாற்று ஆசிரியர்களுக்குத் தெரியும். சிலருக்கு உத்தரமேரூர் ஊராட்சி கல்வெட்டைப் பற்றியும் தெரியும். ஆனால் இன்று இருப்பது போல் பத்திரம் பதிவு செய்வது அக்காலத்தில் இருந்ததா? ஊர் நிலங்களுக்கு எல்லைகள் எவை என்று குறிக்க (ரிஜிஸ்டர்கள்) பதிவுப் புத்தகங்கள் உண்டா? ஊர் கணக்குப்பிள்ளை என்ன வேலைகளைச் கவனித்தார்? ஊரில் உள்ள வீடுகளுக்கு வரி உண்டா? குளம், ஏரி முதலிய வற்றிலிருந்து பாயும் நீர்க்கு வரி உண்டா? அதை யார் வசூலித்தனர்? ஓர் ஊர் நிலத்தில் என்ன என்ன பயிர்கள் செய்யப்பட்டன? ஓராண்டுக்கு ஒரு வேலி நிலத்துக்கு வரும் குத்தகை எவ்வளவு? அக்காலத்தில் ஒரு போகம் பயிர் செய்தல், இருபோகம் பயிர் செய்தல் முதலியன தெரியுமா? இது போன்ற விவரங்களை நம் முன்னோர் குறித்து வைத்துள்ளரா என்று ஐயம் எழும். சுருங்கச் சொன்னால் மக்களுடைய சாதாரண வாழ்வைக் குறிக்கும் நூல்கள் உண்டா என்று கேட்கலாம்.

உண்டு. ஒவ்வொரு ஊர்ப்பற்றியும் அவ்வூ ரில் இருந்த நிலம், வாய்க்கால், அவற்றின் பெயர் முதலியவை களைப் பற்றி கூறும் குறிப்புகள் உள்ளன. இவை அனைத்தும் அந்தந்த ஊர்களில் காணப்படும் கல்வெட்டு களில் உள்ளன. தமிழகத்தில் இதுவரைக் கண்டுள்ள கல்வெட்டு கள் 25,000. இன்னும் படி எடுக்க வேண்டியவை எவ்வளவோ! மன்னன் உத்தரவிட்டால் அது எவ்வாறுபதிவு செய்யப்பட்டது, ஊர்ச்சபை ஒரு நிலத்தை விற்றால் அது எவ்வாறு பதிவு செய்யப்பட்டது. முதலியவற்றைப் பற்றி கல்வெட்டுகள் குறிப்பதை ஈண்டு காணலாம்.

அக்காலத்தில் கோயில்கள் ஊர்களின் உயிர்நாடியாக விளங்கின. எனவே கோயில்களுடன் தொடர்புடைய நிலங்களைப் பற்றி இவற்றில் குறிப்புகள் காணப்படுகின்றன. இருப்பினும் ஏனைய நிலங்களைப் பற்றிய பதிவு முறைகளும் இவை போன்றவையே. மன்னன் ஒரு நிலத்தை கோயிலில் வழிபாட்டுக்காக தானம் அளித்தான் என்று வைத்துக் கொள்வோம்.

மன்னன் இத்தானத்தை அளித்தபோது எந்த ஊரில், எந்த மாளிகையில் தங்கியிருந்தான்? அவன் அமர்ந்திருந்த ஆசனத்தின் பெயர் என்ன முதலிய விவரங்கள் பல கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.

உதாரணமாக கீழ்வரும் கல்வெட்டைப் பார்க்கலாம்.

"உடையார் ஸ்ரீசுந்தர சோழபாண்டிய தேவர் ராஜேந்திர சோழபுரத்துக் கோயிலுள்ளால் ஆட்டத்து வெளிமேலை மண்டபத்து எழுந்தருளி இருந்து...."

என்று ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட கல்வெட்டு ஒன்று குறிக்கிறது. இக்கல்வெட்டில் இராஜேந்திர சோழபுரத்துக் கோயில் என்பது இராஜேந்திர சோழ புரத்து அரச மாளிகையைக் குறிக்கும். இதே போல் பாண்டியன் ஸ்ரீவல்லபன் என்ற மன்னனின் கல்வெட்டும் உள்ளது. அதில் "சக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லபதேவர் மாடக் குளக்கீழ் மதுரைக் கோயிலில் உள்ளாலை

உலகத்தின் பல பகுதிகள் நாகரிகம் என்றால் என்ன என்றே அறியாத காலத்தில், நயத்தக்க நல்வாழ்வு கண்டு வாழ்ந்தவர்கள் தமிழ் மக்கள். பண்டைத் தமிழகத்தின் அந்தப் பொற்காலம் வரலாற்று ஆசிரியர்களால் புகழ்ந்துரைக்கப்படுகிறது. சீர் பெற்ற வாழ்வு, பேர் பெற்ற புகழ், வேர் பெற்ற பழக்க வழக்கங்கள், ஊர் பெற்ற ஆட்சி முறை அத்தனையும் எத்தனைச் சிறப்பு பெற்றவை என்பதை நமக்கு விளக்கும் காலக் கண்ணாடிகளாக இருப்பவை கல்வெட்டுகள்.

அந்தக் கல்வெட்டுகள் கூறும் வரலாற்றை இங்கே நமக்குத் தொகுத்து தொடர்க் கட்டுரையாகத் தர முன்வந்திருக்கிறார், தமிழக அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநர். —ஆசிரியர்.

நாடகசாலையில் பள்ளிக்கட்டில் பாண்டியராயனில் எழுந் தருளிஇருந்து" என்று காணப்படுகிறது. இதிலிருந்து மதுரையில் மன்னனுடைய மாளிகை மாடக்குளத்தில் இருந்தது என்றும், அதில் நாடகசாலை ஒன்று இருந்தது என்றும் அறிகிறோம். பள்ளிக்கட்டில் பாண்டிராயன் என்பது அரசன் அமர்ந்திருந்த அரசகட்டிலின் பெயராம். இதுபோன்று அரசன் இருந்த மாளிகை, இடம், கட்டில் முதலியவற்றைக் குறிக்கும் கல்வெட்டுகள் நூற்றுக்கணக் கில் உள்ளன.

அரசன் இட்ட உத்தரவைப் பதிவு செய்ய பல அதிகாரிகள் இருந்தனர். இவர்களுக்கு பல பெயர்கள் இருந்தன. அரசன் நன்கு எழுதப்படிக்க கற்றிருந்தவன் ஆயினும், அவன் வாய்மொழியாகவே ஆணை இடுவன். அதைக் கேட்டு உரிய, வாசகங்களை இட்டு ஓலையில் எழுது பவனுக்கு திருமந்திர ஓலை என்று பெயர். அவர் எழுதிய வாசகங்கள் சரியாக உள்ளனவா இல்லையா என்று ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் உண்டு. அவர்களுக்கு திருமந்திர ஓலைநாயகம் என்று பெயர். அவர்கள் ஒப்பிட்டு புகுந்ததை, அந்தந்த ஊர்களுக்குரிய பொத்தகங்களில் எழுதும்படி ஆணையிடும் அதிகாரிகள் உண்டு. அவர்களுக்கு விடையில் அதிகாரிகள் என்று பெயர். இவர்களையே 'புரவுவரிதிணைக் களம்' என்றும் குறிப்பர். இவ்வதிகாரிகளை கண்காணிப் பவர்களும் உண்டு. அவர்களை 'புரவுவரிதிணைக்களத்து கண்காணி' அல்லது 'புரவுவரிதிணைக்களத்து நாயகம்' என்பர். இவர்கள் இட்ட ஆணையை 'புரவுவரிதிணைக்களப் பொத்தகக் கணக்கு' என்ற அதிகாரி வாசிப்பார். அதை வரியிலிடுபவர்க்கு 'கீழ்க்கணக்கு' என்று பெயர். இதுதவிர "பட்டோலை எழுதுதல்" என்ற பணியும் உண்டு. அவ்வதி காரிக்கு "முகவெட்டி" அல்லது 'பூட்சி பாட்டம்" என்ற பெயர் காணப்படுகிறது.

இதிலிருந்து ஓர் உண்மை பெறப்படும். அதிகாரிகளின் பதவிப் பெயர்கள் அவர்கள் பணியாலேயே அழைக்கப் பட்டதைக் காண்கிறோம். உதாரணமாக எழுதுபவர்க்கு 'கணக்கு' என்று பெயர் இருந்தது. 'கணக்கர்' என்ற பெயர் இல்லை. அதேபோல் 'திருமந்திர ஓலை' (ஓலையர் அல்ல) புரவுவரி திணைக்களம், என்று பதவிப் பெயர்களைக் காண்கிறோம். அதுதவிர ஒவ்வொரு அதிகாரிகளைப் பற்றியும் ஊர், குடி முதலிய முழு விவரங்களும் குறிக்கப்பட்டிருக்கும். உதாரணமாக ஒரு புரவுவரி திணைக் களத்து அதிகாரியின் பெயர் "க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு, வேளா நாட்டு, பொம்புன்றூர் கிழவரான வீர ராஜேந்திர தமிழதரையர்" என்று காணப்படுகிறது.

கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலுக்கு, வீர ராஜேந்திரசோழர் சில நிலங்களை அளித்தார். அவை அவர் தந்தையான முதலாம் இராஜேந்திர சோழருடைய ஆட்சியாண்டு 24-வது முதலே அமுலுக்கு வர ஆணை யிட்டார். அவ்வாணை எவ்வாறு எழுதப்பட்டது என்று உதாரணமாக இங்கு காணலாம்.

"கோ இராஜகேசரி வன்மரான உடையார் ஸ்ரீ வீர ராஜேந்திர சோழ தேவர் காஞ்சிபுரத்துக் கோயிலுனுள் ளால் திருமஞ்சனச் சாலையில் தானம் பண்ணி

எழுந்தருளா நிற்க

கங்கைகொண்ட சோழீச்சுரமுடையார்க்கு பூர்வதேசமும்

கங்கையும் கடாரமுங்

கொண்டருளின அய்யர்க்கு யாண்டு 24-வது முதல்

இறுப்பதாக

தேவதான பிரும்மதேய இறையிலியாக

வரியிலிடத் திருவாய்மொழிந்தருளினுர்

என்று

திருமந்திர ஓலை

ராஜேந்திர பல்லவரையந் எழுத்தினுலும்

ஓலைநாயகம்

வாணதிராஜனும், மதுராந்தக பிரும்மராஜனும்,

பிரும்மாதி ராஜனும் ஒப்பிட்டு புகுந்த கேழ்விப்படியே

வரியிலிட

வீரசோழ மண்டலத்து முற்கை வல்லநாட்டு பிடகமான

பிராந்தகச்சதூர் வேதிமங்கலத்து

தேவர்க்குதாநாமாக வரியிலிட்டபடியும்

புரவுவரித்திணைக்களம்

மேற்படியார்களும்

வாசித்த வரிப்பொத்தகணக்கு

அத்திப்புலியூருடையானும்

புரவுவரித்திணைக்களத்து விசக்கணக்கு கீழ்க்கணக்கு

நாவலூருடையான் மந்மநாபந் சங்கனும்

பட்டோலை எழுதின புரவுவரித்திணைக்கள முகவெட்டி

அருமொழி தேவவளநாட்டு செல்லூர் நாட்டுச்

சொல்லூருடையான் கோணல் ஆதித்தனும்

வரியிலிடுவித்த புரவுவரித்திணைக்களம்

நிருபமாத்தாண்ட மூவேந்த வேளானும் இருந்து

யாண்டு ஐந்தாவது, நாள் முந்நூற்று நாற்பத்தெட்டி

நால் வரியிலிட்டது"

அரசனின் ஆணை எவ்வாறு உரிய பொத்தங்களில் எழுதப்பட்டது என்பதற்கு சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட மேற்படி கல்வெட்டு சாட்சி

## சத்திய விஜயநகரத்தின் சாதனை

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1966–67-ம் ஆண்டில், மாவட்ட அளவில் சிறந்த முறையில் பணியாற்றியமைக்கு முதற்பரிசாக ஆரணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, சத்திய விஜய நகரம் கிராம சேவகி, செல்வி சுந்தரதாஸுக்கு 24—4—1968-ம் நாள் வேலூரில் நடைபெற்ற வட, தென் வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி. எம். பெல்லியப்பா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில், பெரணமல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு அண்ணாமலை கவுண்டர் அவர்களால், பாராட்டுப்பத்திரம் அளிக்கப் பட்டது.

ஏற்கனவே, சத்திய விஜய நகரத்தில் சிறந்த முறையில் வானொலிமன்றம் இயங்கி வந்தமைக்கு ஒரு சுழற் கேடயமும், டிரான்சிஸ்டர் ரேடியோவும் சென்ற ஆண்டு இறுதியில் நடைபெற்ற வானொலி மன்றக் கருத்தரங்கில் பரிசாக அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பகர்கிறது. மொழிந்தருள, எழுத, ஒப்பிட, வரியிலிடு வித்த, வரியிலிட்ட, என்ற எளிமையான தமிழ்ச் சொற்கள் எவ்வளவு சிறப்பாக பதிவு முறையில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன என்று காணுங்கள்.

இதுமட்டுமா. கீழ்க்கண்ட சொற்றொடர்களைக் காண்க.

காா்மறு நிலம்
இரண்டு பூ விளையும் நிலம்
ஒரு பூவிளையும் நிலம்
நஞ்செய்
புன்செய்
வரகு விளையும் நிலம்
மஞ்சள் விளையும் நிலம்
எள்ளு விளையும் நிலம்
தானசாலை நிலம்
தெங்கும் மாவும் நின்ற நிலம்
தெங்கும் மாவும் வைத்த நிலம்
மாந்தோட்டம்
சுற்றுத்தெங்கு வைத்த தோட்டம்
சுற்றுத் தெங்கு கொடித் தோட்டம்
கமுகுத் தோட்டம்
மஞ்சள் தோட்டம்
கரிதளையும் (கருணை) வழுதலையும் (கத்தரி) நடலாந்தோட்டம்
இவ்வூர் நிலத்தை ஊடறுத் துப்புறவூர்க்குப்பாயும் வாய்க்கால் இவ்வூர் நிலத்தாறே போன.....பேராறு
இவ்வூர் ஆற்றுக்குலை உடைந்து ஏரியாய் நீர்க்கோப்பாய் நின்ற இடம்

இவை கல்வெட்டுகளில் காணப்படும் சொற்றொடர் களாகும்.

இவை தவிர ஒரு கல்வெட்டில் கீழ்க்கண்டவாறு குறிக்கப்பட்டுள்ளது. "நன்செய், புன்செய், நத்தம், குளம், குளப்பரப்பு, காடு, களர், திடர், ஏரி, நீர்நிலை, மரநிலை, ஆற்றுக்கால், ஊற்றுக்கால் உள்ளிட்ட" என்று காண்கிறோம். தமிழ் சொற்களை எவ்வாறு ஆட்சியில் கையாண்டிருக்கிறார்கள் என்று இன்னம் எவ்வளவோ வகைகளில் கல்வெட்டுக்களிலிருந்து காணலாம்.


தொலை பேசி எண் 118

# ஆர். மனோகரன் அண்ட் கம்பெனி,

2, வடக்கு ரத வீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

விநியோகஸ்தர்கள் :

- கிர்லாஸ்கர் டீசல் ஆயில் என் ஜின்கள்
- கிர்லாஸ்கர் மின்சார பம்பு செட்டுகள்

1. வீரிய ஒட்டுச் சோளம், வீரிய ஒட்டு கம்பு விதைகள்.

- நில அடமான வங்கி கடன்களுக்கும் சப்ளை செய்கிறோம்.

- பாரி கம்பெனி உரங்கள்
- பாரி கம்பெனி பூச்சி பூஞ்சாள மருந்துகள்.

2. பயிர்களுக்கு காண்டிராக்டாக பூச்சி பூஞ்சாள மருந்துகள் அடித்துக் கொடுக்கப்படும்.

"ஆதித்யா" பவர் ஸ்பிரேயர்கள்

卐

கிளை :

## ஆர். மனோகரன் அண்ட் கம்பெனி,

வத்திராயிருப்பு.

# தமிழக உழவரின் சாதனை

சேலம் மாவட்டத்தில் சிங்கவந்தாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு கே. ரங்கசாமி புரிந்துள்ள சாதனையைக் குறித்து அவர் மட்டுமல்ல தமிழகமே பெருமைப் படுகிறது எனலாம். ஓர் ஏக்கரில் 36 மூட்டை சோளம் அறுவடை செய்து ஒரு சாதனையை நிகழ்த்தினர் அவர். சாதாரண ரக சோளத்தை விதைத்திருந்தால் பத்துப் பன்னிரண்டு மூட்டைகள் தாம் கிடைத்திருக்கும்.

## புத்துலகு நோக்கி.....!

உயர் விளைச்சல் தரும் சி. எச். எஸ்-1 என்னும் நல்ல ரக சோள விதைகளைத்தான் திரு ரங்கசாமி பயன்படுத்தினர். இந்த சாதனைக்காக, தமிழக அரசின் 1966-67-ம் ஆண்டிற்குரிய இரண்டாவது பரிசாக ஆயிரம் ரூபாய் அவருக்குக் கிடைத்தது.

திரு கே. ரங்கசாமி, தமது ஏழு ஏக்கர் நிலத்தில் மரவள்ளிக் கிழங்கு, சாதாரண ரக சோளம், நெல் முதலியவற்றைப் பயிரிடுவது வழக்கம். இதில் அவர் தம்முடைய தந்தையாரையே பின்பற்றி வந்தார். சென்ற ஆண்டு, அவருடைய அண்டை நிலத்துக்காரர், சோளம் சாகுபடி செய்வதற்காக, வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகளின் உதவியுடன் திட்டம் ஒன்றைத் தயாரித்தார். இதையறிந்த திரு ரங்கசாமி, ஆவல் உந்த, பக்கத்து நில சொந்தக்காரரை அணுகி விவரம் கேட்டார், உள்ளூர் கிராம சேவக், திரு ரங்கசாமிக்கும் இன்னும் பத்துப் பேருக்கும் பண்ணைத் திட்டம் ஒன்றை தயாரித்துக் கொடுத்தார். அத்துடன், விதைகள் உரம், பூச்சி கொல்லி மருந்துகள் முதலியவற்றை அவர் பெறுவதற்கு உதவி, தகுந்த ஆலோசனையும் வழங்கினுர், அந்த கிராம சேவக்.

இரண்டாவது களையெடுப்பு நடந்ததையடுத்து மீண்டும் உரமிடப்பட்டது. அதன் பின்னர் என்ட்ரின் மருந்து தெளிக்கப்பட்டது.

அறுபதே நாட்களில் பயிர் மூன்றடி வளர்ந்து கதிர்கள் விட்டிருத்ததைக் காண, திரு ரங்கசாமிக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. இதைப் போன்றதொரு காட்சியை அதுவரையில் தாம் கண்டதில்லை என்று அவர் பெருமிதமடைந்தார்.

**அனுபவத்தின் அடையாளம்**

கதிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்வதற்கு பி.எச்.சி. பத்து சத விகித மருந்தைத் தூவினர். அதன்பிறகு, ஒரு முறை மழை பெய்தது. மூன்று முறை கிணற்றுப் பாசனம் செய்ததும் கதிர்கள்

# சோளம் தந்த பரிசு

ஜனவரி கடைசி வாரத்தில், மரவள்ளி பயிரிட்டு சாகுபடியான பிறகு, திரு ரங்கசாமி ஓர் ஏக்கர் நிலத்தை நான்கு முறைகள் உழுது, 25 வண்டி உரமிட்டு பண்படுத்தினர். அதன் பிறகு ஐந்தாம் முறையாக மீண்டும் உழுதார்.

**காலமறிந்து செய்த செயல்களால்........**

வட்டார விவசாயத் துறை அதிகாரியிடமிருந்து ஆறு கிலோ கிராம் தேர்ந்த விதைகளைப் பெற்று, அவற்றை பிப்ரவரி முதல் வாரத்தில் விதைத்தார். திரு ரங்கசாமி, இருபது நாட்களுக்குப் பிறகு களையெடுக்கும் வேலையில் 25 பெண்களை ஈடுபடுத்தினர். 40 கிலோ கலப்புரம் இட்டு நீர் பாய்ச்சப்பட்டது.

சுமார் முப்பது நாட்களுக்குப் பின்னர், பயிரைப் பூச்சிகள் தாக்கத் தொடங்கியதைக் கவனித்து, திரு ரங்கசாமி ஃபாலிடால், எகாடின் கலவை மருந்தைத் தெளித்தார். இந்த கட்டத்தில் நல்ல மழைபெய்து உதவிற்று.

முற்றி, மே திங்கள் மத்தியில் அறுவடைக்குத் தயாராக நின்றன.

அறுவடை செய்வதற்குப் பக்கத்து நிலக்காரரின் டிராக்டர் உதவியைப் பெறவேண்டியதாயிற்று என்று திரு ரங்கசாமி கூறினர். இந்த உயர் விளைச்சல் ரகம் அவருக்கு அரசாங்கப் பரிசைப் பெற்றுத் தந்தது. ஒரே போகத்தில் அவருக்கு நிகரமாக 1,250 ரூபாய் வருமானம் கிடைத்தது.

1966–67-ம் ஆண்டில் ஆயிரம் ரூபாய் பரிசு பெற்ற திரு ரங்கசாமி. 1967–68-ம் ஆண்டுக்கான அனைத்திந்திய விளைச்சல் போட்டியிலும் கலந்து கொள்ளவிருக்கிறார். வருங்காலத்தில் புதிய ரகங்களையே தொடர்ந்து பயன்படுத்தப் போவதாக அவர் கூறுவது அனுபவத்தின் அடையாளமல்லவா ?

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## வேலூர் நகராட்சி

இந்நகராட்சி, 1866-ம் ஆண்டு தொடங்கியது. முதல மைச்சர் திரு சி. என். அண்ணாதுரை, அவர்கள் தலைமையில் அண்மையில் இந்த நகராட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. பல முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

**தொடக்கக் கல்வி**:—இந்நகராட்சி 37 தொடக்கப் பள்ளி களை நடத்தி வருகிறது. மொத்தம் 230 ஆசிரியர்களும் ஆசிரியைகளும் பணியாற்றி வருகிறார்கள். நாள் தோறும் 2,000 பிள்ளைகளுக்கு மேல் மதிய உணவு அளிக்கப்பட்டு வருகிறது. அலுவலகத்தில் தூய்மையான முறையில் அமைக்கப்பட்ட சமையல் அறையில் உணவு தயாரித்து, "கேர்" நிறுவனத்தாரால் அளிக்கப்பட்ட எவர்சில்வர் பாத்திரங்களிலும், மூன்று சக்கர டெம்போ வான்களிலும், நாள் தோறும் உரிய காலத்தில் ஒவ்வொரு பள்ளிக்கும் உணவு கொடுக்கப்படுகிறது. இதுவன்றி "கேர்" நிறுவனத்தார் மதிய உணவு நிலையத்திற்கு வேண்டிய காய்கறிகள் தடையின்றி கிடைப்பதற்காக, ஒவ்வொரு பள்ளிக்கும் தோட்டக் கருவி களும், காய்கறி விதைகளும் கொடுத்து உதவி உள்ளனர். தொடக்கக் கல்விக்கு 1966-67-ம் ஆண்டு 4,28,538-ம், 1967-68-ல் 5,25,000 செலவழிக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

**சாலைகள்.**—இந்நகராட்சி 74·7 கிலோ மீட்டர் நீள சாலைகளை அமைத்து, 58·7 நீள சாலைகளை தார் சாலை சிமிட்டி சாலையாகவும் அமைத்து அவை நல்ல நிலைமையில் பாதுகாக்கப்படுகின்றன.

**விளக்கு வசதி.**—மொத்தம் 2,911 விளக்குகள் இந்நக ராட்சி எல்லையில் அமைக்கப்பட்டு உள்ளன. இவற்றில் 248 குழாய் விளக்குகள், 100 வாட்டு விளக்குகளில் 397, பாதரச விளக்குகள் 86 உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

615 பொதுக் குழாய்களும், 6,200 வீட்டுக்கு குழாய்களும் பயனில் இருந்து வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ரூ. 13.39 லட்ச செலவில் 6 அங்குல குடிநீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டு முடிவடைந்தது.

**அங்காடிகள்.**—ஏற்கனவே உள்ள நேதாஜி அங்காடியின் மேற்குப் பகுதியில் 16 லட்ச ரூபாய் செலவில் கடைகள் கட்டுவதற்காக, அரசுத் துறை மேற்பார்வை பொறியாள ரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணி தொடங்கும் தருவாயில் உள்ளது.

**உயர் நிலைக் கல்வி.**—பெண்களுக்கென தனியாக ஒரு கல்வி நிலையமும், மற்ற 4 உயர் நிலைப்பள்ளிகளுமாக 5 உயர் நிலைப் பள்ளிகள் ஆண்டு தோறும் ரூ. 3,52,000 செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

நகரில் துப்புரவு முதலியவற்றிற்காக 1967-68-ம் ஆண்டிற்கு 9,21,000 ரூபாய் செலவழிக்கத் திட்ட மிடப்பட்டு, செலவாகி வருகிறது.

## சிதம்பரம் நகராட்சி

சிதம்பரம் பழஞ்சிறப்பு வாய்ந்த திருத்தலமாகும். உலகப் புகழ் பெற்ற தில்லை நடராசர் ஆலயம் இங்கே உள்ளது. நகர எல்லைக்குக் கிழக்கே புகழ் மிக்க அண்ணாமலை பல்கலைக்கழகம் உள்ளது. இந்நகரில் 1872-ல் நகராட்சி உருவாகியது. அதிலிருந்து இதன் பரப்பு 1·84 சதுர மைலாகவே உள்ளது. 1961-வது ஆண்டு கணக்கெடுப்பின்படி, இந்நகரின் மக்கள் தொகை 40,740. தற்போது இரண்டாவது நிலை பெற்ற நகராட்சி யாக இயங்கி வருகிறது.

**அறிவு விளக்கப் பணி.**—இந்நகராட்சி, 12 ஆதாரக் கல்வி பள்ளிகளை நடத்தி வருகிறது. கொத்தங்குடித் தெரு விலும் மாணுதீட்சிதர் சந்திலும் நகராட்சி தனக்குச்சொந்த மான மனையில் ஒவ்வொன்றும் ரூ. 75,000 செலவில் அண்மையில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டியுள்ளது. மேலும் சம்பந்தக்காரத் தெருவில் நீண்ட நாள் (99 ஆண்டுகள்) குத்தகைக்கு எடுத்துள்ள மனையில் சுமார் ரூ. 20,000 செலவில் ஒரு பள்ளி கட்டியுள்ளது.

**பயணி விடுதிகள்.**—தற்போது 3 அறைகள் கொண்ட நக ராட்சிப் பயணிகள் விடுதியில் எப்பொழுதும் இட நெருக்கடி இருந்து வருவதால், சுமார் ரூ. 20,000 செலவில் மூன்று அறைகள் கொண்ட மற்றொரு பயணிகள் விடுதி அண்மையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

திறந்தவெளிக் கலையரங்கம்.—நகரின் எல்லை நுழை வாயிலின் அருகில் பொதுக் கூட்டங்கள், கலா நிகழ்ச்சிகள், நாடகங்கள் இவைகள் நடத்துவதற்கு அரசினரால் சுமார் 1½ ஏக்கர் நிலம் இனமாக நகராட்சிக்கு வழங்கப்பட்டு, அதில் சுமார் ரூ. 30,000 செலவில் திறந்த வெளி கலை அரங்கு கட்ட முடிவு செய்து விரைவில் கட்ட வேலை தொடங்க இருக்கிறது.

## விழுப்புரம் நகராட்சி

### துப்புரவு ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதி

தமிழக அரசின் கடன் மான்ய திட்டத்தில் இந் நகராட்சி மன்றம் அதன் துப்புரவு ஊழியர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித்தரும் பணியினை மேற்கொண்டு செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ் 84 வீடுகள் மொத்தம் ரூ. 1,94,000 மதிப்பீட்டுச் செலவில் கட்ட திட்டம் தயாரிக்கப்பட்டது.

அரசினர் இந்த 84 வீடுகளுக்கும் மான்யமாக ரூ. 42,000 கொடுத்துள்ளனர். மீதியுள்ள ரூ. 1,52,000. அரசினர் கடனுதவியுடன் கட்டி முடிப்பதென முடிவு செய்து இவ்வாண்டில் ரூ. 63,000 கடன் பெறப்பட்டுள்ளது.

84 வீடுகளில், 20 வீடுகள் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டு, தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இங்கே ரூ. 1,000 செலவில் ஒரு குடிநீர்க் கிணறு கட்டப்பட்டுள்ளது. மூன்று மின்கம்பங்கள் நட்டு, தெருவிளக்கு வசதியும் செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 64 வீடுகளும் துரிதமாக கட்டப்பட்டு வருகின்றன.

இந்நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி திட்டம் ரூ. 37·05 லட்சம் செலவில் அரசினரால் அனுமதிக்கப்பட்டு, அரசினர் கடன் திட்டத்தில் செயல்பட்டு வருகிறது. கூடிய விரைவில் இத்திட்டம் நடைமுறைக்கு வர விரைவில் ஆவன செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டம் செயலுக்கு வந்தால், நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும்.

## பெரியகுளம் நகராட்சி

இந் நகராட்சி எல்லைக்குள் உள்ள மலம், குப்பை முதலியவற்றை அகற்றி அதை துரிதமாக உரக் கிடங்குகளுக்கு எடுத்து செல்வதற்காக, இரண்டு டிராக்டர்களும் டிரைலருடன் விலைக்கு வாங்கும் பொருட்டு, அரசினரிடமிருந்து ரூ. 50,000-ஐ கடனாக பெற்று, அவை 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி முதல் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் நகரில் உள்ள குப்பைக் கூளங்கள் துரிதமாக அகற்றவும், அதை உரக் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்ல மிக்க வசதியாக உள்ளது. இதன் மூலம் பொது சுகாதாரப் பிரிவில் குப்பை விற்பனை மூலம் அதிக வருமானம் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இந் நகராட்சியில் குடியிருப்பு இல்லாத நகரசுத்தித் தொழிலாளர்களுக்காக, தென்கரையில் ஒவ்வொரு பகுதியும் இரண்டு வீடுகள், கொண்ட இரண்டு பகுதிகளும் வடகரையில் 3 பகுதிகளும் (மொத்தம் 10 வீடுகள் கொண்ட 5 பகுதிகள்) கட்ட மதிப்பு ரூ. 4,800 வீதம் மன்றத்தாரால் ஒப்பளிக்கப்பட்டு, தற்சமயம் தென்கரையில் இரண்டு வீடுகள் கொண்ட 2 பகுதிகள் (4 வீடுகள்) கட்டி முடிக்கப்பட்டும், மீதி 3 பகுதிகள் முடியும் தருவாயிலும் உள்ளன. இதற்கு 2 வீடுகள் கொண்ட ஒரு பகுதிக்கு மட்டும் அரசினரின் மானியமாக ரூ. 1,500 வழங்கப்பட்டுள்ளது. மீதி அரசினர் மான்யம் ரூ. 6,000 ஐயும் வழங்கக் கோரி நகராட்சிகளின் ஆய்வாளர் அவர்களுக்கு மனு செய்யப்பட்டுள்ளது. இவை போக மீதி தொகையை நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ளது.

## நாகர்கோவில் நகராட்சி

### புதிய அலுவலகக் கட்டிடத் திறப்பு விழா

"நகர் நலமே, நாட்டு நலம்" என்ற தன்மையில் பணியாற்றி வரும் நாகர்கோவில் நகராட்சி, கன்னியாகுமரி மாவட்டத்தின் முதல் நிலை நகராட்சியாகும்.

இந் நகராட்சியில் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டிடத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. 1968-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23-ம் நாள் அன்று மன்றத் தலைவர் திரு சி. கிறிஸ்தோபர் அவர்கள் தலைமையில், முன்னாள் நகர் மன்றத் தலைவர் எம். டி. அனந்தராமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவினையொட்டி நண்பகலில் ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டதுடன் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

அன்று மாலையில், இந்நகர் இந்துக் கல்லூரியின் முதல்வர் திரு ஸ்ரீதரமேனன், எம். ஏ., அவர்கள் தலைமையில், புதிய கட்டிடத்தில் அமையப்பெற்றுள்ள நகர் மன்ற மண்டபத்தில், வான்புகழ் வள்ளுவர், அமரர் லால்பகதூர் சாஸ்திரி, இந் நகர் மன்றத்தில் நற்பணிகள் பல ஆற்றிய முன்னாள் நகர் மன்றத் தலைவர்கள் ஆகியோருடைய திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டன.

## அனைத்து இந்திய முதலமைச்சர்கள் மாநாடு—தொடர் நிகழ்ச்சி.

வருங்காலத் தலைமுறையை உருவாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டோர்—

ஈந்துச் சிவந்த கரங்களை உடையோர்—

வலதுகைக் கொடுப்பதை இடதுகை அறியாவண்ணம் கொடுப்போர்—

அன்னச் சத்திரங்கள் ஆயிரம் கட்டுவதைவிட, ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்ணியம் கோடி என்பதை உணர்ந்தோர்—

தனிப்பட்ட மனிதர்கள், நிறுவனங்கள் உதவிபுரிய முன்வந்தாலன்றி ஆர்வத்துக்கும் சாதனைக்கும் இடையேயுள்ள இடைவெளியை எந்த அரசினுலும் நிறை செய்ய முடியாது என்பதை உணர்ந்த கொள்கைச் சான்ருேர் குழுமியிருந்த பல்கலைக் கழக நூற்ருண்டு விழா மண்டபத்தில் 'அந்த விழா' நடைபெற்றது.

ஆம். 11-6-1968 அன்று சென்னையில் நடைபெற்ற 'பள்ளி வளர்ச்சியில் சமுதாயத் தொண்டு' விழாக் கூட்டம், சரித்திர முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சியாகும்.

பள்ளிக்கூடங்கள் வளர்ச்சிக்குப் பொது மக்கள் அளிக்கும் உதவித் திட்டம் பற்றிய பொருட்காட்சியும் அதையொட்டி விழாக் கூட்டமும் நடைபெற்றன.

மத்திய அரசு உணவு, வேளாண்மை சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சர் திரு ஜகஜீவன்ராம் அவர்கள் பொருட்காட்சியை திறந்து வைத்தார். விழாவுக்கு தமிழக ஆளுநர் மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் தலைமை வகித்தார்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு நெடுஞ்செழியன் அவர்கள் வரவேற்ருர்.

**பத்தாண்டுகளில் தமிழகத்தின் சாதனை**

கல்வியமைச்சர் தமது வரவேற்புரையில் கடந்த பத்தாண்டுக் காலத்தில் தமிழகத்தில் பள்ளிச் சீரமைப்புக்கு மக்கள் அளித்துள்ள உதவிகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பத்தாண்டுகளில் 347 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

இத் திட்டத்தின் மூலம் ரூ. 10 கோடி மதிப்புக்கு பள்ளிச்சீரமைப்புகள் நடைபெற்றுள்ளன. இக் கூட்டத்தின் வாயிலாக மட்டும், ரூபாய் 83 லட்சத்துக்கு நன்கொடைப் பொருள்கள் கிடைத்துள்ளன என்றும் கல்வியமைச்சர் கூறினர்.

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு எம். டி. பால், சென்னை நகர மேயர் திரு அபிபுல்லா பேக், திரு எஸ். பாலகிருஷ்ண ஜோஷி, பி. ஹேமாவதி முதலியோர் பேசினர்.

மேதகு ஆளுநர் அவர்கள் தமது தலைமையுரையில், கல்விப் பிரச்னை அரசையும் தனிப்பட்ட நிறுவனங்களையும் பொறுத்ததல்ல—பொது மக்களுக்கும் கல்விப் பிரச்னையில் கடமையிருக்கிறது என்பதை தெளிவுப்படுத்தினர்.

**புகழ் வளர்க்கும் தமிழகம்**

பள்ளிச் சீரமைப்புக்கு நன்கொடை வழங்கியோர், அந்தத் தொகைகளையும் பிறவற்றையும், மேதகு ஆளுநர் மூலம் தொடர்புடைய பள்ளிகளுக்கு அளித்தனர்.

இலட்சக்கணக்கான ரூபாய்களை, பள்ளிகளுக்கு வாரி வழங்கும் வள்ளண்மையுடைவர்களால், தமிழகத்தின் வரலாற்றில் மேலும் பல புகழேடுகள் இணைக்கப்பட்டன.



இந்த விழாவில் தமிழக அமைச்சர்கள் மட்டு மின்றி, முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த பிற மாநில முதலமைச்சர்கள் (குறிப்பாக, கேரள முதலமைச்சர் திரு இ. எம். எஸ். நம்பூத்திரிபாத் அவர்கள்), உள்ளாட்சித்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழக மக்கள் கல்விக்காக நன்கொடையாக வாரி வழங்குவதைக் கண்டு அப் பெருமக்கள்




அகங்குளிர்ந்தனர். அவர்களின் விழிகள் எல்லாம், 'தமிழகம் வழி காட்டுகிறது நமக்கெல்லாம்' என்பதைச் சொல்லாமல் சொல்லின.

## வெற்றியின் இரகசியம்

பொருட்காட்சியைத் திறந்து வைத்த அமைச்சர் திரு ஜகஜீவன்ராம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''தமிழகத்தில் பகலுணவுத் திட்டமும், தொடக்கக் கல்வித் திட்டமும், வெற்றியடைந்ததுபோல, வேறெந்த மாநிலத்திலும் வெற்றியடையவில்லை.

தமிழகத்தின் வெற்றிக்கு, பொது மக்களின் ஒத்துழைப்புதான் காரணம்.

இங்கு, பள்ளி அபிவிருத்திக்கு போட்டி போட்டுக் கொண்டு நன்கொடை வழங்கியதைப் பார்த்தேன். நன்கொடைப் பொருள்களைப் பார்த்தேன். கல்வித் துறையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது.

கல்வி முறையில், ஏழைகளுக்கு ஒருவகைக் கல்வியும் பணக்காரர் குழந்தைகளுக்கு வேறு வகைக் கல்வியும் அளிக்கப்படுகிறது. இதனால் இரு வேறு வகையான குடி மக்கள் உருவாகிறார்கள். பிறகு சமூகத்தில் ஏற்றத் தாழ்வை ஒழிக்க முடியாது.

தமிழக முதலமைச்சர் பேராற்றல் மிகுந்த மனிதர். ஏற்றத் தாழ்வில்லாத சமத்துவ சமுதாயம், பேதம் ஒழிந்த சமுதாயம் காண்பதே அவரின் குறிக்கோள்.

அந்த இலட்சியத்தை அடைய, சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்று, அவர் தமது இலட்சியத்தை நோக்கி மேலும் முன்னேறுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.''

அடுத்து, பொருட்காட்சிச் சிறப்பு மலரை வெளியிட்ட மத்திய அரசு சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு ராஜாங்க அமைச்சர் திரு எம். எஸ். குருபாதசாமி அவர்கள், தமிழகத்தின் சாதனைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

## 'அஞ்சேல்' என்ற சொல்லும் 'அடையா நெடுங்கதவும்'

விழாவில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டதாவது:—

''உண்மையான விசுவாசத்துடன் ஆணும் பெண்ணும் முழுமனதுடன் எந்த ஒரு பணியில் ஈடுபட்டாலும், அந்தப் பணி எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், அதில் வெற்றியடைய முடியும் என்பதற்கு, இந்நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும். சமூகத்தின் உதவியைக் கேட்டுப் பெற கல்வியைக் காட்டிலும் சிறந்த இலட்சியம் வேறிருக்க முடியாது.

ஏசுநாதர்கூட கூறினர் ''தட்டுங்கள், திறக்கப்படும், கேளுங்கள், கொடுக்கப்படும்'' என்று.

ஆனால் தட்டுவதற்குப் பொருத்தமான கதவை தேர்ந்தெடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, கதவைத் தட்டுவதிலும், நளினம் வேண்டும். ஆனல் தமிழ்நாட்டு ஆசிரியர்கள் பொருத்தமான கதவை, பொருத்தமான நேரத்தில் தட்டுவதில் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். ஆனல், பழைய தமிழகத்தில் கதவைத் தட்டுகிற சிரமம்கூட இருந்ததில்லை. அந்தக் காலத்தில் வாரி வழங்கும் வள்ளல் ஒருவரின் வீட்டுக் கதவு எப்போதும் திறந்தே இருந்ததாம். ''அடையா நெடுங்கதவும் அஞ்சேல் என்ற சொல்லும்'' என்று அவரைப் பற்றி தமிழ் இலக்கியத்தில் வர்ணித்தார்கள். அது தமிழ்ப் பண்பாடு, அந்தப் பண்பாடு,

தொண்டில் ஈடுபடுகிறவர்களுக்கு பெருந் துணையாக இருந்து வருகிறது. எப்போதுமே வளர்ந்து வரும் சமூகத்தில் ஆசைகளும் வள ரும். ஆனால் நம்முடைய சுதந்திர நாட்டில் இன்னும் அடிப்படையான தேவைகூட பூர்த்தி செய்யப்படவில்லை.

முன்பு ஒரு காலத்தில் சமுதாயத்தின் சில பகுதி மக்கள் படிக்க முடியாது. அவர்கள் படிக்கக் கூடாது என்று ஒதுக்கி வைக்கப்பட் டிருந்தனர்.

நல்லவேளையாக அந்தக் காலம் மறைந்து விட்டது. இனி தமிழகத்தில் அப்படிப்பட்ட காலம் திரும்பி வராது.

தமிழ்நாட்டில் சமூகப் புரட்சி துவங்கிவிட் டது. நூற்றாண்டுக் காலங்களாக பழக்கத்தில் இருந்த அடக்கி வைக்கும் முறை மறைந் தது.

இப்போது எல்லோரும் படிக்கலாம். வாயில் வெள்ளிக் கரண்டியால் உணவு ஊட் டப்படும் சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை யானாலும், கலயத்தில் கஞ்சி குடிக்கும் ஏழை யின் மகன் ஆனாலும் யார் வேண்டுமானாலும் சரி இப்போது படிக்கலாம்.

'இதில் மனிதனுக்கு மனிதன் பேதமில்லை. ஒருவன் கல்வி கற்றால் சமூகம் படிக்கிறது' என்று பொருள்.

நமது இலட்சியங்களுக்கும், அவை நிறை வேற்றப்படுவதற்கும் இடையிலே வேறுபாடு இருக்கிறது. அதற்காக பெரிதிலும் பெரிதான இலட்சியங்களை வகுத்துக் கொள்வதை நாம் கைவிட வேண்டியதில்லை. லட்சியம் சிறந்ததாக உயர்ந்ததாகத்தான் இருக்க வேண்டும். நாம் அந்த இலட்சியத்தை நோக்கி முன்னேறும் போது இலட்சியத்துக்கு சிதைவு நேராமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் கல்வி வசதி பெருகியிருப்பதற்கு, அரசாங்க முயற்சி மட்டும் காரணம் அல்ல. அரசாங்கத் தால் மட்டும் அந்தப் பணியைச் செவ்வனே செய்து முடித்திருக்க இயலாது.

ஆரம்பப் பள்ளிகளில் இருந்து உயர்ந்த கல்லூரிகள் வரை உருப்பெறுவதற்கு எண் ணற்ற கொடை உள்ளம் கொண்டோர் வாரி வழங்கினர். தனிப்பட்ட இத்தகைய கொடை யாளர்களால் தமிழ் நாட்டில் கல்விக் கோயில் கள் எழுந்தன'' என்றார் முதலமைச்சர்.

மேலும் முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர் களின் பெருமைகளை எடுத்துரைத்தார்.

இந் நாட்டின் வருங்காலச் சமுதாயத்திற்கு வடிவம் அமைக்கும் அவர்களது அரும்பெரும் பணிகளை புகழ்ந்துரைத்தார்.

### அமைச்சரா? ஆசிரியரா?

விழா முடிவில் மாண்புமிகு உள்ளாட் சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் நன்றி கூறினார்.

நன்றியுரை நவிலும் பொழுதும்கூட, கையொலியைப் பலமுறை பெறமுடியும் என் பதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன் சொல்லாற்றலால் நிரூபித்தார்.

''நான் அமைச்சர் என்பதால்தான், இங்கு நன்றி கூறச் சொன்னார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் பேரறிஞர் அண்ணா




அவர்கள் ஆசிரியத் தொழிலின் பெருமையை எடுத்துரைத்த பிறகு, அமைச்சராக இருந்து நன்றி சொல்வதைவிட, ஆசிரியராக இருந்து நன்றி சொல்லுவதுதான் பெருமை என்று எண்ணி ஆசிரியராக நன்றி கூறுகிறேன்'' என்றாரோ இல்லையோ, மண்டபம் அதிரும்படி கையொலி எழும்பியது.

'பிச்சைப்புகினும் கற்கை நன்றே' என்ற தமிழ் மக்களின் பண்பாட்டை அமைச்சர் எடுத்துரைத்தார்.

மொத்தத்தில் 'பள்ளிச் சீரமைப்பில் சமூ கத்தின் ஊழியம்' எவ்வளவு முக்கியமானது என்பதை விழா விளக்கியது. அதுமட்டு மல்ல—

இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களுக்கு, எத்தனையோ துறைகளில் வழிகாட்டியாக விளங்கும் தமிழகம், பள்ளி வளர்ச்சியில் சமுதாயத்தின் பங்கை பெறுவதிலும் வழி காட்டியாக விளங்குகிறது என்பதை யார்தான் மறுக்க முடியும்?

—நமது செய்தியாளர்.

படம்: மூன்றாவது அட்டைப் பக்கத்தில் கீழே.

# மக்கள் அன்பால்.... !

இந்தியாவின் சிறந்த கிராம சேவக், கிராம சேவகி என்ற பாராட்டைப் பெற்றோரை, நாம் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளார், "பஞ்சாயத்து ராஜ்" என்ற ஆங்கில திங்கள் இதழின் செய்தியாளர்.

"நாட்டின் மிக உயரிய பரிசை தங்களின் அயரா உழைப்பாலும் தொண்டுள்ளத்தாலும் பெற்றுள்ள அவர்களோ "மக்களின் அன்பினாலேயே எங்களுக்கு இப்பாராட்டு கிடைத்துள்ளது. கிராம மக்களுக்கு நாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் ஏராளம், ஏராளம்" என்கின்றனர் அடக்கத்துடன்.

அப்படிப்பட்டவர்களை நாம் சந்திப்பது நமக்கு பெருமையும் மகிழ்ச்சியுமல்லவா ?

**கிராம நல ஊழியர்களுக்கான நாட்டின் மிக உயரிய விருதை பெற்றவர்களைச் சந்திக்கப் போகிறோம்.**

முதலில் நாம் சந்திக்கப் போகும் கிராம சேவக், திரு டி. ஜி. மராத்தே. இவர்தான் 1966–67-ம் ஆண்டின் சிறந்த கிராம சேவக்காக தேர்ந்தெடுக்கப் பட்டவர்.

மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த டி. ஜி. மராத்தே உறுதியான குரலில் சொல்கிறார் :

"எங்களுடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கிராம சேவக் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. கிராம சேவக்களின் வேலை உயர்வுக்கான வாய்ப்பு குறைவு என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் மக்களின் மகத்தான அன்பு வெள்ளம் எங்களை ஊக்குவிக்கிறது.

"சமுதாயப் பணிகளில் ஈடுபடும்பொழுது, எங்களுடைய சொந்தக் கவலைகளை, பிரச்னைகளை, லாப நட்டங்களை மறந்துவிடுகிறோம். நாட்டின் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த மக்கள் சக்திகளைத் திரட்டி உழைக்கும் பொழுது உண்டாகும் உற்சாகம் அளிக்கும் மன நிறைவு ஈடு இணையற்றது."

இவ்வாறு சொல்லிக்கொண்டு வரும்பொழுதே திரு மராத்தேயின் கண்கள் பிரகாசிக்கின்றன.

சில நிமிட நேரத்திலேயே திரு. மராத்தேயை நாம் புரிந்து கொள்கிறோம். அவர் 1966–67-ம் ஆண்டின் இந்தியாவின் சிறந்த கிராம சேவக்காக ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதற்கு நமக்கு உடனே விடை கிடைத்துவிட்டது. நாம் பெருமிதத்துடன் அவரைப் பார்க்கிறோம்.

கட்டுக்கோப்பான நல்லுடல் வாய்க்கப்பெற்ற திரு மராத்தேக்கு முப்பத்து நான்கு வயதாகிறது.

## பணியுமாம் பெருமை......!

பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியவர் மராத்தே. ஆனால் கிராம வளர்ச்சிப் பணிகளில் அவருக்கிருந்த ஈடுபாடும், ஆர்வத் துடிப்பும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் வேலையிலிருந்து விலகி, கிராம சேவக் பணியை மேற்கொள்ள செய்துவிட்டன. கிராம வளர்ச்சிப் பணிகளில் பன்னிரண்டு ஆண்டுகள் சேவை செய்தார்.

சிறந்த கிராம சேவக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அவரது வெற்றியைப் பற்றி வினவியபோது அடக்கத்தோடு அவர் சொல்கிறார் :

**"இது எனக்கு சொந்த முறையில் கிடைத்த வெற்றி அல்ல. மக்கள் அனைவருக்கும் கிடைத்த பரிசாகும்.**

அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்கள். அதன் விளைவாகவே எனக்குக் கிடைத்தது இந்தப் பரிசு".

புன்னகைப் பூத்த முகத்தோடு அவர் சொல்வதை நாம் எப்படி நம்பாமல் இருக்கமுடியும் ?

அவரைப் பற்றிக் கேட்கிறோம்: "திருமணமாகிவிட்டது. மூன்று குழந்தைகள்; அவ்வளவுதான்" என்கிறார்.

திரு மராத்தே மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள அகோலா வட்டத்தில் பணியாற்றுகிறார். அகோலாவுக்கு 1964-ம் ஆண்டில் இவர் மாற்றுதலாகி வந்தார். அகோலா வட்டம் 49,093 ஏக்கர் பரப்புடையது. மகாராஷ்டிர மாநிலத்தில், சீரடைந்துவரும் பகுதிகளில் அகோலாவும் ஒன்றாகும்.

அகோலா வட்டத்திலுள்ள ஐம்பது கிராம மக்களையும் மெதுவாக, அதே நேரத்தில் ஒழுங்காக நம்பிக்கை கொள்ளச்செய்து வெற்றி நோக்கி நடக்கத் தூண்டியவர் திரு மராத்தே. அவர்களுடைய "பழைய மனநிலையை" மாற்றியமைத்த பெருமையும் இவருக்குண்டு.

"வேளாண்மை உற்பத்திப் பெருக்கமே என்னுடைய முதல் குறிக்கோள். எனவே, மிகு விளைச்சலுக்காக இரசாயன உரங்களை அதிக அளவில் பயன்படுத்தும்படி மக்களைத் தூண்டினேன். அவர்களும் ஊக்கத்துடன் ஈடுபட்டனர். பாசன வசதியற்றிருந்த இடங்களுக்குப் பாசன வசதி பெருகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டேன்" என்கிறார் மராத்தே.

மொத்தத்தில் அகோலா வட்டத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் விளைச்சல் மிகுதியாகியிருப்பதற்கு முக்கிய காரணம் திரு மராத்தே என்றால் அது மிகை யாகாது.

அது மட்டுமல்ல. அகோலா வட்டத்தில் கோழிப் பண்ணைகள் வைப்பதற்காகவும் பெரும் முயற்சிகளை மராத்தே மேற்கொண்டார். கோழிக் குஞ்சு பொறிப் பதற்காக மட்டும் 95,005 முட்டைகளை கிராம மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார். இது கிராம மக்கள் கோழிப் பண்ணைகளை ஏற்படுத்த வழி வகுத்தது. இப்பொழுது ஏராளமான கோழிப் பண்ணைகள் அங்குள்ளன.

மேலும் அகோலா வட்டத்தில் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்த பெரும் முயற்சிகளை எடுத்துக்கொண்டு வெற்றியும் கண்டார்.

அதன் விளைவு—

அகோலா வட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமமும் கூட்டுறவு அமைப்புகளுடன் இணைந்துள்ளது.

இப்பொழுது நாம் கிராம சேவகிகளுக்கான நாட்டின் மிக உயர்ந்த விருதைப் பெற்றுள்ள திருமதி யூ. எஸ். தோராகல்லைச் சந்திக்கப்போகிறோம்.

## இலட்சியம் இவ்வளவு மட்டுமல்ல

திருமதி தோராகல்லுக்குரிய இன்னொரு பெருஞ்சிறப்பு என்ன தெரியுமா ?

திருமதி தோரா கிராம சேவகியாகப் பணியாற்றத் தொடங்கிய முதலாவது ஆண்டின் முடிவிலேயே நாட்டின் பெரும் பரிசை பெற்றிருக்கிறார்.

பெருமகிழ்ச்சியுடன் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.

"இதுதான் என்னுடைய முன்னேற்றத்தின் அடையாளம் என்று நான் கருதவில்லை. நான் மேலும் மேலும் முன்னேற விரும்புகிறேன்" என்கிறார் திருமதி தோராகல். அவருடைய தன்னம்பிக்கையை அவரது குரல் எடுத்துக் காட்டுகிறது.

கிராம வளர்ச்சிப் பணிகளுக்கு முற்றிலும் புதியவரான திருமதி தோராகல் முதலாண்டிலேயே பரிசு பெற்றுவிட்டு, நான் முன்னேறவில்லை என்று அடக்கத்துடன் கூறுவது நம்மை மகிழ்ச்சியில் திளைக்க வைக்கிறது. கணவனை இழந்து அவர் இரண்டு குழந்தைகளுக்குத் தாய் என்பது தெரிந்தவுடன் வியப்புடன் கேட்கிறோம் :

"குழந்தைகளை கவனித்துக்கொண்டும், குடும்பப் பொறுப்புகளை முழுதும் ஏற்றுக்கொண்டும் சிறந்த கிராம சேவகியாக எப்படி பணியாற்ற முடிகிறது ? நீங்கள் கிராம சேவகியாகப் பணியாற்ற புறப்பட்ட பிறகு உங்கள் குழந்தைகளை யார் கவனித்துக்கொள்கிறார்கள்"— என்று.

முகத்தில் புன்னகையைத் தவழவிட்டுக்கொண்டு திருமதி தோராகல் சொல்கிறார் : "என் குழந்தைகள் வளர்ந்தவர்கள். ஒரு குழந்தை ஆறுவதும், இன்னொரு குழந்தை ஐந்தாவதும் படிக்கிறார்கள். அவர்களை அவர்களே கவனித்துக்கொள்வார்கள்".

மேலும் திருமதி தோரா தொடர்ந்து சொல்வார் :

"என்னுடைய கணவரின் திடீர் மரணத்திற்குப் பிறகு என் குழந்தைகளை வளர்க்க ஒரு வேலையைத் தேடிக் கொள்ள விரும்பினேன். என்னுடைய குறைந்த கல்விக்கு ஏற்ப (எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருக்கிறார்.) "கிராம சேவகி" வேலையைத் தவிர வேறு சிறந்த பணி இல்லை என்ற முடிவுக்கு வந்தேன். நான் 1966 ஏப்ரல் நான்காம் நாள் கிராம சேவகி வேலையில்

[44-ம் பக்கம் பார்க்க]



# பழங்குடி மக்களுக்கு புதுவாழ்வு

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள முன்சிங்பட்டு ஊராட்சி ஆதிவாசிகள் வாழும் பகுதியாகும். இங்கு நிதி வசதி போதுமான அளவில் இல்லாதிருந்தும், பணியாற்றுவதற்கு பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள் கிடைப்பது சிரமமாக இருந்தும் ஆந்திரப் பிரதேசத்தின் மற்ற பகுதிகளோடு எந்தவித சாலே போக்குவரத்து மற்றும் செய்தி போக்குவரத்து இல்லாதிருந்தும், இந்த ஊராட்சி கல்வியில் ஆச்சரியப்படத்தக்க மிகப் பெரிய சாதனே புரிந்துள்ளது. எல்லா ஊராட்சிகளும் பொதுவாக வசூலிக்கிற நிலத் தீர்வை, கல்வி தீர்வை போன்றவைகளே இந்த ஊராட்சியிலும் பெறுவதற்கு வேண்டிய முன் நடவடிக்கைகளே இங்கு இன்னும் நிறைவேற்றப்படவில்லே. இந்தப் பகுதி பின் தங்கியதாக இருப்பதற்கு முக்கிய காரணம், இவைகள் ஆந்திரப் பிரதேசத்தின் மற்ற பகுதிகளோடு தொடர்பு இல்லாமல் இருப்பதுதான். திறமைமிக்க ஆசிரியர்கள் பொதுவாக கிராமப் புறங்களில் பணியாற்றுவதற்கு தயங்குகிருர்கள். மிகவும் பின்தங்கிய கிராமப்புறங்களில் பணியாற்றுவதற்கு இழப்பு ஊதியமும் சேவைக்கு பாராட்டும் இல்லாததால் இப்பகுதிகளில் பணியாற்றுவதற்கு திறமை மிக்கவர்கள் வருவதற்கு தயங்குகிருர்கள்.

முன்சிங்பட்டு ஊராட்சியை 1962–ம் ஆண்டு ஆரம்பிக்கும் போது ஒன்பது அரசு பள்ளிகளும் ஆறு தனியார் பள்ளி களும் நடைபெற்று வந்தது. இந்த பதினைந்து பள்ளி களும் இப்பகுதியில் வாழும் 24 ஆயிரம் மக்களின் கல்வி வசதிக்கு போதுமானதாக இருந்தது. ஆதிவாசிகள் வசிக்கும் இந்தப் பகுதி 170 சதுர மைல் பரப்பளவுள்ள காடுகளும் மலேகளும் சூழ்ந்த பிரதேசம். இங்குள்ள 22 சட்ட பூர்வமான ஊராட்சிகள் இம்மலேப் பிரதேசத்தில் பரவலாக அமைந்துள்ளது.

முன்சிங்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் தலேவரான திருமட்டம் சிட்டிபாடல் என்பவர் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேலும் பதினைந்து பள்ளிகளே இவ் வூராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பகுதிகளில் திறப்பதற்கு தீவிர முயற்சி எடுத்துக்கொண்டார். கிடைக்கக்கூடிய வசதிகளே ஆண்டுதோறும் கல்விக்கு செல விட்டதால் அதிகப்படி செலவு ஏற்பட்டு மற்ற அபிவிருத்தி வேலேகளுக்கு தடங்கல் ஏற்பட்டன. சமூகத்திலுள்ள மக்கள் அனேவரும் எழுத்தறிவு உள்ளவர்களாகவும் கற்றவர் களாகவும் ஆகும்வரை எந்தவித சாதனேயையும் ஏற்படுத்த முடியாது என்பதைக் கருத்தில் கொண்டு கல்விக்கு முதல் முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும். ‘ கருப்பு கொண்டா” என்ற இடத்தில் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொடக்க பள்ளியையும் சேர்த்து மொத்தம் 31 பள்ளிகள் இங்கு இருக்கின்றன. இன்னும் மூன்று ஊராட்சிகளில் மட்டும்தான் தொடக்கப்பள்ளி ஆரம்பிக்க வேண்டியதிருக்கிறது. நவீன நாகரிக மக்களோடு இந்த ஊராட்சி மக்களும் சரி சமமாக இருப்பதற்காக ஜோலாபட்டு என்ற இடத்திலுள்ள தொடக்கப்பள்ளி உயர்நிலேப்பள்ளியாக்கப்பட்டது. இதே மாதிரி கோட்டாவில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியும் உயர்தொடக்கப்பள்ளியாக மாற்றப்பட்டு 1966–67-இல்

ஆறும் படிவம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இரண்டு உயர் தொடக்கப் பள்ளிகளும், மற்றும் "கிலகாடா" என்ற இடத்தில் ஏற்கனவே உள்ள பள்ளியும் இப்பகுதியில் உள்ள மக்களின் அறியாமையைப் போக்கும் என்பது உறுதி.

மாணவர்களுக்கு இலவசமாக சாப்பாடு போடும் திட்டம் வெற்றிகரமாக நடந்து வருகிறது. 'கிலகாடா' என்ற இடத்தில் 40 மாணவர்களுக்கு இலவசமாக அரசு உணவு விடுதி ஒன்றும் இதேபோல 'சூசான் கோட்டா'' என்ற இடத்தில் உள்ள உணவு விடுதியும் ஆதிவாசி மாணவர்களுக்காக இயங்கி வருகிறது. கடந்த 15 ஆண்டுகளில் இந்த உணவு விடுதி 50 ஆசிரியர்களை உருவாக்குவதற்கு காரணமாக இருந்திருக்கிறது. முன்சிங் என்ற இடத்தில் ஆசிரம முறையில் அமைந்த பள்ளி ஒன்றையும், ஜோலாபட்டு என்ற இடத்தில் இலவச விடுதி ஒன்றையும் ஏற்படுத்துவதற்கு இந்த ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளார். இந்த பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டால் மாணவர்களின் இடவசதி பிரச்சனைக்கு பரிகாரமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. 'கேர்'' நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மதிய உணவு திட்டத்தை நிறைவேற்றினால் அதிகம் பேர் பள்ளிக்கு வருவார்கள் என்ற அடிப்படையில், இத் திட்டம் செயல்படவிருக்கிறது. 600 மாணவர்கள் பயனடையும்படி 17 இடங்களில் பால் விநியோகிக்கப் படுகிறது. பாக்கியுள்ள 14 பள்ளிகளுக்கு மதிய உணவு கொடுக்கப்படவேண்டும் என்ற மக்களின் கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும் என்று தெரிகிறது.

விசாகபட்டிணம் மாவட்ட ஆட்சித் தலைவரான திரு. அபிட்குசைன் என்பவரின் முயற்சியினால் ஜோலாபட்டில் ஒரு உயர்நிலைப்பள்ளி ஏற்பட்டது. இப்பள்ளி இப்பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. இப் பள்ளிக்கு 40 மைல் சுற்றளவில் உள்ள மாணவர்கள் உயர் கல்விக்காக வேறு பள்ளிக்குச் செல்லத் தேவையில்லை. பலகாலமாக பின்தங்கிய நிலையில் இருந்த மக்களை விழிப்படையச் செய்து அவர்களுக்கு கல்வியறிவு ஏற்படுவதற்கு முன்சிங்பட்டு ஊராட்சி சிறந்த பணியாற்றியுள்ளது. இவர்களின் ஏழ்மை நிலைக்கு காரணம் அறியாமையே ஆகும். அறியாமையை ஒழித்ததினால், முன்சிங்பட்டில் வசிக்கும் ஆதிவாசிகளுக்கு விடிவுகாலம் ஏற்பட்டுவிட்டதென்று உறுதியாகச் சொல்லலாம்.

மக்கள் அன்பால்—42-ம் பக்கத் தொடர்ச்சி.

அமர்ந்தேன். என்னுடைய இயற்கையான குணம், ஏற்றுக்கொண்ட பொறுப்புகள் அனைத்தையும் இயன்ற வகையில் திறம்படச் செய்து முடிப்பதுதான்''.

'' உங்கள் வெற்றியின் இரகசியம் இதுதானா ?''— நாம் கேட்கிறோம்.

'' எனக்குத் தெரியாது ''—என்று சிரித்துக் கொண்டே பதில் சொல்கிறார் திருமதி தோராகல்.

இவர் பணியாற்றும் ஜாம்கண்டி வட்டாரத்திலுள்ள மக்கள் அனைவரும் இவரை அறிவார்கள். திருமதி தோராகல்லுக்கு மராத்தி, கன்னடம், இந்தி ஆகிய மொழிகள் தெரியும்.

'' பல்வேறு மொழி பேசும் மக்களிடையே பணியாற்றும்பொழுது மூன்று மொழிகள் எனக்குத் தெரிந்திருப்பது மிகவும் நன்மையாக இருக்கிறது '' என்கிறார் திருமதி தோராகல்.

திருமதி தோராகல் ஓராண்டுக் காலத்திற்குள் ஆற்றியுள்ள பணிகளின் பட்டியல் நீளமானது.

பெண்களிடம் வீட்டுத் தோட்டம் போடும்படி வலியுறுத்தி 29 வீட்டுத் தோட்டங்களைப் போடவைத்திருக்கிறார். உரக் குழிகள் கோழிப் பண்ணைகள் போன்றவற்றை ஏற்படுத்த ஊக்குவித்திருக்கிறார். வீட்டுச் சுற்றுப் புறங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வது, கழிவுநீர் வீட்டின் பக்கம் தேங்காமல் பார்த்துக்கொள்ளுவது, சத்துள்ள உணவுப் பொருள்களை உட்கொள்வது, தச்சு வேலை முதலியவற்றில் கிராமப் பெண்களுக்கு ஆர்வம் ஏற்படும்படி செய்வது ஆகிய பணிகளை ஆற்றியுள்ளார் திருமதி தோராகல்.

இப்படிப் பற்பல பணிகளை ஆர்வத்துடன் செய்து முடித்திருக்கிறார் அவர்.

அவர் பணியாற்றும் வட்டாரத்தில் கிராமத்திற்கு ஒன்றாக நான்கு மகளிர் மன்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

'' சில நேரங்களில் களைப்புடன் நான் வீடு திரும்புவேன். அப்பொழுது என்னுடைய குழந்தைகள் நன்றாக தூங்கிக்கொண்டிருப்பார்கள். வேலையின் காரணமாக நான் அவர்கள் விழித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் வந்து பேச முடிவதில்லை. மனமும் வாட்டமாகவே இருக்கும்.

'' அதே நேரத்தில் என் கண்முன்னே ஊமையாக உள்ள சகோதரிகள் முகமும் அழும் அவர்களுடைய குழந்தைகள் முகங்களும் தெரியும். மனதைத் தேற்றிக் கொள்வேன். மறுநாள் வழக்கம்போல எனது பணியைத் தொடர புறப்பட்டுவிடுவேன்''.

புனிதமான கடமையில் ஈடுபட்டிருக்கும் அவருடைய பொறுப்புள்ள பேச்சு, நம் நெஞ்சில் நீங்கா இடம் பெறுகிறது. நாம் விடைபெற்றுக்கொள்கிறோம்.

மக்களின் அன்புப் பிணைப்புக்கு ஆளானவர்கள் கிராம நலப் பணியாளர்கள். அவர்களுடைய அயரா உழைப்பின் வெற்றிக்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்று மக்கள் அன்பும் ஆதரவும் என்பதை யார் மறுக்க முடியும் ?

இலட்சியச் சின்னம்—19-ம் பக்கத் தொடர்ச்சி.

முறைகளை கையாளுதல், இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல், இரசாயன உரங்கள் கிடைக்காத பொழுது கலப்பு உரங்களைப் பயன்படுத்தல் போன்ற முறைகளை விவசாயிகளிடம் புகுத்தியது, நாடிபுடி ஊராட்சி மன்றம் தான். விவசாயிகள் பழத்தோட்டங்களையும், புதிய காய்கறி வகைகளையும் உற்பத்தி செய்யும் நாடிபுடி. ஊராட்சி முயற்சி எடுத்தது.

### முயற்சியின் பயன்

பெரும் முயற்சி செய்ததால் 1962-ம் ஆண்டில் விவசாயத்திற்காக மின்சக்தி கொண்டுவரப்பட்டது.

அது முதல் நாடிபுடி வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கியது. தெருவெல்லம் மின் விளக்குகள் எரியத் தொடங்கின. நிலத்தின் அடியிலுள்ள நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த நாடிபுடி விவசாயிகள் முன்வந்தனர். இப்பொழுது நாடிபுடியில் 15 மின்சார மோட்டார்கள், 25 வடிமுனை குழாய்கள், 15 ஆயில் இஞ்சின்கள் வேலை செய்கின்றன.

நாடிபுடி ஊராட்சி தன்னுடைய திட்டங்களில் முக்கியத்துவம் அளித்து சுகாதார பணிகளை செய்திருக்கிறது. இப்பொழுது 19 நவீன கழிவுக் கூடங்கள் அங்கு இருக்கின்றன.

நாடிபுடியின் பெரும் பிரச்னையாக இருந்தது குடிநீர் பிரச்னையாகும். ஊராட்சி மன்றம் இப்பிரச்னையில் தீர்வு காண, ரூபாய் 60,000 செலவில் திட்டம் வகுத்து செயல்படுத்தி வருகிறது. தெருவெல்லாம் குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாடிபுடியில் மகப்பேறு மருத்துவ மனையும் ஒன்றுள்ளது. இங்கு இலவசமாக மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது.

### சீரிய முறையில் சாலைகள்

நாடிபுடி ஊராட்சி மன்றம் கட்டாய தொடக்க கல்வி அமுல்படுத்தப்படுகிறது. இவ்வூரில் உள்ள எல்லா குழந்தைகளுக்கும் ஐந்து தொடக்க பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளுக்காக ரூபாய் இருபத்தைந்தாயிரம் செலவில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. தொடக்கப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 330 ஆகும்.

நாடிபுடியின் சாலைகள் சீரிய முறையில் செப்பனிடப்பட்டு பாதுகாத்து வரப்படுகின்றன. போக்குவரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சாலைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

நாடிபுடியில் ஒரு மகளிர் மன்றமும் இளைஞர் மன்றமும் உள்ளன. ஊராட்சி மன்றம் நூல் நிலையம் ஒன்றினையும் எற்படுத்தியுள்ளது. ஊராட்சி எற்படுத்திய சிறு சேமிபபுத் திட்டத்தில் 100 பேர் பங்கெடுத்துக் கொண்டனர். ரூபாய் 5,000 முதலீடு செய்துள்ளனர்.

### ஒழுங்காக வரி செலுத்தும் கிராமம்

நாடிபுடியிலுள்ள பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களின் பொருளாதார நிலையும் மேம்பட்டு தான் உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் சேரி பகுதியிலும் மின்விளக்கு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

திரு நெக்கண்டி வேங்கட ஜனார்த்தனராவ் 1961-ம் ஆண்டிலிருந்து இவ்வூராட்சியின் தலைவராக இருந்து வருகிறார். இவர் ஒரு மனதாகவும் தேர்ந்தெடுக்கபபட்டவர் ஆவர்.

இவ்வூரில் 1961-ம் ஆண்டு முதல் ஊராட்சி வரிகள் ஒழுங்காக வரி வசூலித்து வருகிறது.

நாடிபுடியில் சாதி பாகுபாடுகளோ, குழுச் சண்டைகளோ கிடையாது.

ஆமாம், ஊராட்சி மன்றங்கள் ஒரு சீரிய எடுத்துக்காட்டாக் விளங்கும் நாடிபுடி ஊராட்சி மன்றம் ஓர் இலட்சியச் சின்னம் தான்!

---

"பஞ்சாயத்து ராஜ்", இதழிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 19, 34, 35, 41 முதல் 45 வரை.

**Articles reproduced from 'Panchayati Raj' on pages : 19, 34, 35 and from 41 to 45.**

கிராம நலம் பகுதி-2
GRAMANALAM PART-2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள் விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

—o—

## ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை மாற்றுதல்—பின்பற்றப்படவேண்டிய விதிகள்.

## Establishment—Panchayat Union Elementary School Teachers—Transfers—Rules to be followed by Adhoc body.

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை மாற்றுவது பற்றி அரசு அவ்வப்போது விளக்க ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதற்கென்றே அமைக்கப்பட்டிருந்த குழுக்களின் நடவடிக்கைகளை கடந்த ஈராண்டுகளாக கவனித்து வந்தபின், இது குறித்து சீரான நடைமுறையொன்றை பின்பற்ற வேண்டுமென்பதற்கென, கிராம வளர்ச்சி இயக்குநர் விதிகளின் வரைவு ஒன்றை அரசிற்கு சமர்ப்பித்துள்ளார். கிராம வளர்ச்சி இயக்குநர் சமர்ப்பித்த வரைவு விதிகளை அரசு பரிசீலனை செய்து, அவற்றை இவ்வாணையின் இணைப்பிலுள்ளவாறு அரசு வெளியிடுகிறது. ஊராட்சி ஒன்றியங்களின் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை இடமாற்றும் வேளைகளில், அவ்விதிகள் பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

### விதிகள்

1. குறுகிய தலைப்பு.—"ஊராட்சி ஒன்றிய குழுக்களின் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை மாற்றுதல் பற்றிய விதிகள், 1968" என்று இவ்விதிகள், அழைக்கப்பெறும்.

2. வரையறை.—இவ் விதிகளில், பொருள் அல்லது சந்தர்ப்பத்திற்கு வேறு பொருள் இருந்தாலன்றி :

(அ) "தனிப்பட்ட குழு" என்பது, கீழ்க்கண்ட விதி 6-ல் ஏற்படுத்தப்பட்டுள்ள குழுவைக் குறிக்கும்.

(ஆ) "ஆண்டு" என்பது, கல்வி நிறுவனங்களில் பின்பற்றப்படும் கல்வி ஆண்டைக் குறிக்கும்.

3. விதிகளை செயல்படுத்துதல்.—ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் (உயர்தொடக்கப் பள்ளிகளையும் சேர்த்து) நிலையான, மாற்று நிலையிலுள்ள (Officiating) அல்லது தற்காலிக ஆசிரியர்கள் அனைவருக்கும் இவ்விதிகள் பொருந்தும்.

4. இடமாற்றுதல் ஆணைகளை பிறப்பிக்கும் அதிகாரி.—ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் பெற்ற ஊராட்சி ஒன்றிய ஆணையாளரே, அவரது கட்டுப்பாட்டிலுள்ள ஆசிரியர்களையும் மாற்றுவதற்கு அதிகாரம் படைத்தவராவர் ஆனால் இந்த அதிகாரம் விதிகள் 5, 7, 8 மற்றும் 9 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், வரைமுறைகளுக்கு உட்பட்டதாகும்.

5. ஆசிரியர்களை மாற்றுவதில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை—

(அ) இட மாற்றங்களைக் கோரி எழுதப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கே முகவரியிட்டு அனுப்பப்படவேண்டும். இதற்கென ஒரு பதிவேட்டை ஏற்படுத்தி, அவ்விண்ணப்பங்களை அதில் உடனே பதிவு செய்தல் வேண்டும்.

(ஆ) ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் அனைத்தின் விவரங்களையும், நிர்வாக வசதியை யொட்டி இடமாற்றங்கள் செய்ய விரும்பும் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கோரிக்கைகளையும், இவ்விதிகளின் இணைப்பிலுள்ள அறிக்கையில் எழுதி, அவற்றின் நகலை, தனிப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும், கூட்டத்தின் தொடக்கத்தில் அளிக்கவேண்டும்.

6. தனிப்பட்ட குழுவின் அமைப்பு.—

(அ) மேற்காணும் விதி 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட குழுவில், கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாவார்கள்:—

(1) அவ்வொன்றியத்தை உள்ளடக்கிய கோட்டத்தின், வருவாய்க் கோட்ட அதிகாரி.

(2) ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைவர் (ஏர்க்காடு, வால்பாறை வட்டாரங்கள் தவிர).

(3) அப்பகுதிக்குரிய, பள்ளிகளின் துணை ஆய்வாளர் அல்லது பள்ளிகளின் ஆய்வாளர்.

(4) அத்தொகுதிக்குரிய சட்ட மன்ற உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள்.

(ஆ) இத்தனிப்பட்ட குழுவிற்கு, வருவாய்க் கோட்ட அதிகாரி தலைவராகவும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் உறுப்பினர்-செயலாளராகவும் இருப்பார்கள்.

7. தனிப்பட்ட குழுவின் செயல் முறைகள், நடவடிக்கைகள்.—

(அ) இத் தனிப்பட்ட குழு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் நிர்ணயிக்கும் காலத்தில் கூடி, ஆண்டு தொடக்கத்திற்கு முன்னரேயே மாற்றங்களைக் குறித்து முடிவெடுக்கும். இக்குழுவின் கூட்டம், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறுதல் வேண்டும். சாதாரணமாக, வருவாய்க் கோட்ட அதிகாரி, ஒரு வட்டாரத்தில் முற்பகலில் ஒரு கூட்டத்தையும், அதை யடுத்த வட்டாரத்தில் அதே நாள் பிற்பகல் இன்னொரு கூட்டத்தையும் கூட்டுவார். எக்காரணத்தை முன்னிட்டும் ஒரே நாளில் இரண்டு கூட்டங்களுக்கு மேல் நடைபெறக் கூடாது.

(ஆ) வருவாய்க் கோட்ட அதிகாரியின் வருகை இல்லாமல், எந்த கூட்டமும் நடைபெறக் கூடாது.

(இ) உறுப்பினர்கள் அனைவருக்கும் குறைந்தது மூன்று முழு நாட்கள் அறிவிப்புத் தரவேண்டும்.

(ஈ) கூட்டத்திற்கு மூன்று பேர் குறைந்த அளவாக வருகை தந்திருத்தல் வேண்டும்.

(உ) இந்த தனிப்பட்டக் குழு, விதி 5-ன்படி குழுவில் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களையும், கோரிக்கைகளையும் பரிசீலித்து முடிவெடுக்கும்; அம்முடிவுகள் எழுத்தில் இருக்கவேண்டும்.

(ஊ) கூட்டத்தின் செயல்முறை குறிப்புகளில் தலைவரும், வருகை தந்துள்ள உறுப்பினர்களும் கையெழுத்திடுதல் வேண்டும்.

(எ) இத்தனிப்பட்ட குழுவின் செயல்முறைகள், அடங்கிய ஆவணங்கள், ஆணையாளரின் பாதுகாப்பில் இருக்கும்.

(ஏ) தனிப்பட்டக் குழுவின் முடிவுகளை எவ்வித மாற்றமுமின்றி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் நிறைவேற்றி வைக்கப்படுதல் வேண்டும்.

(ஐ) முடிவிற்கு வருவதில், உறுப்பினர்களிடையே உடன்பாடு இல்லையெனில், இத்தனிப்பட்டக் குழுவிற்குரிய தலைவரின் (அதாவது வருவாய்க் கோட்ட அதிகாரி) தீர்மானமே, முடிவானது. ஆனால் அத்தீர்மானம் விதி 10-ல் அடங்கியுள்ள விதித்துறைகளுக்கு (Provision) உட்பட்டதாகும்.

**8. ஊராட்சி ஒன்றிய பகுதிக்குள் ஆசிரியர்களை மாற்றுவதற்குள்ள வரம்புகள்:—**

ஆண்டு ஆரம்பித்தபிறகு, இட மாற்றத்தைக் குறித்து எவ்வித விண்ணப்பத்தையோ, கோரிக்கையையோ சாதாரணமாக வரவேற்கக் கூடாது.

ஆனால் ஆண்டு நடப்பில், சில விலக்கான நேர்வுகளில் கோரிக்கைகளை பரிசீலிக்க நேரிட்டால், அவற்றை வருவாய்க் கோட்ட அதிகாரி வாயிலாக, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அனுப்பவேண்டும். அக்கோரிக்கையின் நகல் ஒன்றை ஊராட்சி ஒன்றியத் தலைவருக்குத் தரவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலை பெற்ற பின்னரே இடமாற்றத்தை செயல்படுத்தவேண்டும்.

இரு ஆசிரியர்கள் ஒருவருக்கொருவர் உடன்பட்டு, எழுத்து மூலம் முறையிட்டுக்கொண்டு ஒன்றிய வரம்பிற்குள்ளேயே இடமாற்றத்தைக் கோரின், அதை அனுமதிக்கவேண்டும். அதை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. ஆனால் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவருடைய முன் அனுமதியுடனேயே அந்த இடமாற்றங்களைச் செய்ய வேண்டும்.

(ஆ) இருவர் உடன்பட்டுக் கோரும் இடமாற்றத்தை, ஓராண்டில் ஒரு முறைக்கு மேல் ஒருவருக்கு அளிக்கக் கூடாது.

(இ) உடன்பட்டு செய்யும் இடமாற்றங்களோ, மற்ற எவ்வகை இடமாற்றங்களோ, ஆண்டின் இறுதியில் தேர்வு காலங்களில் நிகழக்கூடாது.

(ஈ) ஒரு பள்ளியில் குறைந்தது மூன்றாண்டுகள் பணி செய்வதற்கு முன்னரேயே, அவ்வாசிரியர்/ஆசிரியையை அப்பள்ளியிலிருந்து மாற்றக் கூடாது.

ஆனால், ஓர் ஆசிரியர் அப்பள்ளியில் மூன்றாண்டுகள் பணியை முடிக்காத நிலையில், நிர்வாக அடிப்படையில் அவரை மாற்றவேண்டியிருப்பின், தனிப்பட்டக் குழுவானது, அம்மாற்றத்திற்குரிய காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்யவேண்டும்.

மேலும் மூன்றாண்டுகளுக்கு குறைவாக ஒரு பள்ளியில் சேவை செய்திருந்த ஓர் ஆசிரியர் அல்லது ஆசிரியை, தன்னுடைய சொந்த விருப்பின்மீது மாற்றங்கள் கோரினால், அதுபற்றி தனிப்பட்டக் குழு தீவிர பரிசீலித்து, எழுத்து மூலம் பதிவு செய்த பின்னரே அவ்வேண்டுகோளுக்கு இணங்கலாம்.

9. ஓர் ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஒன்றியத்திற்கும், ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கும் இடமாற்றங்கள் கோரும் விண்ணப்பங்களை பரிசீலிப்பது இத்தனிப்பட்டக் குழுவின் வரம்பிற்கு புறம்பானதாகும்.

**10. ஆணையை மாற்றும் அதிகாரம்.**—இவ்விதிகளை செயல்படுத்துதல் மற்றும் இவ்விதிகளைப் பற்றிய பொதுவான அல்லது சிறப்பான ஆணைகளை பிறப்பிப்பதற்கும், தனிப்பட்டக் குழுவின் முடிவுகள் பற்றிய ஆவணங்களை தருவித்து அதன்மீது தகுந்த ஆணைகள் பிறப்பிப்பதற்கும் அல்லது அவற்றின்மீது விசாரணை நடத்த எந்த ஒருவருக்கு அதிகாரம் அளிக்கவும், அரசிற்கு அதிகாரம் உண்டு.

## இணைப்பு

| வரிசை எண். | ஆசிரியரின் பெயர். | இப்போதுள்ள பள்ளியில் பள்ளியின் பெயர். | இப்போதுள்ள பள்ளியில் சேவையின் காலம். | மாற்றத்தைக் கோரும் இடம் அல்லது மாற்ற இருக்கும் கோரிக்கை. | தனிப்பட்ட குழுவின் முடிவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 18—5—1968 அரசு ஆணை எண் 968-ன் சுருக்கம்.)

## மக்கள் தொகைக் கணக்கெடுப்பு—ஊராட்சி ஒன்றியவாரியான மக்கள் தொகை கணக்கு

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **செங்கல்பட்டு (வடக்கு) வளர்ச்சி மாவட்டம்** | |
| 1 | திருவள்ளூர் | 57,792 |
| 2 | கடம்பத்தூர் | 60,602 |
| 3 | பூண்டி | 65,734 |
| 4 | பள்ளிப்பட்டு | 57,755 |
| 5 | ஊத்துககோட்டை | 66,529 |
| 6 | மீஞ்சூர் | 91,219 |
| 7 | பறங்கிமலை | 114,226 |
| 8 | கும்மிடிபூண்டி | 86,704 |
| 9 | வில்லிவாககம் | 107,800 |
| 10 | ராமகிருஷ்ணராஜு-பேட்டை | 51,052 |
| 11 | சோழவரம் | 52,875 |
| 12 | திருவாலங்காடு | 53,465 |
| 13 | மாதவரம் | 58,331 |
| 14 | திருத்தணி | 51,542 |
| | | 975,628 |

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **செங்கல்பட்டு (தெற்கு) வளர்ச்சி மாவட்டம்** | |
| 1 | திருக்கழுக்குன்றம் .. | 85,130 |
| 2 | ஸ்ரீ பெரும்புதூர் .. | 62,488 |
| 3 | பூவிருந்தவல்லி .. | 95,067 |
| 4 | மதுராந்தகம் .. | 90,896 |
| 5 | உத்திரமேரூர் .. | 92,773 |
| 6 | காட்டன்குளத்தூர் .. | 69,505 |
| 7 | குன்றத்தூர் (படப்பை) .. | 78 172 |
| 8 | காஞ்சிபுரம் .. | 59,325 |
| 9 | அச்சரப்பாக்கம் .. | 70,806 |
| 10 | வாலாஜாபாத் .. | 77,255 |
| 11 | திருப்போரூர் .. | 65,465 |
| 12 | சித்தாமூர் .. | 70,110 |
| 13 | லத்தூர் .. | 51,815 |
| | | 968,807 |
| | **கோயம்புத்தூர் (கிழக்கு)** | |
| 1 | சத்தியமங்களம் .. | 57,876 |
| 2 | கோபிச்செட்டிபாளையம் .. | 79,803 |
| 3 | பெருந்துறை .. | 83,701 |

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | கோயம்புத்தூர் (கிழக்கு)—தொடர்ச்சி. | |
| 4 | ஈரோடு .. | 72,716 |
| 5 | கொடுமுடி .. | 71,967 |
| 6 | மொடக்குறிச்சி .. | 87,075 |
| 7 | தூக்கநாயக்கன்பாளையம் .. | 52,937 |
| 8 | காங்கேயம் .. | 54,343 |
| 9 | வெள்ளைக்கோயில் .. | 54,854 |
| 10 | குண்டடம் .. | 61,314 |
| 11 | பவானி .. | 95,085 |
| 12 | தாராபுரம் .. | 66,648 |
| 13 | பவானி சாகர் .. | 66,157 |
| 14 | தாளவாடி .. | 28,953 |
| 15 | மூலனூர் .. | 62,697 |
| 16 | அம்மாபேட்டை .. | 85,699 |
| 17 | அந்தியூர் .. | 71,716 |
| 18 | ஊத்துக்குளி .. | 58,899 |
| 19 | நம்பியூர் .. | 89,492 |
| 20 | சென்னிமலை .. | 63,417 |
| | | 1,365,349 |

—தொடரும்

**எதிர்ப்பக்கம் :**

மேலே:—சமுதாய நலத் திட்டம், கூட்டுறவு பற்றிய மாநில முதலமைச்சர்கள் மாநாட்டையொட்டி, சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற, கண்காட்சியில், மத்திய அரசு உணவு-வேளாண்மை அமைச்சர் திரு ஜகஜீவன்ராம், தமிழக முதலமைச்சர், உணவு—வருவாய் அமைச்சர், உள்ளாட்சி அமைச்சர் ஆகியோர்.

கீழே:—சென்னையில் நடைபெற்ற 'பள்ளிச் சீரமைப்பில் சமுதாயத்தின் உதவி' பற்றிய மாநாட்டை ஒட்டி நடைபெற்ற பொருட்காட்சியில், சென்னை மாநகராட்சி மாணவர்களுக்கு இலவசமாக வழங்கும் கற்பலகைகள் (Slates), இவ்வாறு அழகுற வீடுபோல் அமைக்கப்பட்டுள்ளது. கட்டுரை 38-ம் பக்கம்.

## இந்த இதழில்...


பக்கம்

தமிழகத்தின் தலைநகரில்— .. .. 1
முதல் அமைச்சர்கள் மாநாடு

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து "— 6
திரு மு. ரா. பெருமாள் முதலியார்

வள்ளுவர் காட்டும் வழி— .. .. 9
திரு ந. பாண்டியன்

திருவள்ளுவர் ஆண்டு—2000 .. .. 11
சிறுவை நச்சினார்க்கினியன்

" இனியொரு விதி செய்வோம் " .. .. 27

கல்வெட்டுகள் கூறும் வரலாறு— .. .. 31
திரு இரா. நாகசாமி எம். ஏ.


## அடுத்த இதழில்...

' புதியசேனை ' ஆனால் நல்லசேனை '—
சீரணிப் பற்றிய கட்டுரை.

எத்தனை கோடி வெற்றி—
இடைப்பாடி ஊராட்சி ஒன்றிய வெற்றிகள் பற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பாராட்டு.

கருத்தைக் கவர்ந்த கழுகுமலை—
தமிழகத்தின் சிறந்த கிராமம் பற்றிய சிறப்புக் கட்டுரை (படங்களுடன்).

காஞ்சித் தலைநகர் திருவிழா—
செங்கல்பட்டு மாவட்ட தலைநகர் காஞ்சிபுரத்திற்கு மாற்றியது பற்றிய செய்தித் தொகுப்பு.

மிகுவிளைச்சல் உணவு தானியங்கள் பற்றி திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகவிருக்கும் சிறப்பு கவிய ரங்கத்துக்கான புதிய ஏற்பாடு விவரம்.


ஆசிரியக் குழுத் தலைவர் :
திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு ஆர். சுவாமிநாதன், ஐ. ஏ. எஸ்.
(பொறுப்பு)
ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9. Chairman of the Editorial Committe: Thiru T. A. S. Balakrishnan, I.A.S.,
Wrapper printed at Vadapalani Press, Madras-26.




SLATES



REGD. No M. 7277

© தமிழக அரசு 1968

# அளவோடு பெற்று
# வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம்
குடும்ப நல திட்டத்தின் சின்னம்

## குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்